அடமானக்
என் பணி கடன் செய்து கொடுப்பதே!
CENTUM
Optima Mortgages Inc.
Das Narayanasamy AMP
Mortgage Specialist
Cell: 416-543-6614
Business: 416-759-1818, Fax: 416-299-0789
E-mail: das.narayanasamy@centumveedu.com
www.centumveedu.com

தாய் வீடு
THAIVEEDU உள்ளும் புறமும் ஏப்பிரல் 2007

வீடு வாங்க, விற்க மற்றும் income tax, mortgage சம்பந்தமான சகல ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்
HOMELIFE HIGHER STANDARDS
T: 416.264.0101
C: 416.568.4301
SELVA VETTYVEL
Broker of Record
HomeLife Future Realty Inc. Brokerage
262 Markham Road Scarborough, On M1J 3C5

# பெற்றோல் விலைக்கும் சோளத்துக்கும் முடிச்சு

அமெரிக்காவில் சோளப் பயிர்ச்செய்கை அதிகமாகியுள்ளது. அதுவும் 1944 இற்குப் பிறகு அமெரிக்காவில் அதிகளவு சோளம் பயிர்செய்யப்பட்டிருக்கிறது. சோளப்பயிர்ச் செய்கை 15 விழுக்காட்டால் அதிகரித்திருப் பதாக அமெரிக்காவின் விவசாயத்திணைக் களம் தெரிவித்திருக்கிறது. அதாவது 90 மில்லியன் ஏக்கர்கள் சோளம் பயிர்செய்யப் பட்டிருக்கிறது.

தற்போது எத்தனோல் என்னும் எரிபொருள் மாற்றாக அறிமுகப் படுத்தபபட்டிருப்பதைச் சிலர் அறிந்திருப்போம். எத்தனோலை இயற்கைத் தானியங்களில் இருந்து வடித்து எடுக்கலாம். அதற்குச் சிறந்த பயிர் சோளமாக இருக்கிறது.

இந்நிலையில் ஏழை மக்களின் உணவுக் காகப் பயிரிடப்படும் சோளம் பசியை மாற்றுவதற்குப் பதிலாக பணமுள்ளவர் களின் வண்டிக்கு பசியாற்றவிருக்கிறது.

அதனால் சோளத்தின் விலை வரலாற்றில் இல்லாதவாறு அதிகரித்திருக்கிறது. ஏழை மக்களின் எளிய உணவு விலையேறிப் போய்விட்டது. ஒரு புசலுக்கு 4 டொலர்கள் ஒரு ஆண்டில் விலை அதிகரித்திருக்கிறது.

ஆனால் இவ்வாறு ஓர் உணவை அதுவும் குறிப்பாக ஏழ்மையில் வாடும் பல நாடுகளின் மக்களின் அடிப்படை உணவை பொது எரிபொருளாக மாற்றும் திட்டம் அமெரிக்க அரசின் வழக்கமான வெளி நாட்டுக் கொள்கையில் ஒன்றுதான் என்று கியூபாவின் அதிபர் பிடல் காஸ்ரோ குற்றம் சாட்டியிருக்கிறார்.




அவர் சொல்லாவிடிலும் உண்மையில் உலகளாவிய எழைமக்களின் வயிறு வாடப் போவது உண்மை என்பது வெளிப்படை. மறைக்கப்படடு அல்லது மறைவாகச் சேமிக்கப் பட்டிருக்கும் அமெரிக்காவின் எண்ணைவளங்களும் மாற்று எரிபொருள் கண்டுபிடிப்புக்களும் எங்கு போய்விட்டன என்ற கேள்வி எழுகிறது.
சோளப் பயிரச்செய்கைக்கு நீர் பயன் படுத்தல் அதிகரித்து வறட்சி அதிகமாகும். சோளம் போன்றன கால்நடைத் தீவனங் களாக்கப்பட்டு புரதம் உருவாக்கப்படுவது தடுக்கப்படும்.

ஏழைநாடுகளையும் அதன் ஏழை மக்களை யும் உணவு கூட இல்லாமல் பட்டினியால் சாகடிக்க முன்னேற்பாடு நடக்கிறது.

Guna Selliah
Life Insurance Broker
416.371.7776

THE LAW OFFICE OF
GaryAnandasangaree
Tel: 416 321 1100 Fax: 416 321 1107
gary@galaw.ca

BUYING, SELLING,
INVESTING & MORTGAGE NEEDS CALL
SUN SANMUGATHAS
Broker & Manager
One stop shopping for all your mortgage & realestate needs.
Buying - Selling - Investing
PROPERTY MAX
Realty Inc. Brokerage
Dir: 416.948.0693
Bus: 416.291.3000
PMCI PROPERTY MORTGAGE CANADA INC.

Call the awaard winning team for all your real estate needs...
HomeLife Future Realty Inc.
Independently owned and opereted
416.264.0101
Siva Shanmuganathan
Sales Representative
Direct: 416.545.7482
Joy H. Selvanayagam
Sales Representative
Direct: 416.358.6928
This is not intended to solicit buyers or sellers currently under contract with a broker

PMCI PROPERTY MORTGAGE CANADA INC.
Buying - Selling - Investing
PROPERTY MAX
Realty Inc. Brokerage
One Source For Many Type of Properties & Mortgages
Mohan Subramaniyam
Broker of Record
416.321.2300

இனிய இல்லம் ஒளிமயமான எதிர்காலதிற்கு அடித்தளம்
மகேன் சிங்கராஜா
Sales Representative
Direct: 416.302.7283 (SAVE)
E-mail: msingarajah@trebnet.com
web: www.mahenonline.com
RE/MAX Vision Realty Inc., Realtor
2210 Marham Road, Unit-1, Toronto, ON M1B 5V6
Tel: 416.321.2228, Fax: 416.321.0002

வீடு வாங்க, விற்க,
வீட்டிற்கான பெறுமதியை சட்பூர்வமாக மதிப்பிட (Appraisal)
தயங்காமல் உடனே அழையுங்கள்
S.K. Bales CRA, MVA, CRES
Canadian Residential Appraiser, Real Estate Broker
416.801.3219 (Cell)
416.290.1200 (Bus), www.skbales.com
Century 21
Affiliate Realty Inc.


Whatever your dream is ...
Whether your dream is to own a perfect house or starting a business, don't just keep dreaming about it, call us and we'll arrange the finance for you.
• Up to 100% financing on purchase
• Discounted interest rates O.A.C
• Mtg. computer analysis - amortization schedules
• Second mortgages guaranteed for very low interest rates
• Debt Consolidation to 100% of value
• Mortgage investment opportunities
• Bank refusals restructured
• Real estate project (acquisition + development + construction)
• Residential, Commercial & Industrial
LOOKING AFTER YOUR BEST INTEREST!
SHANJITH (SHAWN) SATKUNANANTHAN
Senior Mortgage Consultant (AMP)
RAJANI SHANJITH
Mortgage Consultant
CENTUM Advance Realty Inc
(647)998.5450 / (416).290.1200
80, Corporate Drive Suite 208,
Toronto, ON M1H3S5
shanjith2002@yahoo.com
www.centum.ca

# புதிய புலிகள்



தா.சிவதாசன்
- வீடு விற்பனை முகவர் -

கட்டுநாயக்கா அரச வான்படைத் தளத்தின் மீதான புலிகளின் தாக்குதல் சிறீலங்காவின் போர் சூத்திரதாரிகளையும் அவர்களின் வெளிநாட்டு கையாடிகளையும் (handlers) மிகவும் பலமாக உலுப்பி விட்டிருக்கிறது. அவர்களின் பல வருட திட்டமிடல்களைக் குழப்பி ஆட்டத்தை மீண்டும் முதற் சதுரத்திற் கொண்டுவந்து விட்டிருக்கிறது.

கட்டுநாயக்கா வான்படைத் தளத் தாக்குதலின் பாதிப்பு எப்படியானது என்பது பற்றிய வாதப் பிரதிவாதங்கள் சூடுபிடித்துக் கொண்டு வரும் அதே வேளை புலிகளுக்கு அது எப்படியான ஒரு எதிர்காலத்தைப் பெற்றுத்தரப் போகிறது என்பது பற்றி ஒரு சில இந்திய ஊடகங்களைத் தவிர பரவலாகப் பேசப்பட்டதாகத் தெரியவில்லை.

புலிகளின் வான்படை நிர்மாணம் ஆரம்பித்து ஏறத்தாழ ஒரு தசாப்தமே கடந்து விட்டது. செப்டம்பர் 11 க்கு முந்திய காலங்களில் எடைகுறைந்த, அதி-எடை குறைந்த வான் கலங்களை மேற்கு நாடுகளில் பொதி (kit) வடிவங்களில் வாங்கிக் கொள்ளலாம். இதன் அப்போதய விலைகள் சுமார் 15,000 முதல் 20,000 அமெரிக்க வெள்ளிகள். அயர்லாந்து, கனடா போன்ற நாடுகளில் சுமார் இரண்டு தசாப்தங்களுக்கு மேலாகவே வான் பறப்புப் பயிற்சியைத் தமிழர்கள் பெற்று வந்ததும் புதிய விடயமல்ல. அத்தோடு உலக விடுதலை இயக்கங்களிடையே மட்டுமல்ல பல அரச இராணுவக் கட்டமைப்புகளோடு ஒப்பிடும் போது புலிகளின் தூரதரிசனம், அதிசிறந்த திட்டமிடல், கடுமையான பயிற்சி, அத்தோடு மிக முக்கியமாக, ஊழலற்ற நிர்வாகம் என்பன தனித்தன்மை பெற்றவை. மிகவும் பரகசியமான இந்த விடயங்களைத் தெரிந்து வைத்திருந்தும் ஈழப் போர் ஆரம்பித்து கால் நூற்றாண்டு கழிந்த பின்னரும் புலிகளின் இரண்டு சிறிய விமானங்களின் ஊடுருவலைக் கண்டுபிடிக்க முடியாது போன சிங்கள நாட்டின் மடமைக்கு அவர்களே பொறுப்பேற்க வேண்டும்.

புலிகள் தமது வரவு செலவுத் திட்டத்தில் சுமார் 40 வீதமான தொகையை புலனாய்வு செலவீனங்களுக்குப் பயன்படுத்துகிறார்கள் என்று அறியப்படுகிறது. உலகின் வேறெந்தொரு நாடுகளுமே தமது போர்க்கால நிர்வாகத்தில்கூட இப்படியாகச் செலவழிப்பதில்லை என்கிறார்கள். சிங்கள அரசின் பாதுகாப்புச் செலவீனத்தில் சுமார் 40 வீதம் லஞ்சமாக அரசியல்வாதிகளுக்குப் போய்ச் சேர்கிறதுஎன்றால் அதை நம்பும் வகையில் தான் மகிந்தவின் ஆட்சியும் நடந்து கொள்கிறது.

சோவியத் ஆட்சியின் போது கலைக்கப்பட்ட குடியரசுகள் பாவனைக்குஉதவாத போர்க் கலங்களை கழிவுலோக (scarp metal) வியாபாரிகளுக்கே விற்க முடியாதிருந்த போது இலங்கை அரசு அவர்களுக்குக் கைகொடுத்துதவியது. யுக்கிரெயினிடம் இருந்து மிக் ரக போர் வான்கலங்களை தலா 2.5 மில்லியன் வெள்ளிகளுக்கு வாங்கியது மகிந்த அரசு. மத்தியகிழக்கு ஆயுத வியாபாரிகள் கற்களையே வரைபடங்களோடு ஆயுதங்களென விற்பவர்கள். லஞ்சத்துக்குப் பேர்போன இலங்கை அரசுடன் நட்புறவு கொண்டாடும் பாகிஸ்தான், இஸ்ரேல் போன்ற நாடுகள் ‘பயங்கரவாதத் துக்கு எதிரான போர்’ என்ற சுலோகத்தின் கீழ் ‘கழிவுலோக’ வியாபாரத்தையே செய்கிறார்கள். வெளிநாடுகளின் பண உதவியிலும் (ஆழிப்பேரலை நிவாரணமும் சேர்ந்தே) ஆயுத வியாபாரிகளின் தயவிலும் மட்டுமே நம்பித் தமது போரை நடாத்தி வரும் இலங்கை அரசுக்கு கட்டுநாயக்கா தாக்குதல் மிகவும் பேரிழப்பேயாகும்.



“ சென்ற வாரம் பல ஐரோப்பிய நாடுகள் இலங்கைக்குச் செல்ல உத்தேசிக்கும் தமது பயணிகளை எச்சரித்தது நினைவிருக்கலாம். அரசுக்குத் தெரியாதது எதுவும் அவர்களுக்குத் தெரிந்திருந்ததா?... ”

மாறாக, புலிகளோ தமது தேவைகளைப் பெரும்பாலும் தாமே பார்த்துக்கொள்ளும் அளவுக்கு பரிணாம வளர்ச்சி பெற்றவர்கள். பெரும்பாலான ஆயுதங்களை அவர்கள் உற்பத்தி செய்து கொள்வது மட்டுமல்ல அவற்றின் வினைத்திறனை (efficiency) அதிகரிக்கும் அளவுக்கு ஆற்றலையும் பெற்றவர்கள். திறமையான இளம் தலைமுறையினரை இனம்கண்டு அவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி தொழிற்கல்வி பயிற்றுவித்து தமது மூளை வளங்களை வலுச்சேர்க்கும் நடைமுறை புலிகளின் ஆரம்ப நாட்களிலிருந்தே நடபெற்று வருவது. கட்டுநாயக்கா தாக்குதலிற் பங்குபெற்ற வான்கல ஓட்டியிலொருவர் வெளிநாட்டில் பயிற்சி பெற்றவர் என்ற வதந்தியும் பலமாக அடிபடுகிறது. ஜோனி கண்ணிவெடி முதல் இன்றய வான்கலம் வரை புலிகளின் தொழில்நுட்ப வல்லமைக்கு அவை ஒரு எடுத்துக்காட்டு. இவ்வான்கலங்கள் பகுதிகளாகத் தருவிக்கப்பட்டு ஈழத்தில் பொருத்தப்பட்டவை என்ற கருத்து பலமாக அடிபட்டாலும் அவ் வான்கலங்கள் ஆயுத ஏவலுக்கான முறையில் வடிவமைக்கப்பட்டவை அல்ல என்பதும் ஓட்டியின் கட்டுப்பாட்டிலியங்கும் ஆயுத ஏவல் தொழில் நுட்பத்தைப் புலிகளே தயாரித்திருந்தார்கள் என்பதும் விடயம் தெரிந்தவர்களுக்கு ஆச்சரியமான செய்தியல்ல.

புலிகளின் கள வெற்றிகளுக்கு மிக முக்கிய காரணம் தலைமையின் வழிநடத்தலே. சிறிய பாம்பானாலும் பெரிய தடிகொண்டு அதை அடிக்க வேண்டும் என்று தலைவர் பிரபாகரன் சொல்வது வழக்கம். புலிகளின் எந்தவொரு தாக்குதலும் மிக நீண்ட கால, அதிக ஒத்திகைகளுடன்கூடிய திட்டமிடலின் பெறுபேறுகளே. சமீப காலமாக பல களங்களில் இலங்கை இராணுவத்தினர் வெற்றிகளை அடுக்கிக்கொண்டு போகும் போதெல்லாம் மக்கள் ஆதங்கப்பட்டார்கள். புலிகள் எதையுமே செய்யாது கைகளைக் கட்டிக்கொண்டு அடி வாங்குகிறார்களே என்ற கவலை அவர்களுக்கு. அவர்கள் பாரிய தாக்குலொன்றுக்குத் தயாராகுகின்றார்கள் என்பதில் தமிழர்கள் கொண்டிருந்த நம்பிக்கையைவிட வெளிநாடுகளின் இராஜதந்திரிகள் வைத்திருந்த நம்பிக்கை அதிகம். ஒரு வகையில் சில நாடுகள் இப்படியான ஒரு நடுநிலையாக்கும் (neutralizing) நடவடிக்கையை அவர்களும் எதிர்பார்த்தார்கள். சமீபகால இராணுவ வெற்றிகளினால் அகம்பாவம் கொண்ட மகிந்த அரசு, குறிப்பாக போகொல்லாகம, பாலித கொஹென்ன, சமரசிங்க மற்றும் ராஜபக்ச குடும்பம் எல்லோருமே கர்வம் தலைக்கு மேல் ஏறி வரம் பெற்ற அசுரர்கள் போல் நடக்க முற்பட்டார்கள். சமாதானப் பேச்சினால் தாமே அதிகம் இழக்கப்போகிறோம் என்ற நம்பிக்கையில் அவர்கள் இறுமாப்போடு நடந்து கொண்டார்கள். இதைச் சர்வதேச சமூகங்கள் விரும்பவில்லை. மனித உரிமை மீறல்களைச் சுட்டிக்காட்டினாலும் நடவடிக்கை எடுக்க அரசு தயங்கியது. அயலவர்களிடையே பகைமையையும் போட்டியையும் வளர்ப்பதன்மூலம் தமது இலாபங்களை முன்னிறுத்தி அரசு நடந்துகொண்டது அயலவர்களிடையேயும் எரிச்சலை உருவாக்கியது. இப் பின்னணியில் புலிகளின் தாக்குதல் திட்டம் பற்றி அவர்களுக்குத் தெரிந்திருந்தாலும் அதை அரசுக்குத் தெரிவித்திருப்பார்களா?.. சென்ற வாரம் பல ஐரோப்பிய நாடுகள் இலங்கைக்குச் செல்ல உத்தேசிக்கும் தமது பயணிகளை எச்சரித்தது நினைவிருக்கலாம். அரசுக்குத் தெரியாதது எதுவும் அவர்களுக்குத் தெரிந்திருந்ததா?

புலிகளின் கட்டுநாயக்கா வான்தளத் தாக்குதல் இலங்கையின் போர் அரங்கில் புதிய மாற்றங்களை எதிர்நோக்க வைத்துள்ளது. புலிகளின்வெற்றி உலகெங்குமுள்ள தமிழர்களைப் புளகாங்கிதமடையச் செய்தாலும் அது உருவாக்கப்போகும் எதிர்வினைகளையும் இப்போதே கருத்திலெடுத்து புலிகள் தங்கள் அடுத்து வரும் யுக்திகளையும் வியூகங்களையும் வடிவமைத்துக் கொள்வார்கள் என்றே எதிர்பார்க்கலாம்.

வான்தாக்குதலில் 40 வீதமான அரச வான் கலங்கள் சேதமாக்கப்பட்டன என்பது உண்மையானால் அரசு இராணுவரீதியாகப் பலமிழந்து விட்டது என அனுமானிக்கலாம். அதைவிடத் தென்னிலங்கையின் மனோபலப் பாதிப்பு மிக மோசமானதாக இருக்கலாமென்பதும் அங்குள்ள சமாதான விரும்பிகள் இத்தருணத்தைச் சாதகமாகப் பாவித்தால் எல்லோருக்கும் சாதகமானதாக அது இருக்கலாமென்பதும் கருத்து நிலவுகிறது.

சமீப காலங்களில் புலிகள் மேற்கொண்ட கெரில்லாத் தாக்குதல்களானாலும், மரபுவழித் தாக்குதல்களானாலும் (மட்டக்களப்பு வெபர் ஸ்ரேடியம் ஈறாக) எல்லாமே அவர்களின் பயிற்சி நடவடிக்கைகள் (target practice) தானென்று ஒரு நண்பர் அபிப்பிராயம் தெரிவித்தார். அப்படிப் பார்க்கின் கட்டுநாயக்கா வான்தளத் தாக்குதலும் ஒரு பயிற்சியாகவே இருக்கலாம். இப்பயிற்சியின் போதே 40 வீதமான வான் கலங்களைச் செயலிழக்கச் செய்யும் வல்லமை இருப்பின் “இப்படியான தாக்குதல்கள் தொடரும்” என்ற சு.ப.தமிழ்ச்செல்வனின் எச்சரிக்கையை தென்னிலங்கை மிகவும் உன்னிப்பாகவே கவனிக்க வேண்டும்.

புலிகளின் நடவடிக்கைகளைத் தெரிந்து வைத்திருப்பவர்கள் ஒரு விடயத்தை ஒத்துக் கொள்வார்கள். அதி தீவிர ஒத்திகை, மிதமிஞ்சிய தயாரிப்பு, தேவைக்கு மேற்பட்ட வளங்கள் (ஆட்பலம், ஆயுத பலம்), உணர்ச்சி வசப்படாது தருணம் பார்த்து செயலாற்றல் போன்றவை புலிகளின் தனித்தன்மை. இதன் அடிப்படையில் பார்க்கும் போது போதிய அளவு வான்கலங்களைப் புலிகள் தயார் நிலையில் வைத்திருக்காமல் இரண்டொரு வான் கலங்களை மட்டும் உலகிற்கு அறிமுகப்படுத்தியிருக்க மாட்டார்கள். ஏற்கனவே இரண்டு ஹெலிகொப்டர்கள், பல தாங்கிகள் என்று மரபுவழிப் போர்க்கலங்களை அவர்கள் வைத்திருந்தும் அவற்றைப் பாவனையில் ஈடுபடுத்தியதில்லை. வான் கலங்கைளைத் தாக்குதலுக்குப் பயன்படுத்தியது இதுவே முதற் தடவை என்றால் அவர்களிடம் பெரிய வான் படையே இப்போது இருக்கிறது என்றுதான் அர்த்தம்.

14ம் பக்கம் பார்க்க...




#1 TEAM @ PROPERTY/MAX REALTY INC.

PROPERTY MAX Realty Inc. Realtor
Mohan Subramaniyam
Broker of Record
416.321.2300

New Mortgage, Commercial Mortgage
New Immigrans, Ist, 2nd Mortgage
Re-Financing, New Home Buyers

Search More Properties @
www.realestatebrokerofrecord.info

WE BRING CANADA'S LEASING LENDER'S TO YOU
PMCI PROPERTY MORTGAGE CANADA INC.

PLEASE MENTION PROPERTY/MAX WHEN ENQUIRING ABOURT PROPERTIES!

# உங்கள் பிள்ளைக்கு உலகம் தேவை



மாமூலன்

கல்விச் சேமிப்புத் திட்டம், வீட்டில் முதலீடு, தமிழ் மக்களாயின் நகைகள் சேமிப்புக்கள், பங்கு சந்தையில் முதலீடு அனைத்தும் எம் குழந்தைகளுக்காக நாம் சேமிப்பவை.

இதெல்லாம் தேவையானவை.

நாம் சேகரிப்பவை எம் சந்ததிக்கு குழந்தைகளுக்கு 100 ஆண்டுகளுக்கு வங்கியில் இருக்கலாம். சொத்தாக பல காலம் இருக்கலாம்.

ஆனால் அதையெல்லாம் பயனற்றதாக்கும் வகைளில் தற்போத நாம் வாழும் சுற்றுச் சூழல் இருக்கிறது.

எம் குழந்தைகள் மூச்சுவிட நல்ல காற்றையும் நல்ல குடி நீரையும் நல்ல உலகையும் உணவு வளத்தையும் நாம் சேமித்து வைத்திருக்கிறோமா? என்று கடுமையாக யோசிக்க வேண்டிய நேரமிது.

இப்போதிருக்கும் பெற்றோர்களும், பெயரன் பேத்திகளும் எதிர்காலப் பெற்றோராகிய இளையோரும் சிந்திக்கவேண்டிய கடைசி நாட்களில் நாம் இருக்கின்றோம்.

சுற்றுச் சூழல் பற்றியவைகளை யாரும் ஆர்வத்ததுடன் கவனத்தில் எடுப்பதில்லை. அனைத்தையும்விட கவனத்தில் கொள்ள வேண்டியது சுற்றுச் சூழல் பாதிப்புக்களைப் பற்றித்தான்.

சுற்றுச் சூழல் என்றவுடன் அது நேரடியாக எம்மைப் பாதிக்காதது என்ற எண்ணம் வந்துவிடுகிறது. பக்கத்து வீடு, இந்த ஊர், எல்லாருக்கும் சேர்த்ததுதான். எனக்கெதுக்கு இது பற்றிக் கவலை. எங்கள் காசு - எங்கள் உழைப்பு - எங்கள் வாழ்க்கை என்று இருந்துவிட்டு போவோம் என்ற எண்ணம் அனைவருக்கும் வருகிறது.

தமிழ் மக்கள் என்றல்ல அனைத்து இன மக்களுக்கும் சுற்றுச் சூழல் பற்றி எண்ணம் இப்படித்தான் உள்ளது.

எங்கள் காசை பயன்படுத்தி வாழ எங்கள் குழந்தைகளுக்கு இன்னும் 20 ஆண்டு கழித்து அவர்கள் வளர்ந்து வரும்போது உலகம் இதே போல இருக்கவேண்டுமே!

நாங்கள் குழந்தைகளுக்கு கொடுக்கும் கல்வி, செல்வம் இரண்டையும் பயன்படுத்த உகந்த வாழும் உலகம் வேண்டுமே.

இதெல்லாம் நான் என்ன செய்து மாற்ற முடியும்? அரசாங்கங்கள் இருக்கின்றன அமைப்புக்கள் இருக்கின்றனஎன்ற எண்ணம் பொரும்பாலும் பலருக்கும் எற்படுவது வழக்கம்தான். ஆனால் நாம் சிறிதாகச் செய்ய நிறை இருக்கின்றன. வீட்டில், அன்றாட நடவடிக்கைகளில் கைக்கொள்ளும் சிறிய செயல்கள் அதற்கு உதவலாம்!

- பழைய கைத்தொலைபேசிகளை சுழற்சிக்கென வழங்கலாம்.
- தாள்கள், அட்டைகள், மட்டைகளை முடிந் தளவு சுழற்சிக்குரிய பெட்டிகளில் வைக் கலாம்.
- கறுப்புப் பையில் குப்பை போடுவதை முடிந் தளவு தவரிக்கலாம்.
- தாள்களின் தேவைக்கு முடிந்தளவு சுழற்சி முறைத்தாள்களைப் பயன்படுத் தலாம்.
- ஒருபகத்தில் அச்சிட்ட எழுதப்பெற்ற தாள்களை குழந்தைகளின் வீட்டு எழுத்து வேலைகள் போன்றவற்றிற்கும் எமது படியெடுப்பு வேலைகளுக்கும் பயன்படுத தலாம்.
- சுழற்சிப் பைகளை குப்பை கட்டுவதற்கு



பயன்படுத்தலாம். குப்பை கட்டுவதற்கு பெரிய பைகளைவிட பிளாத்திக்குப் பைகளை தேவையற்ற வகையில் வேண்டாது விட்டுவிடலாம்.

இவை ஒரு வீட்டில் செய்யப்படுகையில் சராசரியாக ஆண்டுக்கு எங்களூர் வேப்ப மரம் போன்றதொரு மரத்தினளவு இயற்கையைப் பாதுகாக்கிறோம். இப்படிப் பல சின்னச் சின்ன வேலைகள் கவனித்துச் செய்வது தற்போது எமக்கென்ன என்ற மனநிலையில் தேவையற்றதாக இருக் கலாம்.

ஆனால் ஒரு பற்றி- மின்கலத்தை கறுப்பு குப்பையில் போடுகையில் எமது குழந்தையின் ஒரு கிழமைக்கான சுவாசிக்கும் காற்றை இல்லாது செய்கிறோம் என்ற உணர்வை உள்வாங்கிக்கொண்டால் பல மாற்றங்களைச் செய்யமுடியும்.

- கடற்கரை- ஏரிக்கரைக்கு போகும்போது கொண்டு போகும் குப்பைகளைக்கூட பொறுப்பாக குப்பைத் தொட்டியில் போடுவதும் போட வைப்பதும் பல மாற்றங் களைச் செய்யும்.

நாம் செய்வோம். நம்மைப்பாரத்து பிறரும் செய்வார்கள் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும்.

- வீட்டைச்சுற்றி ஆங்காங்கே இருக்கும் பொலிதின், பிளாதிக்கு வகைளை சேகரித்து போட்டாலே பெரிய உதவியாயிருக்கும்.
- பிளாதிக்குகள் 500 ஆண்டுகுள் வரை இருந்து மெது மெதுவாக சிதைந்து தீய இரசாயனப் பொருட்களைக் காற்றில் விடுகின்றன. அவற்றைச் சேகரித்து உரியபடி நாங்கள் சுழற்சி செய்தால் எமது உலகம் தப்பும்.

எமது குழந்தைகள் சிறப்புடன் வாழ்வார் கள்.

- எமது எதிர்காலச் சமூகம் என்று பெரிதாக யோசிக்க வேண்டாம்.
- எனது குழந்தைக்கு நல்ல காற்ற வேண்டும்.
- எனது குழந்தைக்கு நல்ல தண்ணீர் வேண்டும் என்று யோசித்தாலே மாற்றம் வந்து விடும்.

  நான் செய்யும் சிறிய செயலால் என்ன நடக்கும் என்று யோசிக்கத் தேவை யில்லை.

பல சிறிய செய்லகளே இன்று உலகைக் காப்பாற்றத் தேவை.

அணுகுண்டை வதைத்துக் கொண்டிருக்கிறார் கள். இரசாயன ஆயுதம் வைத்திருக்கிறார் கள். எண்ணைக் கப்பல் கவிழ்கிறது இதற்கிடையில் நாம் என்ன செய்வது? ஏன் செய்வது என்று யோசிக்கலாம்தான்.அப்படி யோசித்துவிட்டு நாங்கள் சாப்பிடாமல் இருப்பதில்லையே. முடியப்போகும் உலகம் தானே என்று எதுவும் செய்யாமல் இருப்ப தில்லையே!
சில செயல்களின் பட்டியலைப் பார்ப்போம்:

### வீட்டினுள் என்ன செய்யலாம்?

- வீட்டின் உறுப்பினர்களை எரிசக்தியையும் மின்சக்தியையும் தண்ணீரையும் சிக்கனமாகப் பயன்படுத்தப் பழக்கலாம்
- பல்துலக்கும் போது தண்ணீர்க் குளாயை ஓடவிடாமல் இருக்கலாம்.
- வீட்டில் கழுவும் கருவிகளை முழு அளவில் நிரப்பிய பின் போடலாம்.
- வீட்டில் சின்ன மாற்றங்கள் செய்லாம்-மின்சிக்கனப்படுத்தும் மின்குமுழ்களை அனைத்து இடத்திலும் மாற்றலாம். (தற்போது சிறிய அளவுடன் உள்ள ஹோல்டர்களுடன்கூட இந்த மின்குமிழ் கள் வந்துவிட்டன.)
- சின்னச் சிக்கன கழிப்பறைக்கருவிகளை மாற்றலாம். பழயவை நிறைய நீரை வாரியிறைத்து வீணாக்கும்.
- எரிசக்தி சிக்னப்படுத்த சூடாக்கிக் கருவிகளை சரிபார்க்கலாம்
- தாள்கள், பிளாத்திக்கு, கண்ாடி, உலோக வகைகள் அனைத்தையும் சுழற்சிக்குட் படுத்தலாம்.
- சுழற்சிக்குட்படுத்திய பொருட்களை வாங்கி ஊக்குவிக்கலாம்.
- வெளியில் வீட்டு வளவில் செய்யக் கூடியவை:
- சுற்றாடலுடன் ஒத்துப் போகும் இயல்பாகக் கிடைக்கும் செடி கொடி-களை வளர்க்கலாம். அவை அதிக செலவில்லாமல், நீரில்லாமல் வளரும்.
- தோட்டத்தை வெட்டி மொட்டையாக்கி திரும்ப வளர்க்காமல், இயல்பான புற்கள், காட்டுச் செடிகள் கொஞ்சம் வளரவிடலம்.
- சுற்றாடல் விலங்குகள் பூச்சிகளுக்கு சிறியளவு தண்ணீரை வைக்கலாம்.

10ம் பக்கம் பார்க்க...

- ஒரே வகையான செடிகளை வளர்க்காமல் பல வகைகளை வளர்க்கலாம்.
- மரங்களிலிருந்து சிறிய புற்கள் வரை மாறுபட்ட வகையினவாக வளர்க்கலாம்.
- இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்-தாமல் விடலாம்.

### அதற்கும் வெளியில் செய்யக் கூடியவை:

உங்கள் வெற்றியைப் பிறருக்குச் சொல்லலாம்.

குடும்பத்தின் உறவினர் நண்பர்களை உங்கள் வழியில் திருப்ப அவ்வப்போது கதைத்துப் பார்க்கலாம்.( யார்கண்டது அது தொடர்ந்து பரவி நாளைக்கு உங்களுக்கு நோபல் பரிசுகூடக் கிடைக்கலாமே! அப்படியில்லா விட்டாலும் உங்கள் வட்டத் தில் உங்கள் மதிப்பு கூடும்.)

வேலையிடங்களுக்கு இதை சொல்லலாம்.

உங்கள் அருகில் உள்ள பாடசாலை சுற்றுச் சூழல் முயற்சிகளில் ஈடுபட உதவலாம். அவர்களுடன் சேர்ந்து செயற்படலாம்.

இதைப்போல இன்னும் பலப்பல சிறிய செயல்கள் உங்கள் மூளையில் உதிக்கும்.

உங்கள் செயல் ஒவ்வொன்றும் உங்கள் குழந்தைக்கு எதிர்காலத்தில் நல்ல காற் றையும் தண்ணீரையும் சேர்த்து வைக்கப் போகிறது!

நாம் சேர்க்கும் காசைவிட காற்றும் தண்ணீரும்தான் எம் குழந்தைகளுக்கு முதல் தேவை!

(ஆனால் இதெல்லாத்தையும் விட முக்கியமானது, வீட்டில் இருப்பவரெல்லாம் சேர்ந்து ஒரு பாயையும் தலையணையும் தந்து வீட்டுக்கு வெளியில் எங்களைத் துரத்தாமல் பார்த்துக் கொள்வதுதான்.)

■ ■ ■

**RAVI INCOME TAX SERVICE**

- LAST 14 YEARS IN TAX SERVICES
- PERSONAL INCOME TAX
- CORPORATE INCOME TAX
- SMALL BUSINESS TAX
- GST/PST AND PAYROLL REMITTANCE
- E.FILE SERVICES
- YEAR ROUND SERVICES

MORE INFO PLEASE CALL
RAVI PARAMU
**416-262-4176**

• Residential • Commercial • Investment Properties

$340,000.


**Markham/Denison**
3+1 bedrooms 4 washroom Nice Neighbourhood Close To Both Schools, Bus, Shopping Centre, 1 Bedroom Basement Apt

$108,800.

**Neilson/Sheppard**
In Very Convenient Location, 2 Bedrooms With Ensuite Laundry. Walk To Mall, Ttc, Schools,Library, Rec Centre, And Hwy 401

**Ravi Paramu**
Sales Representative
**416•262•4176**
rparamu@hotmail.com
www.raviparamu.com

**HomeLife GTA Realty Inc.**
Realtor Member
1711 McCowan Rd., Suite 206
Toronto, Ont M1S 3Y3
Tel: 416•321•6969
Fax: 416•321•6963



# உங்கள் வீடுகளில் காபன் மொனெக்சைட்டின் பாதிப்பு



மகேன் சிங்கராஜா
- வீடு விற்பனைப் பிரதிநிதி -


## (Carbon Monoxide ) தீங்கு

காபன் மொனெக்சைட் (CO) என்பது நிறமோ அல்லது மணமோ அற்ற வாயுவாகும். இதனை கண்களால் காணவோ அல்லது மணந்தறியவோ முடியாததால், இவ் வாயு உங்கள் வீட்டில் இருக்கின்றகு என்று நீங்கள் அறிய முன்னரே இது உங்களைப் பாதிக்கும்.. சிறிதளவு வாயுக் கசிவு கூட பாரதூரமான சுகாதாரப் பிரச்சனைகளை உருவாக்கும். இவ்வாயு விரைவாக இரத்தத்தில் சேர்ந்து ஒட்சிசன் வாயுவை எடுத்துச்செல்லும் தன்மையைக் குறைப்பதால் இது மிக ஆபத்தானது.

## காபன் மொனெக்சைட் எங்கிருந்து வருகின்றது?

உயிர்ச்சுவட்டு எரிபொருட்கள் எரிவதனால் ஏற்படும் பொதுவான விளைவே காபன் மொனெக்சைட்டாகும். எரிபொருட்களை எரிக்கும் (இயற்கை வாயு, புரொபேன், எண்ணெய்) உபகரணங்கள் சரியான முறையில் தாபிக்கப்பட்டு பேணப்பட்டால் சிறியளவு காபன் மொனொக்சைட்டே வெளிவிடப்படும். எரிபொருட்கள் எரிவதனால் ஏற்படும் விளைபொருட்கள் பொதுவாக பாதுகாப்பாகவே வெளியிடப்பட்ட போதிலும், யாதாவதொரு செயல்முறை, உதாரணமாக புகைபோக்கிக் குழாயில் குருவிக்கூடு அமைந்திருந்தால் அல்லது எரிக்கும் உபகரணத்திற்கான ஒட்சிசன் குறைக்கப்பட்டால், காபன் மொனெக்சைட்டின் அளவு அபாயகரமான மட்டத்தை விரைவில் அடையும். மரம்,மண்ணெய், நிலக்கரி எரிதல் என்பன காபன் மொனக்சைட் உற்பத்தியாவதற்கு வழிவகுக்கும். இதனை விட வாயுவில் இயங்கும் இயந்திரங்களும் காபன் மொனொக்சைட்டை உற்பத்தி செய்கின்றன. ஓர் குளிரான இயந்திரத்தை (Cold Engine) இயக்க ஆரம்பிக்கும் போது காபன் மொனெக்சைட் உற்பத்தி அதி கூடியதாக இருக்கும். எனவே உங்கள் மோட்டார் வாகனத்தை இயக்கிய பின் கராஜில் விடுவது ஆபத்தானதாகும். காபன் மொனெக்சைட்டைக் கொண்ட புகையானது இதனை ஒட்டியுள்ள சுவர்கள் அல்லது கதவு வழிகளினூடாக ஆபத்தான மட்டங்களை அடையும்.

## எமது வீட்டில் காபன் மொனொக்சைட் ஏற்படக் கூடிய மூலாதாரங்களை எவ்வாறு நீக்கலாம்?

காபன் மொனொக்சைட்டால் நச்சுத் தன்மை ஏற்படாதவாறு தவிர்ப்பதற்கான மிக முக்கியமான படிமுறை, காபன் மொனொக்சைட் உங்கள் வீட்டினுள் நுழையும் சந்தர்ப்பத்தை ஒரு போதும் ஏற்படுத்தாமலிருப்பதாகும். இது பாதுகாப்பிற்கான முதலாவது வழியாகும். உங்கள் வீட்டில் காபன் மொனொக்சைட்டினால் ஏற்படும் அபாயங்களைக் குறைப்பதற்கு இந்தப் பட்டியலைக் கவனியுங்கள்.

- வருடமொரு தடவை குளிரான வானிலை ஆரம்பிக்கு முன் ஓர் தகுதி வாய்ந்த தொழில் நுட்பவியலாளரைக் கொண்டு, உங்கள் எரிபொருள் உபகரணங்கள் வேலை செய்யக் கூடிய நிலையில் உள்ளனவா என பரிசோதித்து சுத்தம் செய்ய அனுமதியுங்கள்.
- வருடாவருடம் தகுதி வாய்ந்த தொழில் நுட்பவியலாளரைக் கொண்டு புகைபோக்கிகளையும், காற்று வெளியேறும் துவாரங்களையும், தடைகள் அல்லது வெடிப்புக்கள், துவாரங்கள் அல்லது கசிவு ஏற்படக் கூடிய முறையிலான அரித்தல்கள் ஏற்பட்டுள்ளனவா என அறிய (உதாரணமாக: பறவைகளின் கூடுகள், மரக் கொப்புகளால் தடை ஏற்படல்) போன்றவற்றை அறிய பரிசோதனை செய்யுங்கள்.
- எரிபொருள் எரியும் இடங்களில் தடை ஏற்படுத்தும் பொருட்கள் காணப்படுகின்றனவா என்பதை சரி பாருங்கள்.
- ஓர் சிறியஅறையில் வெப்பமேற்றக் கூடிய மற்றும் கொதிகலன் உபகரணங்களைப் பொருத்த முன்னர், சரியான எரிதலுக்குத் தேவையானளவு போதுமான வளி இருக்கின்றதா என்பதைத் தரம் வாய்ந்த தொழில் நுட்பவியலாளரைக் கொண்டு பரிசோதியுங்கள்
- உங்களிடம் சக்தி வாய்ந்த புகை வெளியேற்றும் விசிறி (Exhaust Fan) இருந்தால் புகை போக்கியினுள்ளிருந்து கீழே இதன் புகை மீள இழுக்கப்படாதிருப்பதை ஓர் தகுதி வாய்ந்த தொழில் நுட்பவியலாளரைக் கொண்டு உறுதி செய்யுங்கள்.
- புரோபேன் அல்லது இயற்கை வாயு அடுப்புகளின் (Gas stove) அல்லது கனலடுப்பு (Oven) என்பவற்றைப் பயன்படுத்தி உங்கள் வீட்டை வெப்பமேற்ற வேண்டாம்.
- மூடிய கராஜினுள் ஓர் வாகனத்தை இயக்க ஆரம்பிக்க வேண்டாம். முதலில் கராஜின் கதவுகளைத் திறவுங்கள். ஓடு பாதைக்கு உடனடியாக கராக் கொண்டு செல்லுங்கள். பின் புகை வீட்டினுள் உட்புகுவதைத் தடுக்குமுகமாக கராஜின் கதவை மூடுங்கள்.
- மோட்டார் வாகனம் கராஜினுள் இருக்கும் போதோ அல்லது கராஜ் கதவுகள் திறந்திருக்கும் போதோ தொலைவில் இருந்து தன்னியக்கமாக வாகனத்தை இயக்கும் கருவியை பயன்படுத்த வேண்டாம்
- இயற்கை வாயு, புரொபேன் அல்லது நிலக்கரியால் இயங்கும் பார்பக்கியூ அடுப்புகளை வீட்டினுள்ளே அல்லது வீட்டுடன் இணைந்த கராஜிலோ ஒரு போதும் இயக்க வேண்டாம்.
- மண்ணெய்யால் இயங்கும் வெப்பமேற்றல் கருவியை வீட்டினுட்பகுதியிலோ அல்லது கராஜிலோ பயன்படுத்துவதைத் தவிருங்கள். இதன் பயன்பாடு தவிர்க்க முடியாதது எனில், இதுஇயங்கும்போது யன்னல்களைத் திறந்து வைப்பதன் மூலம் எரியும் வாயுவை வெளியேற்றுங்கள்.
- புல்வெட்டும் கருவி, பனி அகற்றும் உபகரணம் (Snow Blower) அல்லது வாயுவால் இயங்கும் எந்த ஓர் உபகரணத்தையும் வீட்டினுள் அல்லது கராஜினுள் இயக்க வேண்டாம்.
- குளிரூட்டுதல், சமைத்தல், வெளிச்சமேற்றல் என்பன கூடாரங்கள் மற்றும் வாகன வீடுகளில் பயன்படுத்தல் ஆபத்தானது. எல்லா உபகரணங்களும் வெளியே காற்றை அகற்றக் கூடியதாக இருப்பதை உறுதிப் படுத்துவதுடன், மின்சார அல்லது மின்கலத்தால் இயங்கும் உபகரணங்களை சாத்தியமான இடங்களில் பயன்படுத்தவும்.
- பனி, வெளியே அளவுக்கதிகமான தாவர வளர்ச்சி, துணி போன்றவற்றால் துவாரங்கள் அடைபடுவதைத் தவிர்க்க துணி காய வைக்கும் சலவை உபகரணங்

25ம் பக்கம் பார்க்க...




# HOME LIFE, GTA Realty Inc.

வீடு, வியாபார நிலையங்கள்
**வாங்க விற்க**



Sales Representative

ஞானேந்திரன் நரசிங்கம்

CELL: 416.937.8090



Sales Representative

ஜூடி ஞானேந்திரன்

CELL: 416.629.9797

HOMELIFE HIGHER STANDARDS

OFFICE: 416.321.6969

HOMELIFE GTA REALTY INC., 1711 MCCOWAN RD. SUITE # 206, TORONTO, ON. M1S 3Y3

EACH OFFICE IS INDEPENDENTLY OWNED AND OPERATED



MORTGAGE ALLIANCE
RightBroker=RightMortgage

- No Money Down Programs
- Credit பிரச்சிளை உள்ளவர்கள் Credit இல்லாதவர்கள்
  Late Payment, Bankruptcy and R9's - No Problem
- புதிய குடிவரவாளர்களுக்கும், சுய தொழில் வாய்ப்புள்ளவர்களுக்கும் Mortgage ஒழுங்குகள் செய்து தரப்படும்
- New Mortgages, Refinances, Switches - (Switch for free) & Pre - Approval
- தமிழில் இலவச ஆலோசனைகள், கடைசி நிமிடக் கட்டணம் இல்லை
- Fast Approvals & Closings
- 45 வங்கிகளிடமிருந்து குறைந்த வட்டி வீதம் ஒழுங்கு செய்து தரப்படும்
- உங்களது வீட்டுக்கே வந்து Mortgage செய்து தரப்படும்
- உங்கள் திருப்தியே எங்கள் வெற்றி

**MORTGAGE**
**MORTGAGE**
**MORTGAGE**

**ராம் கிருஷ்**
**RAM KRISH**

Senior Mortgage Consultant
The Mortgage Alliance company of Canada
Head Office: 2005 Sheppard Ave. E, Suite 200,
Toronto, ON M2J 5B4
Phone: 416.499.5454, Fax: 416.499.8366



**TEL: 416.526.4996**

NATIONAL BANK OF CANADA · BRIDGEWATER financial services ltd. · FirstLine MORTGAGES · Scotiabank · FIRST NATIONAL · TD · cervus · BMO

digi Media Creations - 416.467.4952

# பூ பூக்கும் நேரம்....



கருணா
கோபாலபிள்ளை
- வீடு விற்பனைப் பிரதிநிதி -

**Picture 1**

தாய்வீடு வாசகர்களுக்கு மீண்டும் அன்பு கலந்த வணக்கங்களுடன், சற்று தாமதித்து வசந்த காலம் வந்தாலும், வீசும் வசந் தத்தை நுகரக் காத்திருக்கும் இனிய சித்திரையில் இம்முறை வீட்டுத் தோட்டம் பராமரிப்புப் பற்றிச் சில சுவையான தகவல் களைப் பார்ப்போம்.

காற்றுள்ள போதே தூற்றிக் கொள்வதும், பருவத்தே பயிர் செய்வதும் சிறந்த பயன-ளிக்கும் என்பதில் ஐயமில்லை. அத்தி வாரம் பலமாக, ஸ்திரமாக இருக்க வேண் டும். அப்போதுதான் உயர உயர பயமின்றி தொடரலாம். பொதுவாக தாவரங்கள் வளர்ப்பது குழந்தை வளர்ப்பது போல் என்று சொல்வார்கள். அதாவது தொடக்கம் சரியாக இருக்க வேண்டும் என்பதே அதன் அர்த்தம். அந்த வகையில் நாம் எமது வீட்டில் தோட்டத்தினையும் பூச்செடிகள் வளர்க்கும் இடங்களையும் எவ்வாறு பதப் படுத்தி குளிர்கால முடிவில், வசந்த கால தொடக்கத்தில் ஆரம்பிக்கலாம் என்று பார்ப் போம். மண்ணும், விதைகளும் மட்டுமே ஒருபோதும் நிறைந்த பலனைத் தராது.

### தண்ணீர் வடிகால்களை துப்பரவு செய்தல்:

குளிர்காலத்தில் சேர்ந்த இலைகளை, தாவரக் கழிவுகள் மற்றும் இதர வேண்டாத பொருட்கள் தண்ணீர் வடிந்து செல்லும் பகுதிகளை தடுக்காமல் துப்பரவு செய்தல் வேண்டும். இப்போது மழை காலங்களில் தண்ணீர் தகுந்த முறையில் வடிகாலிடப் படாமல் இருந்தால் விதைகள் பழுதடை வதற்குச் சாத்தியமுண்டு.

### களைகளை அகற்றுதல்:

புதுமழைக்கு முளைப்பதற்கென்றே காத்தி ருந்து வெளிவரும் களைகள் இளகிய மண் ணில் அழித்தெடுப்பதற்கு இலகுவாக இருக் கும். அதுமட்டுமன்றி அவற்றை வேருடன் அகற்றுவதன் மூலம் வரும் காலங்களில் மீண்டும் வளராமல் பாதுகாக்கலாம். அவ் வாறு களையகற்றிய நிலத்தினை மூடி காப் பதன்மூலம் புதுக் களைகள் முளைப்பதை யும் தவிர்க்கலாம்.



### மேற் தரையைப் பதனிடுதல்:

தரையின் தண்ணீர்த் தன்மை சற்று காய்ந்த பின், இயற்கை உரங்கள் இட்டு (compost or Well-Seasoned manure) மேற் தரையை பதனிடுதல் வேண்டும். பின்னர் மண்ணுடன் கலப்பதன்மூலம் (Soil ecosys-tem) பசளைகள் மண்ணுடன் படிந்து மெல்ல மெல்ல உட்சென்று தாவரங்களை பயிரிடுவதற்கு தயாராகும்.

தாவரங்கள் மற்றும் பூக்கன்றுகள் பயிரிடுத லுக்காக மண் எவ்வாறு தயார் செய்வது பற்றி பார்த்த நாம் இனி, எந்தெந்த பருவங் கள் உகந்தது என்பதனையும் பார்ப்போம்.

பங்குனி மாத இறுதிக்குள்ளும் சித்திரை தொடக்கத்திலும் அதாவது பனித்துகள்கள் நன்றாக வடிந்து சென்று பின் கீழ்வரும் பயிர்களைப் பயிரிடலாம்:
Peaas, Spinach, Lettuces, Leeks

**Picture 2**

ஒவ்வொருவகைத் தாவரங்களையும் தெரிவு செய்யும் போது வேறுபட்ட இனங்களை தெரிந்தெடுத்தல் அவசியம். ஏனெனில் அவற்றின் வாழ்க்கைக் காலம் வேறுபட்டு இருந்தால் எப்போதுமே சுழற்சி முறையில் பயன்படுத்தலாம்.

இவ்வாறு குளிர்கால முடிவில் பயிரிடப்படும் விதைகளை பாதுகாப்பதும் மிக முக்கிய மானவொன்று. அதாவது பல தடவைகள் வெப்பம் குறைந்து குளிர் மிகுதியால் தரை இறக்கம் ஏற்பட்டால் விதைகள் தகுந்த பயனை அளிக்காமல் போகலாம். அவ்வா றான நாட்களில் விதைகள் இட்ட மண்ணை மூடிப் பாதுகாத்தல் வேண்டும். அதற்காக பெரிதாக செலவுகள் ஏதும் வேண்டிய தில்லை. சாதாரணமாக நாம் வீட்டில் பாவிக்கும் பொலித்தீன் தாள்கள், மட்டை கள், மற்றும் பாவனையில் இல்லாத பாத்தி ரங்கள் போன்றவற்றை உபயோகிக்கலாம்.

**Picture 3**

தொடர்ச்சியாக broccoli, Cabbage, Radishes, Kale, Turnips, Potatoes, Onions போன்றவற்றை பயிரிடலாம். குளிர் காலம் முற்றாகக் கடந்தபின் இந்த வகைத் தாவரங்கள் (Cabbage, Broccoli etc) போன்றவற்றை தமது தடங்களைத் தரை யில் படர்த்தி வளர ஆரம்பிக்கும். அந்தக் காலங்களில் தரை அதிக ஈரலிப்புடன் இருந்தால் இவை இறந்து போவதற்குக் கூட வாய்ப்புக்கள் உண்டு. இக்காலங் களில் அவற்றின் அடிப்பகுதி இலைகளை அகற்றி நிலத்தினை மூடி பாதுகாக்கலாம்.

### பூச்சி கொல்லிகள்:

பொதுவாக உணவுக்காக வளர்க்கப்படும் தாவரங்கள் வளரும் ஆரம்பத்திலும் மற்றும் பூக்கின்ற காலத்திலும் பலவகை நோய் களாலும், பூச்சிகளாலும் பாதிப்படைகின் றது. அந்தந்தக் காலத்திற்கேற்ப மருந்து கைள தேர்ந்தெடுத்து தகுந்த அளவு தண்ணீருடன் கலந்து தெளித்தல் அவசி யம். பூச்சி வகைகளில்சில எமக்கு நன்மை அளிக்கக் கூடியவையும் உண்டு.

கீழக்காணும் பூச்சி இனங்கள் காணப்பட் டால் அவற்றை கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

**Picture 4**

காலத்துக்குக் காலம் Garden Centre' களில் பூச்சி கொல்லிகளை தெரிந்ததெடுத் துப் பாவித்தல் நன்று.

இதே போன்று Chery, Pear மற்றும் Apple மரங்கள் வைத்திருப்பவர்கள் அவை துளிர் க்கும் காலங்களிலும் மற்றும் பூப் பூக்கும் காலங்களிலும் கண்டிப்பாக முற்பாதுகாப்பு பூச்சி கொல்லிகள் தெளித்தல் அவசியம். அதற்கு இது சிறந்த மாதம். இப்போது கவ னிக்காத மரங்கள் பூத்து காய்த்தாலும் யாருக்கும் பயனின்றிப் போகும். அவற்றிற் கான மருந்துகள் அனைத்தும் Garden Centre' களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

**Picture 5**

ஆகவே நல்ல ஆரம்பம் நல்ல விளைச்சல். தகுந்த பராமரிப்பு நிறைந்த சந்தோசம். வசந்த காலத்தை அனுபவிப்போம் குதூ கலிப்போம்

■ ■ ■


# Law Office
## T. JEGATHEESAN
(Barrister, Solicitor and Notary Public (on)



உங்கள் சட்டப் பிரச்சினை எதுவாகிலும் தமிழிலும் ஆங்கிலத்திலும்
ஆலோசனைகளுக்கும் சட்ட நடவடிக்கைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.

## தி. ஜெகதீசன்
(Barrister, Solicitor and Notary Public (on)

Off: 416 • 266 • 6154
Res: 416 • 449 • 0358
Fax: 416 • 266 • 4677

2620 Eglinton Ave., East # 201
Scarborough. ON
M1K 2S3



ROYAL SHUTTERS & BLINDS INC.
DIRECT FROM MANUFACTURER — Everything Factory Direct Prices



Sales - Service - Installations

Custom Made

| Wood & Vinyl Shutters | Blinds | Draperies |
| --- | --- | --- |
| California Style Shutters | Vertical Blinds | Swags |
| Plantation Style Shutters | Venetian Blinds | Sheers |
| Traditional Style Shutters | Wood Blinds | Valance |
| Arches | Bamboo Shades | Curtains |
| (We Do Any Colour Of Paint & Stain) | Roller Shades | And More |
| | And More | |

உங்கள் இல்லத்தின் உட்புறத்திற்கு
ஏற்றவகையில் யன்னல்களை மறைப்புச்
செய்திடவும் அழகு படுத்திடவும் நாடுங்கள்




Workmanship Guaranteed
Free Shop At Home
CALL FOR A FREE ESTIMATE:

தாஸ் Thaas Sivathason
13 Years of Experience in Shutter Business
Tel: (416) 562-0340
Full Satisfaction Guaranteed



For All Your Real Estate Needs..
Lucky Draw for New Car Will be on August ,2007
SOLD
FOR SALE
Buy or Sell through us before August15, 2007 and win a New Car**
Ravi Raveendran
Broker
416.817.8479
$ 239,000
Luxurious Tridel Built Condominium
2 Bedrooms Plus Den
Many Indoor Facilities with Security
Only One Year Old Condo
Call Ravi For Details....
$ 144,000
2 Bedroom Condominium
Spacious Bedrooms
Close to Subway
Well Maintained Building
Call Justin For Details....
Justin William
Broker
416.803.7344
$ 324,900
Most Updated House
Updated Kitchen Cabinets
Well Established Neighbourhood
Walking Distance To Schools
Call Ravi for details....
$ 168,900
Well Maintained Building
2 Bedrooms Plus Den
Kipling And Steeles Area
Very Convenient Location
Call Ravi For Details....
Convenience Store For Sale
Asking: $85,000+Stock
Profitable Business To Own
Good Lotto 6/49 Commission
Sears Catalog Store Commission
Surrounded By Lots Of Apartments
Call Justin For Details....
$ 394,800
2200 Square Feet House
Double Door Entry
Prof. Finished Basement
Lots of Upgrades
Call Justin For Details...
HOMELIFE
HomeLife GTA Realty Inc., Brokerage*
1711 McCowan Rd, Suite 206, Scarborough, On, M1S 2Y3
Tel: 416.321.6969 Fax: 416.321.6963
This is not intend to solicit properties currently listed for sale
** some conditions may apply
*Each office independently owned and operated

CEYLINGO FINANCIAL GROUP.
416.430.0111
2857 Lawrence Ave. E, Suite 4,
Scarborough, ON M1P 2S8
வீடு வாங்க விற்க மற்றும் வீட்டுக்கான கடன் உதவி பெற அழையுங்கள்
Loan Application
Siva
Ratnasingam
Mortgage Consultant
416.430.0111
Karuna
Gobalapillai
Mortgage Consultant
416.430.0111
invis
digi Media Creations - 416.467.4952

தாய் வீடு
THAIVEEDU உள்ளும் புறமும்

# புதிய பரிமாணம்

உலகெங்கும் ஊடகங்களுக்கான பணி, மக்களின் தேவைகளை அடிப்படையாகக் கொண்டது என்பதை கடந்தகால 'வீடு' வெளிப்படுத்தி வந்திருக்கின்றது. அந்தப் பணி மேலும் விரிவாக்கமடைந்து, அதிக தகவல்களைக் கொண்டதாக மலர்ச்சி பெறுகின்றது.

வளர்ச்சி என்ற படிகளில் பயணிப்பதே எந்த நிறுவனத்தினதும் நோக்கமாக அமையும். வீடும் அதற்கு விதிவிலக்கல்ல. புதிய தெளிவுகளோடும், விரிவான பார்வைகளோடும் வீறுநடை கொள்ளத் தொடங்கியிருக்கும் வீடு 'தாய்வீடாக' புதிய பரிணாமம் கொள்கின்றது.

இவ்வேளை, இப் புதிய மாற்றங்களுடன் இணைந்திருக்கும் ஆலோசகர்களுக்கும், வணிகர்களுக்கும், வாசகர்களுக்கும், வடிவமைப்பாளர்களுக்கும் வீடு தன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

இந்த மண்ணில் ஓர் இதழை உருவாக்கி தொடர்ச்சியாக நடத்துவது என்பது பல சவால்களுக்கூடாக உறுதியுடன் பயணிப்பதாகும். கடந்த ஆண்டுகளில் வீட்டின் பயணத் 'தடங்'களுக்கு உறுதுணையாக இருந்தவர்கள் பெரும் நன்றிக்குரியவர்கள். என்றென்றும் நெஞ்சில் நிறைந்திருப்பவர்கள்.

வீட்டியல் சார்ந்ததாக வெளிவந்த வீடானது, தாய்வீடாக வீச்சம் கொள்கின்ற வேளை கருத்தியல் தளங்களையும் விரிவுபடுத்தியிருக்கின்றது. மனித சமூகம் தொடர்பான தகவல்களுக்கும் ஆய்வுகளுக்கும் களம் கொடுக்கும் நோக்கில், தாய்வீட்டின் புதிய பரிணாமம் அமைகின்றது.

எழுத்துகளால் நிரப்பப்படுவது இதழாக இருக்க முடியாது. அதேவேளை தனக்குத் தெரிந்ததை எழுதுவது என்பதுவும் எழுத்தாக இருக்க முடியாது. சமூகத்தின் தேவையை உணர்ந்து, அத் தேவைக்குத் தீனியாகும் எழுத்துகளே காலப்பதிவாகின்றன. தாய்வீட்டின் வாசல்களும் இதுபோன்ற எழுத்துகளுக்காகவே காத்திதிருக்கின்றன.

இந்த நாட்டில் செயற்படுகின்ற ஊடகங்களுக்கு முதுகெலும்பாக இருப்பவர்கள் வணிகர்கள் என்பதை எவரும் மறுக்க முடியாது. தாய்வீடு இலவசமாக உங்களுக்கு கிடைக்கின்றது எனில் அதன் பின்புலமாக இருப்பவர்கள் வணிகர்களே. தொடங்கிய நாள்முதல் தொடர்கின்ற நாட்கள் எல்லாம் வணிகப் பெருமக்கள் பலரும் தாய்வீட்டோடு இணைந்தே இருக்கின்றனர். அவர்களுக்கும் எமது நன்றி.

காத்திரமாக பல களங்களைக் கொண்டதாக உருவெடுத்திருக்கும் தாய்வீடு வழமைபோல் மாதம் ஒன்றாக மலரும். வழமைபோல் தொடர்ந்தும் தாய்வீட்டிற்கு ஆதரவு வழங்குவீர்கள் என்ற ஆழமான நம்பிக்கையோடு இவ்விதழில் விடைபெறலாமா?

வீடு பத்திரிகையில் விளம்பரம் செய்வீர்.
வணிகத்தின் எல்லைகளை
விரிவாக்குவீர்!

416-400-6406

Publisher & Editor : P.J. Dilipkumar
பதிப்பாளர், ஆசிரியர் : பி.ஜே. டிலிப்குமார்

தொடர்புகள்:
For More Info: Editor
P.O.Box #63581
Woodside Squarew
1571 Sandhurast Circ.
Toronto, ON. M1V 1V0

Tel: 416.400.6406
Fax: 416.849.0594

Web: www.veedunews.com
e-mail:
info@veedunews.com

பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு. கனடியத் தமிழ் வானொலியில் ஒலிபரப்பாகி பின்னர் எமக்குத் தரப்பட்ட விளம்பரங்கள் இலவசமாகப் பிரசுரமாகின்றன. அவற்றின் சரிபிழைகளுக்கு நம்வீடு பொறுப்பல்ல. ஏனைய விளம்பரங்கள் இலவசமல்ல. ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.

உங்கள் பிள்ளைகளுக்கு

# வயது ஒன்பதா? அல்லது பதினைந்தா?



பகிரதன் சகாதேவன்
- வீடு விற்பனைப் பிரதிநிதி -

1998ம் ஆண்டு அரசாங்கத்தினால் கல்விச் சேமிப்புத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. இந்த கல்விச் சேமிப்புத் திட்டத்தின் முழுமையான பலனை அடைய பிள்ளை பிறந்தவுடன் இத்திட்டத்தை ஆரம்பிக்க வேண்டும். ஆனால் அனைவருக்கும் இத் திட்டத்தை ஆரம்பிக்க வசதி இருப்பதில்லை.

ஆனால், இன்றைய புதிய விதிமுறைகளின் படி வசதி குறைந்தவர்கள் மிகக் குறைந்த கட்டணத்துடன் இத்திட்டத்தை ஆரம்பித்து பலன்பெற முடியும். ஏற்கனவே இத்திட்டத்தை ஆரம்பித்தவர்களுக்கு!

9 வயதில்.

உங்கள் பிள்ளைகள் 9 வயதில் இருந்தால் அரசினால் வழங்கப்படும் மானியத்தை முழுமையாகப்பெற கடைசிச் சந்தர்ப்பம். பிள்ளைக்கு 10 வயதாகிவிட்டால் இந்த தொகையை முழுமையாகப் பெறமுடியாது.

200 டொலரை இலவசமாகப் பெறும் உரிமை வாய்ப்பை வசதியுடையவர்கள் பாவித்துக் கொள்வது நல்லது. இப்போது அரசாங்கத்திற்கு வரிசெலுத்தும் காலம். எப்படி வரிக்கழிவைப் பெறலாம் என்று சிந்திக்கும் நேரத்தில் இந்த வரியை அறவிட்டு அரசினால் திருப்பி உங்களுக குத் தரும் 7000டொலர்களை ஏன்தவறவிட வேண்டும்?

நாம் சேமிக்கும் பணத்திற்கு அரசு 20 வீதத்தை மானியமாக வழங்குகிறது. ஆகக் கூடியது 4000 டொலர்தான் ஒரு வருடத்தில் நாம் ஆர்.ஈ.எஸ்.பி இல் சேமிக்கலாம். 9வது வயதில் இத்திட்டத்தை ஆரம்பித்து, நாம் தவறவிட்ட வருடங்களை நிவர்த்தி செய்யலாம். (வருமானம் குறைந்தவர்களுக்கு வழங்கப்படும் மேலதிகத் தொகை கணக்கில் சேர்க்கப்படவில்லை.)

15 வயதில்

பிள்ளைகள் 15 வயதில் இருந்தால் ஆர்.ஈ.எஸ்.பி இனிமேல் போட்டு பலன் அடைய முடியாது என்று கருதுபவர்களும் உண்டு. முழுப் பலனையும் பெற முடியாவிட்டாலும் ஆண்டுக்கு 4000 டொலர்களைச் சேமிப்பதன்மூலம் 3 வருடத்தில் அரசாங்கம் வழங்கும் 2400 டொலர்களை அரசிடமிருந்து பெறமுடியும். 15 வயதிற்குப் பின் புதிதாக இத்திட்டத்தை ஆரம்பிக்க முடியாது.

அன்பளிப்பாக 25 டொலர்

நீங்கள் 37,178 டொலருக்கு வருமானம் பெறுபவராயின் - உங்களுக்கு 01.01.2004 இற்குப் பின் பிள்ளை பிறந்திருந்தால் மேலதிகமாக முதல் வருடம் 500 டொலர்களும் தொடர்ந்து 15 வருடத்திற்கு 100 டொலரும் (மொத்தம் 2000 டொலர்கள்) கிடைக்கிறது. அத்துடன் நீங்கள் ஆர்.ஈ.எஸ்.பி ஆரம்பித்து மேலதிக பணம் செலுத்த முடியாதவர்களும் ஒரு திட்டத்தை ஆரம்பித்துவைத்து, பின் வசதி வரும்போது சேமிக்கத் தொடங்கலாம்.

இன்று கனடாவில் 5ஆவது பணக்காரராக இருப்பவர் புலம் பெயர்ந்து சாதனை படைத்தவர். அவர் தனது திறமையால் பல இரும்புத் தொழிற்சாலைகளுக்கு அதிபதியாக உள்ளார்.

புலம்பெயர்ந்து வாழும் நாமும் சாதனை படைக்க நமது அடுத்த சந்ததிக்கு அடிப்படைக் கல்வி, உயர் கல்வியைக் கசடறக் கற்கவும், கடனின்றிக் கற்கவும் வழிசெய்வோம். அவர்களும் நாளைய சாதனையாளராக நம்மால் இயன்ற பாதையை அமைப்போம்.

■ ■ ■

inayam
www.inayam.net

ரொரன்ரோவில் நடைபெறும் சகல நிகழ்வுகளையும் பார்ப்பதற்கும் பதிவு செய்வதற்கும். இது முற்றிலும் இலவசமான சேவை!!



RBC Insurance
INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES

PAKEER
PAKERATHAN SAHADEVAN
Licensed Insurance Agent


வீடு வாங்க விற்க
Life Insurance (All kinds),
RESP/RRSP
Direct : 416.908.6003



Century 21
AFFILIATE REALTY INC.
BROKERAGE*
208-80 Corporate Drive,
Toronto, ON. M1H 3G5
Office : 416.290.1200



PAKEER
PAKERATHAN SAHADEVAN
Sales Representative




RELAX !!!
LET ME GET **YOU**
A BETTER DEAL

* Purchase
* Refinancing
* Self employed
* Bankruptcy ok
* 100% financing
* Bank turndowns
* Debt consolidation
* Challenged credit ok
* No income verification
* Less than perfect credit

**The Mortgage Centre**
Rajee works for you, not the lenders



**CE** 416.918.7346
**FX** 416.850.7060
riyadurai@rogers.com

**Rajee Iyadurai**
Mortgage Specialist

**Certain Condition may apply**

# எமக்கென்று ஒரு தனிக்குடில்



சொந்த இல்லத்திற்கு தேவையான அடமானத்தை சுலபமாகப் பெறுவதற்கு பலவருட அனுபவம் பெற்ற முகாமையாளர்களை நாடுங்கள்

**TWO PROFESSIONAL MORTGAGE SPECIALISTS UNDER ONE ROOF WITH RATES YOU CAN'T BEAT**

**MAILVAGANAM (MIKE) AHILAN**
Senior Accounts Manager
Residential Mortgages
(2004 Platinum Award winner)
**416-220-1184**

**VINCE SINNADURAI**
Senior Accounts Manager
Residential Mortgages
(2004 Platinum Award winner)
**416-917-9462**

**416.438.1688**

Fax: 416.438.1612
2250 Midland Ave., #3
(South of Sheppard)
Unit 3, Scarborough, ON M1P 4R9

RBC Financial Group

# புதிய வீடுகள்:

## வீடும் விடியலும் : அங்கம் - 14



வேலா சுப்ரமணியம்
- Certified Home Inspector -

### புதிய வீடுகளுக்கான உத்தரவாதம்: குறிப்பு:

கட்டிட அமைப்பாளர்களின் கட்டுப்பாட்டை மீறிய இயற்கையால் ஏற்படும் வெள்ளம், புயல் போன்ற அழிவுகள், வேலை நிறுத்தம் என்பனவற்றால் தாமதம் ஏற்படுமிடத்து அதற்கு ந‘ட ஈடு வழங்கப் பட மாட்டாது.

நு‘ட ஈடு:

கடந்த அத்தியாயத்தில் குறிப்பிட்டபடி அத்தகைய விதிகளை ஒரு கட்டிட அமைப்பாளர் மீறுமிடத்து அத்தகைய தாமதத்தால் ஏற்படக் கூடிய மேலதிக செலவுகளை கட்டிட அமைப்பாளர்களிடம் இருந்து பெறும் உரிமை வீட்டுக் கொள்வனவாளர்களுக்கு உண்டு.

*120 நாட்களுக்கு மேல் தாமதம் ஏற்படுமிடத்து ஒரு வீட்டுக் கொள்வனவாளர் தாமதமாகும் ஒவ்வொரு நாளுக்கும் $100.00 என்ற அடிப்படையில் தாமதமாகும் நாட்களுக்கு ஒரு மொத்தத் தொகையை வதிவிற்கான செலவு என்ற வகையில் ந‘ட ஈடாகப் பெற முடியும். அத்துடன் தாமதத்தால் ஏற்படக் கூடிய களஞ்சியச் செலவு, மேலதிக இடமாறச் செலவு என்பவற்றுக்காக $5,000.00 டொலர் வரை பெற முடியும்.

வதிவிற்கான செலவு: (Living Expenses)

வதிவிற்கான செலவு உடைமையாக்கும் திகதி (Date of Possession) பின்வருமாறு கணிக்கப்படும்:

1) ஜனவரி 1,2006 ற்கு பிந்திய closing 1 நாளுக்கு - 100.00 டொலர்

2) ஜனவரி 1,2005 - டிசம்பர் 31,2006 வரை 1 நாளுக்கு - 80.00 டொலர்

3) மே 1,2004 - டிசம்பர் 3,2004 வரை 1 நாளுக்கு - 60.00 டொலர்

மேற்குறிப்பிட்ட செலவீனங்களை ந‘ட ஈடாக பெறுவதற்கு விண்ணப்பிக்கும் போது முடிந்தளவு பற்றுச் சீட்டுக்களையும் இணைத்தல் வேண்டும் என்று அறிவுறுத்தப் படுகிறது.

தாமதப் படுத்தப் பட்டதால் ஏற்பட்ட மேலதிக வதிவிடச் செலவு உட்பட, மேலதிக களஞ்சியப் படுத்தும் செலவு, மேலதிக பொருள் ஏற்றி இறக்கும் செலவு என்பவற்றுக்காக ஆகக் கூடிய தொகையா $5000.00 டொலரை மட்டுமே ந‘ட ஈடாகப் பெறமுடியாது. உண்மைச் செலவு $5000.00 க்கு மேற்பட்டதாக இருந்தாலும் $5000.00 மட்டுமே ந‘ட ஈடாக வழங்க உத்தரவாதம் அளிக்கப் படுகிறது.

எப்போது இத்தகைய நஸ்ட ஈட்டிற்கு விண்ணப்பிக்கலாம்?

வீட்டு உரிமையாளர்கள் வீட்டைச் சொந்தமாக்கிய நாளிலிருந்து (Date of Possession) ஒரு வருடத்திற்குள் இத்தகைய நஷ்ட ஈட்டிற்கு விண்ணப்பிக்கலாம். அவ்வாறு விண்ணப்பிக்கும் போது உரிய பற்றுச் சீட்டுக்களுடன், குறிப்பிட்ட படிவத்தில் கட்டிட அமைப்பாளர்களுக்கும், பிரதியை "TARION" க்கும் அனுப்புதல் வேண்டும். இத்தகைய நஷ்ட ஈட்டைப் பெறுவதற்கு முன் வீட்டை சொந்தமாக்க வேண்டியது அவசியமாகும். (Close the sale) அதற்கு கட்டிட அமைப்பாளர் மறுப்புத் தெரிவித்தாலோ அல்லது உரிய படிவத்தை பெற்றுக் கொள்ளுவதற்கோ பின்வரும் இலக்கத்திற்கு அழைக்க முடியும்.

**" 1 877 - 9TARION "**

வீட்டு உரிமையாளர் உரிய நேரத்தில் கட்டிட அமைப்பாளர்களால் அறிவுறுத்தப் படாமலோ, அல்லது அனுமதிக்கப்பட்ட எல்லைக்கு மேலாகத் தாமதிக்கப் பட்டுவிட்டாலோ, அத்தகைய காரணங்களால் பாதிக்கப் பட்டிருக்குமிடத்து மேற்குறிப்பிட்ட அடிப்படையில் கட்டிட அமைப்பாளர்களுடன் தொடர்பு கொண்டு ந‘ட ஈட்டைப் பெற முடியும். கட்டிட அமைப்பாளர்கள் பெரும் பாலும் நிராகரிக்கச் சந்தர்ப்பம் இல்லை. அவ்வாறு அவர்கள் நிராகரிக்குமிடத்து "TARION" உடன் தொடர்பு கொண்டு உரிய படிவங்களைப் பெற்று ந‘ட ஈட்டிற்கு விண்ணப்பிக்கும் உரிமை வீட்டு உரிமையாளர்களுக்கு உண்டு.

## கொண்டோமேனியம்

கொண்டோமேனியம் வாங்குபவர்களது முடிவு திகதிக்கான நிபந்தனைகள் சாதாரண வீடு வாங்குபவார்களுக்கான நிபந்தனைகளிலிருந்து சற்று வேறு படுகின்றது.

கொண்டோமேனியங்களுக்குரிய தாமதப்படுத்தப் பட்ட வதிவிற்கான உத்தரவாதம்:-
Delayed Occupancy Protection for Condominiums
கடந்த இதழில் தனி வீடுகளுக்கான வதிவு தாமதப்படுத்தல் பற்றியும் அதற்கான உத்தரவாதம் பற்றியும் ஆராய்ந்தோம். ஆனால் கொண்டோமேனியத்திற்குரிய விதிமுறைகள் சற்று வேறுபடுவதால் இவ் இதழில் அதுபற்றி குறிப்பிடுகிறேன்.



கொண்டோமேனியம் ஒன்று வாங்கும் போது அதற்குரிய கொள்வனவு ஒப்பந்தத்தில் வதிவிற்குரிய தற்காலிக திகதி அல்லது உறுதிப்படுத்தப்பட்ட வதிவு திகதி குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கொள்வனவு ஒப்பந்தத்தில் தற்காலிக திகதி இருக்குமிடத்து அத் திகதியில் இருந்து 90 நாட்களுக்கு முன்னர் உறுதிப்படுத்தப்பட்ட திகதி எழுத்து மூலம் கொள்வனவாளருக்கு கட்டிட அமைப்பாளர்களால் அறிவுறுத்தப்பட வேண்டும். தவறுமிடத்து தற்காலிக திகதி உறுதிப்படுத்தப்பட்ட திகதியாக கருதப்பட்டு அத் திகதியின் அடிப்படையில் தாமதத்திற்கான ந‘ட ஈடு கணிக்கப்படும்.
உறுதிப்படுத்தப்பட்ட வதிவு திகதி வழங்கப்பட்ட பின்னர் கட்டிட அமைப்பாளர் விரும்பினால் ஒரு தடவை 120 நாள்வரை வதிவு திகதியை தள்ளிப் போடலாம். அவ்வாறாயின் 65 நாட்களுக்கு முன் எழுத்து மூலம் கொள்வனவாளருக்கு அறிவிக்கப்படல் வேண்டும். அத்துடன் 35 நாட்களுக்கு முந்திய எழுத்து மூல அறிவித்தலுடன் மேலும் 15 நாள் வரை தள்ளிப் போடும் உரிமை கட்டிட அமைப்பாளருக்குண்டு. சுருங்கக்கூறின் உரிய விதிகளுக்கமைய முன் கூட்டியே எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டால் 135 நாட்கள் வரை வதிவு திகதியைத் தள்ளிப் போடும் உரிமை கட்டிட அமைப்பாளருக்கு உண்டு.
உறுதிப்படுத்தப்பட்ட வதிவு திகதிக்கு முன்னர், "Earlier Occupancy" வதிவு திகதி கட்டிட அமைப்பாளர்கள் வழங்கப்பட்டால் அவற்றைக் கொள்வனவாளர் ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. எழுத்து மூலம் சம்மதம் பெற்றால் மட்டுமே அது நடைமுறைப்படுத்தப்படும்.
எப்போது ந‘ட ஈட்டிற்கு விண்ணப்பிக்கலாம்?

கொள்வனவாளர் வாங்கிய கொண்டோமேனியத்தில் வதிவினை ஆரம்பித்த பின்னரே இத்தகைய தாமதங்களுக்கான ந‘ட ஈட்டிற்கு விண்ணப்பிக்க முடியும்.

தாமதப்படுத்தப்பட்ட வதிவிற்கான ந‘ட ஈடு கோரல்.

கொள்வனவாளர் மேற்குறிப்பிட்டவாறு தாமதம் பற்றி உரிய விதிப்படி அறிவுறுத்தப்படாமல் விட்டாலோ அல்லது அனுமதிக்கப்பட்ட எல்லையைத் தாண்டி தாமதித்தாலோ, அதனால் ஏற்படக்கூடிய சிரமங்களுக்கு ந‘ட ஈடு கோரமுடியும். இத்தகைய ந‘ட ஈட்டை கட்டிட அமைப்பாளர்களுடன் பேசித் தீர்த்துக் கொள்வதே முதற் படியாக சிபார்சு செய்யப்படுகிறது. அதில் பிணக்குகள் ஏற்படுமிடத்து ஒரு கொள்வனவாளர் பின்வரும் இலக்கத்தை அழைத்து உரிய படிவங்களைப் பெற்று (Delayed Occupancy Package) ந‘ட ஈட்டிற்கு விண்ணப்பிக்கலாம்.

**" 1-877-9TARION "**

தற்போது ஒருவர் தற்காலிக வதிவிடச் செலவாக நாள் ஒன்றிற்கு $100 டொலர் வரை பெற வாய்ப்பு இருக்கிறது. அத்துடன் இத்தகைய தாமதத்தால் ஏற்பட்ட நேரடிச் செலவுகளாக களஞ்சியப் படுத்தல், மேலதிக போக்கு வரத்துச்செலவு என்பவற்றுக்காக மொத்தம் $5000 டொலர் வரை அறவிடலாம். ஆனால் இவற்றுக்கான பற்றுச்சீட்டுகள் சமர்ப்பிக்கப் படுதல் வேண்டும். ஜனவரி 1ந் திகதி 2006ம் ஆண்டிற்கு முந்திய வதிவிற்கான திகதியாக இருந்தால் (Date of Occupancy) தாமதத்தால் ஏற்படும் சிரமத்திற்கு அறவிடக்கூடிய ஒரு நாளுக்கான தொகை 100 டொலரிலும் குறைவானதாக இருக்கும். கடந்த அத்தியாயத்தில் இது பற்றிய விபரம் குறிப்பிடப் பட்டிருந்தது.

கொண்டோமேனியம் வாங்கும் போது ஏற்படக்கூடிய இத்தகைய பிணக்குகளுக்கு கொண்டோமேனியம் கொள்வனவு செய்யும் போது சட்ட வல்லுநர்களின் உதவியை நாடினால் உரிய முறைப்படி ந‘ட ஈட்டைப் பெறுதல் இலகுவாக அமையும்.

அடுத்த இதழில் இருந்து ஒரு புதிய வீட்டிற்குள் பிரவேசித்த பின்னர் இருக்கக் கூடிய உத்தரவாதம் பற்றி ஆராய்வோம்.

■ ■ ■

Home Inspection
Vela Subramaniam
Certified Home Inspector
Optimal Home Inspection Services
Tel:416-786-0760
416-299-0700
E-Mail:vela.ohis@gmail.com
Web:www.ohis.ca





ATEAM Towing
"Affortable and Trusted Services"
Light Towing
Flatbed
Carrier Services
Unlocking The Doors
Free Scrap Car Removal
Top Dollars For Your Unwanted Cars
Call Esan or Donald
Direct: 416-835-1700
525 Bloor St W
Toronto, ON , M5S1Y4
Dispatch: 416-642-TEAM (8326)

# வாழ்க்கை சுவர்க்கமாவது இனிய இல்லமொன்றில்...

### Tapscott/Nielson



**$85,000**

1 Bedrooms, 1 Washroom, 1 Bedroom Condo With Ensuite Laundry And Great Recreation Facilities. Steps To Shopping, Doctors Office and Library

### Tomken/Eglinton



**$99,000** Plus Stock

Convenience/Variety Store, C-Stone In A Very Demanding Developing Area. Steps To Lots Of Residential, Schools, Community Center, Tim Hortons Etc.

### Eglinton/Markham



**$127,000**

A Lovely Suite, Lowest Price -Act East, Excellent Location, Spacious 2Bdrms, Lovely View, Fridge, Stove,Parquet Floor,Underground Parking,Quiet Part Of Building

### Don Mills/Eglinton


**$131,900**

2 Bedrooms, 1 Washrooms, Condo, All Elfs, Existing Window Coverings, Fridge, Stove, Dryer, Window Air-Conditioner, Parquet Flooring, One Underground Space

### Eglinton/Kingston


**$144,900**


1+1 Bedrooms, 1 Washroom, Guildwood Terrace. Walk To 24Hr Grocery, Ttc At Door. Easy Access To Go Train. 24Hr Concierge, Great Facilities- Indoor Pool

### Fairview/Walkersline



**$230,000**

City Thai Fine Dinning Restaurant And Takeout For Sale In Prime Burlington Fairview Place Plaza, Price Includes All Equipment, Main Items Installed

### Kennedy/Sheppard



**$269,900**

2+1 Bedrooms, 2 Washroom, A++ Location Luxury Tridel Condo.Bright & Spacious,Tandem Parking/ Balcony/Solarium

### Sheppard/Washburn



**$279,000**

Gorgeous Bungalow, 4-Car Parking & Attached Garage. Lovely 2Br Bsmt Apt. With Separate Entrance.

### Kennedy/Sheppard



**$289,000**

3 Bedrooms, 3 Washroom, Unique, Central Location, Steps To Ttc, No Frills, Walmart, Minutes To Subway 401/404, Safe Street.

### Dufferin & Eglinton


**$315,900**

2+2 Bedrooms, 2 Washroom, Well Maintained Property W/ Pride Of Ownership.Close To Ttc,Schools & Amenities.

### Brimley/Denison



**$328,900**

3+1 Bedrooms, 3 Washroom, Great Location, Close To The Schools, Lots Of Upgrades, Extra Kitchen Cabinet, Recently Added With New Kitchen Counter.

### Pinegrove/Altona



**$329,900**

4 Bedrooms, 3 Washroom, The Sundance, Built By Garthwood Homes. All Brick Home In Desirable Location. Bright And Beautiful.

### Vic Park/Lawerence


**$329,900**

3+3 Bedrooms, 4 Washroom, Corner House Close To Schools And Other Facilities Main Floor Hardwood. All Elfs,2 Fridge, 2 Stoves, Dryer, Washer, Broiler Oven

### Warden/Lawrence


**$339,000**

3+2 Bedrooms, 2 Washrooms, Bright & Well Kept Home W/ Lots Of Upgrades, Attached Garage Plus Car Port, Side Entrance To Finished Basement.

### Sandalwood/Rattlesna



**$359,000**

4 Bedrooms, 3 Washroom, Nice Entrance With Large Fron Enclosure, Great Curb Appeal. Great Layout With All Wood Floors.

### Markham/Highglen


**$394,800**

4 Bedrooms, 4 Washroom, Excellent Location, 2200 Square Ft Double Door Entry Beautiful Decorated Plus Prof Finish Basement With Tons Of Pot Lights.

### 16th/Markham Bypass


**$419,000**

4 Bedrooms, 3 Washroom, 9 Feet Ceilings, 2511 Sqft, Hardwood In The Main Floor. 3 Months New Home. Professionally Repainted, Upgraded Bathroom.

### 9th Line /Main St


**$422,900**

4 Bedrooms, 4 Washroom, Spacious, Bright New Mattamy Home With, 4 Bathrooms And 2nd Floor Laundry Room, Spectacular Layout,

***New Retail/Restaurant Units Available for SALE/LEASE***

### Wilson/Skyview


**$444,900**

5 Bedrooms, 3 Washroom, Immaculate, Spacious& Open Concept Floor Plan!. Quality Halminian Home. Close To Public Transit, Shopping, Schools



digi Media Creations - 416.467.4952

**Elaguppillai (Mike) Srinathan,** B.Sc.

Sales Representative

**Direct: 416.276.1225**

esrinathan@trebnet.com

HOMELIFE
HIGHER STANDARDS

**HOMELIFE/GTA Realty Inc.** 1711 McCowan Rd., Suite 206, Toronto, ON M1S 3Y3

# புதுவீடு வாங்குவதும் வரி மீள்கொடுப்பனவும்

## Buying A New Home & Tax Rebate / Refund



T.M. கேசவன்
- Barrister & Solicitor -
Legal Practitioner

புதிதாக நிர்மானிக்கப்பட்ட வீடுகள் Goods And Services Tax (G.S.T.) வரிக்கு உட்பட்டது. அதுபோல் வீடுவாங்கும் இறுதித் தினத்தில் (Closing Day) ஒன்றாரியோ காணிப்பதிவுக் காரியாலயத்தில் உரித்து மாற்ற உறுதியைப்(Transfer) பதியும் போது வீடுவாங்குபவரினால் (Land Transfer Tax (L. T. T.) வரி மாகாண நிதி அமைச்சிற்கு செலுத்தப்படுகின்றது. எனினும், புதுவீடு வாங்குவதற்கான ஊக்குவிப்பாக(incentive) புதுவீட்டின் மீது (G.S.T.) வரிசெலுத்தும் போது வரிமீள் கொடுப்பனவை (G.S.T. Rebate) மத்திய அரசாங்கம் வழங்குகிறது. Land Transfer Tax Act சட்டத்தின் கீழ் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீட்டை தகுதியுடைய முதல்தரம் வீடுவாங்கும் ஒருவருக்கு ஒரு வரி மீள்கொடுப்பனவு (Land Transfer Tax Refund) கிடைக்கின்றது.

### காணிமாற்ற வரி மீள் கொடுப்பனவு (Land Transfer Tax Refund)

1996 ம் ஆண்டு மே மாதம் 8 ம் திகதியன்றோ அன்றி அதன் பின்னரோ நிகழும் புதுவீடுகள் கொள்வனவளவின் மீது வரி மீள் கொடுப்பனவு கிடைக்கின்றது. அதை பெறும் தகுதியை புதுவீடு கொள்வனவு செய்பவர் முதல்தரமாக வீடு வாங்குபவராக இருக்கவேண்டும் என்பதுடன் அந்த வீட்டை (House) அல்லது Condo வை ஒரு பிரதான வதிவிடமாக (Principal Residence) பாவிக்க வேண்டும். அந்த வீடுவாங்குபவர் குறைந்த பட்சம் 18 வயதுடையவராக இருப்பதோடு உலகத்தில் வேறு இடங்களில் ஒரு வீட்டின்மீது உரித்தைக் கொண்டிருக்கக் கூடாது.

### G.S.T. மீள்கொடுப்பனவு (G.S.T. Rebate)

G.S.T. மீள்கொடுப்பனவைப்(G.S.T. Rebate) பெறுவதற்கான தகுதியைக் கொண்டிருப்பதற்கு வீடு வாங்குபவர் தனிநபராக இருக்க வேண்டும். வீட்டின் முழுப் பெறுமதி $450.000.00 இற்கு குறைவாக இருக்க வேண்டும். மீள்கொடுப்பனவின் தொகை (Amount of Rebate) வீட்டின் பெறுமதி $350.000.00 லட்சத்திலும் அதிகரிக்க படிப்படியாக குறைகின்றது. G.S.T.மீள் கொடுப்பனவு கிடைப்பது வீடு கொள்வனவு செய்பவருக்கு தெரிவதில்லை. அதாவது, கட்டிடக்காரர்கள் உரித்துமாற்றத்தின் போது அதற்குரிய தொகையின் அளவை வீட்டு விலையிலிருந்து குறைத்து விடுவார்கள்.

### G.S.T.வீத குறைப்பும். நிலைமாற்ற மீள்கொடுப்பனவும் (G.S.T. Rate Reduction and Transitional Rabate)

2006 ம் ஆண்டு July 1 ம் திகதிக்கு பின்னர், ஆயிரக்கணக்கான வீட்டுச் சொந்தக் காரர்கள் தங்களது புது வீட்டிற்கும் Condo கும் சென்றதிலிருந்து கனடிய அரசாங்கத் திடமிருந்து மிகவும் மகிழ்ச்சிகரமான அதிர்ச்சியைப் (Surprise) பெற்றுக் கொண்டிருக்கின்றார்கள். இந்த அதிர்ச்சியானது வீடு வாங்கிய விலையில் உள்ளடக்கப் பட்ட G.S.T. வரியின் ஒரு கணிசமான மீள் கொடுப்பனவு (Refund) என்ற வடிவத்தில் வருகின்றது. 2006 ம் ஆண்டு May 2 ம் திகதிக்கு முன்னர், கட்டிடக்காரர்களிடமிருந்து புது வீட்டை வாங்கி அதன்உடமையையும் (Possession) அதன் உரித்து மாற்றத்தையும்(Title Transfer) 2006 ம் ஆண்டு கனடா தினத்திற்கு(Canada Day) பின்னர் வாங்கிய ஒவ்வொரு சொந்தக்காரர்களுக்கும் இது பொருந்துகின்றது. 2006ம் ஆண்டு July 1ம் திகதியிலிருந்து வீட்டுக்கொள்வனவை முடிவுக்குக் கொண்டுவந்த (Closing) பெரும்பாலான புதுவீடு/ Condo க்களை கொள்வனவு செய்தவர்கள், பெரும்பாலும் 2002ம் மற்றும் 2005ம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் தங்கள் கட்டிடக்காரர்களுடன் கொள்வனவு உடன்படிக்கையை செய்து கொண்டவர்களாவர். அவர்களில் அனேகமானோர் கடந்த வருட G.S.T.வரியின் 1% குறைப்பிலிருந்து நன்மையைப் பெறுவதற்கு தாங்கள் உரித்துடையவராக இருக்கின்றோம் என்பதையே மறந்துவிட்டார்கள்.

### புதிய G.S.T.வரி தொடர்பான வழிகாட்டல் (Guidelines) பின்வருமாறு:

**கேள்வி:** 2006 ம் ஆண்டு May 2 ம் திகதிக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட புதுவீடுகள் தொடர்பில் 6% வரி பிரயோகிக்கப்படுகின்றதா?

**பதில்:** இல்லை. ஆனால், 2006 ம் ஆண்டு July 1ம் திகதிக்கு பின்னர் சொத்துவமும் (Ownership) உடமையும் (Possession) மாற்றப்பட்டு(Closing) இருந்தால் வரி குறைப்பின்விளைவாக நிலைமாற்றக் கொடுப்பனவு(Transitional Rebate) அரசாங்கத்திடமிருந்து வீடு கொள்வனவு செய்தவருக்கு கிடைக்கின்றது.

**கேள்வி:** 2006ம் ஆண்டு May 2 ம் திகதிக்கு பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட புது வீட்டிற்கு என்ன வரிவீதம் பிரயோகிக்கப்படுகின்றது?

**பதில்:** 2006 ம் ஆண்டு July 1ம் திகதிக்கு பின்னர் சொத்துவமும் உடமையும் மாற்றப்பட்டிருந்தால் புதிய 6% வரி பிரயோகிக்கப் படுகின்றது.

**கேள்வி:** நான் 2006 ம் ஆண்டு July 1 ம் திகதிக்கு முன்னர் எனது கட்டிடக்காரர்களிடமிருந்து எனது Condo வின் உடமையைப் பெற்றதுடன் இறுதி விற்பனை (Closing)2006 ம் ஆண்டு July மாதத்திற்கு பின்னர் நடைபெற்றது. வரிக்குறைப்பின் நன்மையை நான் பெறுவதற்கு ஏதாயினும் வழி உண்டா?

**பதில்:** கனடா தினத்திற்கு முன்னர் நீங்கள் உடமை பெற்றதனால் நிலைமாற்றவரி மீள் கொடுப்பனவுக்கு நீங்கள் தகுதியுடையவராக இருக்க மாட்டீர்கள்.

**கேள்வி:** நிலைமாற்ற வரிமீள்கொடுப்பனவை (Transitional Rebate) நான் எவ்வாறு கோரிப்பெறுவது?

**பதில்:** நீங்கள் விண்ணப்பப் படிவத்தை நிரப்பி Canada Revenue Agency க்கு அனுப்ப வேண்டும்.

**கேள்வி:** எனது புதுவீடு $500.000.00. எனவே நான் புதியவீட்டு மீள்கொடுப்பனவை(New Housing Rebate) கோர முடியாது. ஆனால் நிலைமாற்ற மீள் கொடுப்பனவை(Transitional Rebate) பெற முடியுமா?

**பதில்:** நிலைமாற்ற மீள்கொடுப்பனவு புது வீட்டு மீள் கொடுப்பனவைப் பெறுவதில் தங்கியில்லை.

**கேள்வி:** 2006 ம் ஆண்டு July 1ம் திகதிக்கு பின்னர் எனது புதுவீட்டை நான் கொள்வனவு செய்தேன். $ 8,750.00 மீள் கொடுப்பனவு எனது வீட்டு விலையில் காட்டப்பட்டிருந்தது. நான் நிலைமாற்றி மீள் கொடுப்பனவிற்கு உரித்துடையவனா என் பதுடன் அது எவ்வளவு தொகை?

**பதில்:** ஆம். $ 2,240.00 நிலைமாற்றக் கொடுப்பனவை நீங்கள் பெறுகின்றீர்கள்.

**கேள்வி:** புது G.S.T.மீள் கொடுப்பனவு எவ்வாறு கணக்கிடப்படுகின்றது

**பதில்:** G.S.T.வீட்டின் அடிப்படை விலையின் 7% மாக இருக்கும் போது செலுத்தப்பட்ட G.S.T.வரியின் 36% ற்கு குறைவான தாக மீள் கொடுப்பனவு இருக்கும் என்பதுடன் அது $8,750.00. ஆகும் G.S.T. வரியானது வீட்டின் அடிப்படைவிலையில் 6% செலுத்தப்படுவதாக இருக்கும் போது செலுத்தப்பட்ட G.S.T.வரியின் 36% குறைவானதாக மீள் கொடுப்பனவு இருக்கும் என்பதுடன் அது $7,560.00 இருக்கும். "வீடு" என்ற பதம் ஒரு தனிவீட்டையும் Condo வையும் குறிக்கின்றது. கனடாவில் ஒரு புது வீட்டைக் கொள்வனவு செய்கின்ற ஒருவர் G.S.T./H.S.T.நிலைமாற்றக் கொடுப்பனவைக் கோருவதற்கு தகுதியுடையவராக இருக்கின்றார்கள். நிலைமாற்ற மீள் கொடுப்பனவைக் கோருவதற்கு நீங்கள் உரித்துடையவராக இருப்பின் கட்டிடக்காரர்கள் அவருக்காக கோர முடியாது. நீங்கள் தான் நேரடியாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

■ ■ ■

# கனடிய மக்களின் முயற்சியினால் ஈழத்தில் ஒரு மாதிரிக் கிராமம் உதயம்

கனடிய தாபனமான "ஸ்ரோன் லிமிட்டட்" மட்டக்களப்பு குடும்பிமலைப் பிரதேசத்தில் அமைந்துள்ள கூழாவடி கிராமத்தில் 100 வீடுகள் கொண்ட மாதிரிக் கிராமத்தை அமைக்கத் தொடங்கியுள்ளது..

"ஸ்ரோன் லிமிட்டட்" தாபனம் மிசிசாகா இந்து மகாசபையுடன் இணைந்து, ஈழத்தில் வடக்கு கிழக்குப் பிரதேச சமூக அபிவிருத்திச்சபை மூலமாக ஏற்கெனவே கடற்கோளினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 50வீடுகளை முடிவுசெய்து கொடுத்துள்ளது.

மிகுதி 50 வீடுகளில் 25 வீடுகளுக்கான ஆரம்ப வேலைகள் தொடங்கியுள்ளன. இந்தப் பணியின் பெரும் நிதி மின்னல் திரு.செந்தில்குமரனால் நடாத்தப்பட்ட "நிவாரணம் 2" நிகழ்ச்சி மூலம் கிடைத்துள்ளது.

ஆரம்பத்தில், அரியாலைக் கிராமத்தைச் சேர்ந்த சில அன்பர்களாலும் மட்டக்களப்பு வண.பிதா சுவாம்பிள்ளை அவர்களது வேண்டுகோளின் பேரிலும் முளைவிட்டு, அனைத்துத் தமிழ் அன்பர்களின் ஆதரவோடும் இந்தத் திட்டம் 50வீத வெற்றியுடன் முடிவுபெற்றுள்ளது.

கடற்கோளினால் பாதிக்கப்பட்ட ஈழத்தமிழ் மக்களுக்கு வெளி நாட்டு அரசாங்கங்களினால் அளிக்கப்பட்ட உதவிகள் போய்ச்சேரவில்லை என்பது யாவரும் அறிந்ததே.
இந்தக் கிராமத்தில் அமையவிருக்கும் மற்றைய 50 வீடுகளுக்கும் தலா 3,500




டொலர்கள் தேவைப்படுகின்றது. இந்தப் பணியை வெற்றியுடன் முடிக்க வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் ஒத்துழைப்பை அமைப்பாளர்கள் நாடுகின்றார்கள்.

இக் கிராமத்திற்கான மருத்துவ மனையை அமெரிக்காவிலுள்ள தமிழர்கள் நன்கொடையாகக் கொடுத்துள்ளார்கள். மாற்று வலுத்திறன் கொண்ட, கடற்கோளினால் பாதிப்புற்ற 92 குடும்பங்கள் இன்னும் குடியமர்த்த வேண்டிய நிலையில் உள்ளனர்.

கட்டப்பட்ட வீடுகள், கட்ட ஆரம்பித்துள்ள வீடுகளின் படங்கள் தேவைப்படின் மின்னஞ்சல்மூலம் அனுப்பிவைக்கப்படும்.

- தகவல் : நீல் சுரேந்திரன்

எலி, பூச்சித் தொல்லையா..?
RUBAN PEST CONTROL
• வீடுகள்
• தொடர்மாடி வீடுகள்
• தொழிற்சாலைகள்
• வியாபார நிலையங்கள்
ஆகிய அனைத்து இடங்களிலும்
எலி, பூச்சித்
தொல்லைகளை
அறவே நீக்க அழையுங்கள்!


KANTHAN
416•291•3997

# புதிய புலி...

3ம் பக்கத் தொடர்ச்சி...

கட்டுநாயக்கா வான்தளத் தாக்குதலின் போது புலிகளின் கலங்கள் இராணுவத்தின் எந்தவித ராடார் எச்சரிக்கைச் சாதனங் களையும் முடுக்காது (trigger) சுமார் 400 கி.மீ. வரை இரவில் பயணம் செய்து அதி பாதுகாப்பு வலயத்துக்குட் சென்று அலுவல் களைக் கச்சிதமாக முடித்துக் கொண்டு பாதுகாப்பாகத் திரும்பியுள்ளன. இராணுவப் பேச்சாளரின் பேச்சின்படி தங்கள் எச்சரிக் கைக் கருவிகள் முறையாகவே தொழிற்பட் டன எனப்பட்டது. ஆனாலும் எந்தவித எதிர் நடவடிக்கைகளும் நடைமுறைப்படுத்தப்பட வில்லை. இதற்கு காரணம் ஒன்றில் வான்தள வலயப் பாதுகாப்பு நடைமுறை கள் சீராக இல்லை அல்லது புலிகளின் தொழில் நுட்பம், சாதுரியம் போன்றன அதி மெச்சும் நிலையில் இருந்திருக்கலாம். பின்னது உண்மையானால் இலங்கையின் எந்தவொரு பாதுகாப்பு வலயமும் அச்சத் தோடுதான் இருக்க வேண்டும்.

சில வருடங்களுக்கு முன்னர் முல்லைக் கடலில் புலிகளின் ஆயுதத் தரையிறக்கத் தின் பின்னர் கண்டெடுக்கப்பட்ட கொள்கல மொன்றில் ராடார் சமிக்ஞைகளை உள் வாங்கும் (absorbing) தன்மையுள்ள வர் ணக்கலவை காணப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்திருந்தன. புலிகள் தமது அதிவேக படகுகளுக்கு இவ்வர்ணத் தைப் பூசுவதன் மூலம் ராடார் கண்காணிப் பில் சிக்காமற் தப்பித்துக் கொள்ளலாம். (அமெரிக்காவின் ஸ்ரெல்த் ரக விமானங் களின் வெளிப் பூச்சு இப்படியான வர்ணக் கலவையினாலானது) அது உண்மையா யின் புலிகளின் வான்கலங்களும் இப்படி யான கலவையைப் பெற்றிருக்கலாம். அல்லது 1967ம் ஆண்டு இஸ்ரேலிய வான் கலங்கள் எப்படி ராடாரின் கண்காணிப்பு வலயத்தின் கீழாற் பறந்து இராக்கின் அணு நிலையத்தைத் தாக்கியழித்தனவோ அதே போன்று புலிகளின் கலங்களும் செய்திருக் கலாம்.

எப்படியானாலும், புலிகளின் வான்படை அறிமுகம் ஈழப் போரரங்கில் புதிய சகாப் தத்தை உருவாக்கியுள்ளது. உள்ளூர் மற்றும் உலக அரங்குகளில் இது சாதக மானதும் பாதகமானதுமான எதிர்விளை- களைத் தோற்றுவிக்கப் போகிறது. தனது அயலில் ஒரு பலமானதும் சுயமானதுமான நாடொன்று உருவாகுவதை இந்தியா



புலிகளோ தமது தேவைகளைப் பெரும்பாலும் தாமே பார்த்துக்கொள்ளும் அளவுக்கு பரிணாம வளர்ச்சி பெற்றவர்கள். பெரும்பாலான ஆயுதங்களை அவர்கள் உற்பத்தி செய்து கொள்வது மட்டுமல்ல அவற்றின் வினைத்திறனை (efficiency) அதிகரிக்கும் அளவுக்கு ஆற்றலையும் பெற் றவர்கள்.

விரும்பாது. இஸ்ரேலைப் போல ஒரு நாடு உருவாவாகினால் எப்படியான உறவை அதனுடன் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற வகையில் வல்லரசுகளின் நிலைப் பாடுகளில் மாற்றம் ஏற்படலாம். ஆனாலும் புலிகளின் ஆட்சிக்காலத்தில் பிறிதொரு நாட்டின் தயவில் அது இருக்காது. எனவே அப்படியான ஒரு நாட்டின் உருவாக்கத்தை முளையிலேயே கிள்ளி எறியவே பல நாடு கள் விரும்பும். அந்த வகையில் புலிகளின் பலமே புலிகளுக்கு ஆபத்தாகவும் முடியும். எனவே புலிகள் தமது இந்த வெற்றியைக் கொண்டு பலச் சமநிலையை மீண்டும் உரு வாக்குவதே அனுகூலமானது. அதன் மூலம் ஒரு சமாதானத் தீர்வுக்கு இரு பகுதி யினரும் நகர்வது புத்திசாலித்தனமானது. இச் சந்தர்ப்பத்தை உணர்ச்சிவச அரசிய லாக்கி மகிந்த அரசு இராணுவ நடவடிக் கையை முடுக்கிவிட்டு பாரிய மனித அழிவுகளுக்குக் காரணமாகுமானால் அதை முறியடித்து தனிநாட்டை உருவாக்கும் பலம் புலிகளுக்கு இருக்கிறது என்பதை இவ் வான்தாக்குதல்கள் நிருபித்து விட்டன. ஏற்கனவே குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கும் பாகிஸ்தான், சீனா போன்ற நாடு கள் இலவசமாகப் புதிய (பழைய) வான் கலங்களை இலங்கைக்குக் கொடுத்து தாமும் பங்கு பற்றுவதன் மூலம் புலிகளை நசுக்குவதற்கு எத்தனிக்கலாம். அப்படி நேரும் பட்சத்தில் புலிகளின் தேர்வு இராணுவ நிலைகளிலிருந்து மக்கள் நிலை களுக்குத் திரும்பலாம். அப்படியாக ஏற்படு கின்ற பேரழிவின் பின்னர்தான் தீர்வொன் றுக்கான சாத்தியம் உருவாகலாம்.

புலிகளின் இத் தாக்குதல்கள் இராணுவ வெற்றிகளுக்குமப்பால் பல அரசியல் வெற்றிகளையும் ஈட்டிக் கொடுத்திருக்கிறது. புலிகளின் திறமைகள் மீது மக்களுக்கு அவநம்பிக்கை ஏற்பட்டு வருகிறதா என்ற சந்தேகத்தைப் போக்கி மக்கள் ஆதரவு அலையை மீண்டும் அவர்கள் பக்கம் திருப் பியிருக்கிறது. புலிகளின் ஆட்சேர்ப்பு வாய்ப் புக்களை அதிகரித்திருக்கிறது. குறிப்பாகத் தென்னிந்தியாவில் முடங்கியோ, முடக்கப் பட்டோ இருந்த ஈழத்தமிழராதரவை மீண் டும் தட்டி எழுப்பியிருக்கிறது. வெளிநாடு களில் பணச் சேர்ப்புக்கான வாய்ப்புகளை அதிகரித்திருக்கிறது. தென்னிலங்கை அரசி யல்வாதிகள் சிலரது கனவை நனவாக்கி யிருக்கிறது. வாகரை வெற்றிக்களிப்பினால் உருகிப்போய் அடுத்த தேர்தலுக்குத் தயா ராகும் ராஜபக்சவினரை ஆட்டம் காண வைத்திருக்கிறது. பிரபாகரனைத் தமது தலைவராகக் கனவு காணும் சிங்கள மக்களை அதிகரிக்க வைத்திருக்கிறது. இவை எல்லாவற்றையும் விட, புலிகளின் தமழீழத்துக்கான தயாரிப்பில் முப்படை களையும் உருவாக்கி செயலாற்ற வைத்த தன் மூலம் தனிநாட்டுக்கான அந்தஸ்த்தை அண்மிக்கும் தகமையைப் பெற்றிருக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக...

திறந்திருந்த சில வாய்களை மூடவும் மூடி யிருந்த பல வாய்களைத் திறக்கவும் வழி செய்திருக்கிறது.

இது புலிகளின் ஒரு எச்சரிக்கை மட்டுமே. இப்போதாவது சர்வதேசங்களும் சிங்கள தேசமும் சேர்ந்து ஒரு சுமுகமான தீர்வைத் தமிழருக்குப் பெற்றுக் கொடுக்கலாம். அது தவறும் பட்சத்தில் எம் ஆர் நாயராயண சாமி சொன்னதுபோல் துவிவண்டி தொடக்கிய ஈழப்போரை வான்கலங்கள் முடித்து வைக்கும்.

■ ■ ■



Buying or Selling Homes
Selling Commission As Low As 1%
Call For An Appointment Today

HomeLife Metro Realty
Inc. Brokerage

Call Nada

Nada.G.Nadarajah B.V.Sc
Sales Representative

416 – 616 - 8751

Platinum Award Winner
Ontario Emerald Club Member




Markham/Denison
2-Storey
4+1 Bedroom - 3 washroom
2, 900 Sq.Ft




Keele/Lawrence
Condo Apartment
2 Bedrooms - 2 Washroom




Taunton/Audley
Detached/2-Storey
4 Bedrooms - 3 Washroom
2 YEARS OLD!

EXCLUSIVE!




S-401/Morningside
Detached/2-Storey
4 Bedrooms - 3 washrooms
Custom Built | 2YRS OLD




Morningside/McClevin
Detached/2-Storey
3+2 Bedrooms - 4 washrooms
Walkout Basement Apartment




Markham/Elson
Detached/2-Storey
4 Bedrooms - 4 washrooms
3 Years Old!





Markham/Eglinton
Condo-Apartment
3+1 Bedrooms - 2 washroom




Birchmount/Finch
Condo/Townhouse
4 Bedrooms - 3 Washroom
Finished Basement


Ayurvedic Herbal Drink!!
Consitap
கொன்சிடெப்
கொன்சிடெப் மூலிகைப் பானமானது மலச்சிக்கலுக்கு எதிராக போட்டியிட சக்தி வாய்ந்தது. இதனை தினமும் ஆரோக்கிய பானமாக அருந்துவதன் மூலம் உடலிலிருந்து கழிவுப்பொருட்களை இயற்கையான முறையில் வெளியேற்ற முடியும். இது இயற்கை மூலிகையாக அறிமுகப் படுத்தப்பட்டு இருப்பதால் மூல வியாதியை குணப்படுத்தவும், வாயுப் பிரச்சனையால் எழக்கூடிய அடிவயிறு வலியினை தவிர்க்கவும், பசியை அதிகப்படுத்தவும் அத்துடன் உடலின் நீரோட்டத்தையும் தொழிற்பாட்டையும் ஒழுங்கு முறையில் நடாத்துவதற்கும் உதவுகிறது. கொன்சிடெப் மூலிகையானது பாவனையாளர்களுக்கு எவ்வித அசௌகரிய மின்றி சிறுநீர் கழிக்கக்கூடிய சக்தியை வழங்குகிறது.
Consitap is made to a highly specific Ayurvedic formula that has been timelessly secreted in Sri Lankan medicinal lore and contains a variety of natural herbal ingredients. Consitap can be used as a remedial medicine against constipation or generally consumed as an herbal tea to ensure the proper daily excretion of body refuse. Consitap also reduces abdominal pains and purifies the kidneys, allowing the consumer to pass urine without any discomfort. Consitap is a recognised natural herbal remedy against Arsus (Piles), and it also prevents gasses from causing abdominal aches, increases appetite and by ameliorating the body functions and flows, Consitap gives new life and energy to the body.
Diabina
டயபீனா
டயபீனாவானது தினமும் அருந்தக் கூடிய ஓர் மூலிகை ஆரோக்கிய பானம் அல்லது சக்தி வாய்ந்த ஓர் மருந்து. இது உடலின் மிகுதியான குளுக்கோஸினை குறைக்கக் கூடியதும், இரத்தத்திலுள்ள அதிகளவு குளுக்கோஸினால் ஏற்படக்கூடிய நோய்களை ஒழுங்கு முறையாக தடுக்கவும் உதவுகிறது. நீண்டகால நீரிழிவு நோயாளர்களுக்கு ஏற்படக்கூடிய உடலின் பாகங்களில் விறைப்புத்தன்மை, பாதங்களில் சுளுக்கு, நோயினால் சலித்து ஏற்படக்கூடிய அலட்சியத் தன்மை மற்றும் மீண்டும் மீண்டும் வரக்கூடிய வியாதிகளை படிப்படியாக நீக்கி விடக் கூடியது. டயபீனா வானது சுலபமான இரத்தோட்டத்தை வழங்கக் கூடியதும், உடலின் மிகையான குளுக்கோஸினை குறைக்கக்கூடியதும், இயற்கையான முறையில் உடலில் உள்ள குளுக்கோஸினை அளவை கட்டுப்படுத்தக் கூடியதும் என உத்தரவாதமளிக்கலாம். (டயபீனா கண்டிப்பாக நீரிழிவு நோயினால் வருந்துபவர்களுக்கு மட்டுமே)
Diabina may be consumed daily as an herbal health drink, or as a very effective medicine that reduces the levels of excess glucose in the body, systematically preventing diseases that are caused by high levels of glucose in the blood. Numbness, foot cramps, listlessness and other recurring ailments common to long-term diabetic patients are gradually eliminated. Diabina ensures the smooth flow of blood and reduces excess glucose, naturally controlling the levels of glucose in the body. (Diabina-Strictly for those suffering from diabetes)
Gluteala
க்லூட்டியலா
க்லூட்டியலா பானமானது மிகுதியான உடல் கொழுப்பை குறைக்கக் கூடியதும், குறிப்பாக உடலின் இடுப்பு, தொடை, தோற்பட்டை, கைகள் போன்ற பகுதிகளில் ஏற்படக் கூடிய ஊளைச் சதை பெருகுவதை தடுக்கவும், கொழுப்பினால் விளையக் கூடிய கேடுகளினை கட்டுப்படுத்தவும், உடல் வலியை நீக்கவும், அத்துடன் வாதத்தினால் ஏற்படக் கூடிய வலியினை குறைக்கவும் உதவுகிறது. க்லூட்டியலா உடலுக்கு புதுத்தெம்பைக் கொடுப்பதோடு நீண்ட சுகமான வாழ்விற்கும் வழி வகுக்கின்றது.
Gluteala is specifically produced to an Ayurvedic formula that has been timelessly secreted in Sri Lankan medicinal lore and contains only a variety of all-natural herbal ingredients. The age-old formula in Gluteala is known to have been used by Asian royal princesses to protect their natural beauty and Gluteala even today may be consumed daily as a herbal tea, or as a very effective medicine that protects and augments the natural physical beauty of the consumer. Gluteala is also highly efficient in reducing excess body fat, weight and the unnatural fattening of specific areas of the body such as waist, hip, thigh, shoulder, hands revitalising the physique and giving you new life and energy.
SOAP FREE Hand Wash
LongLife
லோங்லைவ்
லோங்லைஃப் ஆனது முற்றிலும் இயற்கையான மூலிகையினைக் கொண்டு இருப்பதால் இதனை தினமும் அருந்துவதன் மூலம் எமது சரீரத்தின் வெளித்தோற்றத்தையும் திடகாத்திரத்தன்மையையும் விருத்தி செய்து கொள்ளலாம். இருப்பினும் இது குறிப்பாக நோய்எதிர்ப்புச் சக்தியினை பலப்படுத்துவதற்கும், பசியை அதிகப்படுத்துவதற்கும் அத்துடன் அடிவயிறு உஷ்ணத்தை தடுத்து எரிவைத் தடுக்கவும், சிறுநீரக பிரச்சனைகளிலிருந்து நிவாரணமளித்து உடலிலிருந்து சிறுநீரகத்துடன் கழிவுப் பொருட்களையும் சீரான முறையில் வெளியேற்றத்தக்கதாகவும் தயாரிக்கப்பட்டுள்ளது. இம் மூலிகைப்பானமானது வியர்வையும், வியர்வையினால் எழக் கூடிய துர்நாற்றத்தையும் குறைக்கக் கூடியது.
LongLife is an all-natural herbal tea that improves physical appearance and stolidity when consumed regularly. LongLife, although specifically made to strengthen the immune system and increase the appetite, is also beneficial for relief from urinal and abdominal burns as it eases the flow of urine and body refuse. LongLife ayurvedic herbal tea reduces the perspiration and odour.
The ERVAMATIN™ HAIR LOTION
provides effective and fast therapy for hair loss
and its treatment ensures excellent therapeutic results.
Recommended as a treatment for
hair loss, hair regeneration, dandruff, alopecia,
thin Hair, baldness, fragile and dry hair.
Hair Lotion
Haarlotion
Ervamatin
200ml
SABONA
& Gift
www.mediherbs.ca
Tel: 416 264 8787
www.amazonhealthcare.ca
2602, Eglinton Ave East. (Midland/Eglinton)


HomeLife GTA
GTA Realty Inc., Brokerage*
HOMELIFE
HIGHER STANDARDS
"The Home Team"
Free Market Evaluation
Flexible Commission
Your peace of mind is our goal
Kumar Muthusamy
Sales Representative
Direct: 416.518.0118
muthus5@hotmail.com
Shan Thayaparan
Sales Representative
Direct: 416.567.7675
shan123@rogers.com
அளவான வீடு
இனிமையான இல்லம்
Right House is a Sweet Home
HOMELIFE
HIGHER STANDARDS
GTA Realty Inc., Brokerage
Bus: 416.321.6969
Fax: 416.321.6963
206 - 1711 McCowan Rd., Scarborough, ON. M1S 3Y3
Not Intended to solicit properties currently listed for sale or buyers under contract.
*Each office is Independently owned and oprerated.
Right house is a Sweet Home

எமது மனங்கனிந்த

புத்தாண்டு வாழ்த்துக்கள்



THE LAW OFFICE OF


Gary Anandasangaree

Tel: 416 321 1100 Fax: 416 321 1107


gary@galaw.ca

# எனது சேவை மிகவும் தரமானது! நாணயமானது! எனவே

# தயவுசெய்து என்னை யாரும் அழைக்க வேண்டாம்




**_Bramalea / Queen_**
3+1 Bedrooms,
2 Washrooms, Condo Town house, Starter Home At Affordable Price. Back To Park. Easy Access To Hwy 410,401, & 407.




**_Squre one (Mississauga)_**
2 Bedrooms,
2 Washrooms, Condo, Brand New Triumph Corner Unit. 880 Sqf. 9 Foot Ceilings. West Facing Corner Unit.




**_Jane/Finch_**
3+2 Bedrooms,
2 Washrooms, Detached Backsplit, Excellent Large 4-Level Back-Split On Big Lot. Wide Driveway Parking For Up To 6 Cars.




**_Brimly/Lawrence_**
3+1 Bedrooms,
3 Washrooms, Semi-Detached Bungalow, Central Air, Light Fixtures, More Than $25,000 Upgrades, All Window Coverings And Garden Shed

Price Reduced

Esso

**BRAND NAME GAS STAION WITH PROPERTY**
Gas Volume-3.5 Mill
Convenience Store- $9,000-$10,000/ Week
Apartment Rental Income
Restaurant
Tim Hortans Possible




**BAR AND GRILL (Pickering)**
Monthly Sales over 60,000.



**Veriety and Gift Store (Porthope)**
Monthly Sales over 50,000/ Grwoing up.
Rent 1,800.

## _UTHAYAN NADARAJAH_
_Broker_

**Cell: .416.727.9945**



UTHAYA

ROYAL LEPAGE
Credit Valley Real Estate Brokerage
104-44 Peel Centre Drive, Brampton, L6T 4B5. Tel: 905.793.5000

# வீடு வாங்குவது இலகுவாக்கப்பட்டுள்ளது.



ராஜா மகேந்திரன்
- வீடு விற்பனை முகவர் -

இந்தக் காலகட்டத்தில் முதல் தடவையாக வீடுவாங்குபவர்களுக்கு முன்னைய காலங்களில் வீடு வாங்குவதை விட இலகுவாக்கப்பட்டுள்ளது. வீட்டின் விலை அதிகரிக்கின்றது. வீடு கட்டுவதற்குப் பாவிக்கப்படும் பொருட்களினதும் மூலப் பொருட்களினதும் விலை ஏறிச் செல்கின்றது. நிர்மாணம் செய்யப்படும் இடத்தின் (நிலம்) விலை அதிகரிக்கின்றது. தொழில் புரிவதற்குப் போதிய ளவு அனுபவமிக்கவர்களைக் கண்டு பிடிப்பது மிகக் கடினமாகக் காணப்படுகின்து. இதனால் தொழில்புரிபவர்களின் ஊதியம் அதிகரித்தே செல்கின்றது. மாநில அரசு அடிப்படைச் சம்பளத்தை அதிகரிக்கத் தீர்மானித்துள்ளது. இவ்வாறு நிர்மாணத் துறையில் ஒவ்வொரு செய்கைகளுக்குமான செலவு மாதாமாதம் அதிகரிக்கும்போது எவ்வாறு முதல் தடவை வீடு வாங்குபவர்களின் நிலைமை இலகுவாக்கப்படுகின்றது?

**இதற்குப் பல காரணங்களை முன்வைக்கக்கூடியதாக உள்ளது.**

**1. Low interest rate**

இன்றைய காலகட்டத்தில் அடமானம் எடுப்பதற்குரிய அடமான வட்டிவீதம் சரித்திரத்திலேயே குறைவானதாகக் காணப்படுகின்றது. நிதி நிறுவனங்களின் வியாபாரப் போட்டி மனப்பான்மையால், சிறந்த வட்டி வீதத்தை நுகர்வோர் பெறக்கூடியதாக உள்ளது. உதாரணமாக 5 வருடத்திற்கு வட்டி வீதத்தை 5சத வீதத்திற்குக் குறைவாக பெறக்கூடியதாய் உள்ளது. சில நிபந்தனைகளுடன் இதனைவிடக் குறைவாகவும் பெறக்கூடியதாக உள்ளது

**2. Zero down payment**

எதுவித ஆரம்ப முதலீடும் இல்லாமல் வீடு வாங்கக்கூடிய வசதிகள் செய்து தரப்பட்டுள்ளது. முன்பெல்லாம் குறைந்தது 5 வீத ஆரம்ப முதலீடு எதிர்பார்க்கப்பட்டது. அதிக மாதச் சம்பளம் எடுக்கும் பலருக்கு ஆரம்ப முதலீடு சிக்கலாக இருந்ததால், தொடர்ந்து வாடகை வீட்டிலேயே தமது வாழ்க்கையை நடாத்திக் கொண்டு வந்தனர். ஆரம்ப முதலீடு இல்லை என்பதனைப் பாவித்து, தமது முதல் வீடு வாங்கும் சந்தர்ப்பத்திற்கு



பலர் உருவாக்கப்பட்டுள்ளனர். புதிதாகப் பட்டப்படிப்பை முடிப்பவர்களிடம் ஆரம்ப முதலீடு கிடையாது. இவர்களுக்கு zero down payment தகுந்த வசதியை அமைத்துக் கொடுத்துள்ளது.

**3. Interest only payment**

வட்டியை மட்டும் செலுத்தும் அடமானக் கடன். இதனால் வீடு வாங்குபவர் மாதாமாதம் பெறப்பட்ட கடனுக்கு வட்டியை மட்டும் செலுத்திக்கொண்டே இருக்கலாம். இந்த வசதியால் மாதாந்தக் கட்டணம் குறைக்கப்படுகிறது. உதாரணமாக, $ 350,000 இற்கு 6 வீத வட்டி வீத்தில் அடமானம் பெறுபவர் 25 வருட திருப்பிக்கொடுக்கும் காலக் கடனில் மாதாந்தக் கொடுப்பனவு வட்டியும் முதலுமாக 2240 டொலர்கள் ஆகும்.

இதே நபர், வட்டி மட்டும் மாதாமாதம் செலுத்துபவராகஇருந்தால் அவரது மாதாந்தக் கொடுப்பனவு 1750 டொலர்களாகும். ஒவ்வொரு மாதமும் இவர் $ 490 குறைத்துக் கொடுப்பனவு செய்யக்கூடியதாகக் காணப்படுவதால், இவரின் மாதப் பழு குறைக்கப்படுகிறது.

**4. Longer Amortization**

25 வருட கடன் திருப்பிக் கொடுக்கப்படும் காலமே நீண்ட காலமாக இருந்துவந்தது. கடந்த ஆண்டு (2006) 30 வருட அடமானக் கடன் திருப்பிக் கொடுக்கும் காலம் கொண்டுவரப்பட்டது.
இத்துடன் இவ்வருடம் (2007) இந்தக் காலம் 40 வருடங்களாக மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் மாதக் கட்டுப்பணம் குறிப்பிட்டளவு குறைக்கப்படுகின்றது.

உதாரணமாக, $ 400,000 க்கு வீடு வாங்கிய ஒருவர், $ 350,000 அடமானக் கடன் பெற்றால், 25 வருட திருப்பிக் கொடுக்கும் காலத்தில் 6 வீத வட்டி வீதத்தில் மாதாந்தக் கொடுப்பனவு 2,240 ஆகும். இதே நபர், 40 வருட திருப்பிக் கொடுக்கும் காலத்தில் மாதாந்தக் கட்டுப்பணம் $1908 ஆகும். மாதாந்த சேமிப்பு $ 332 ஆகும். வருமானம் குறைந்தவர்களும் வீடு வாங்கக்கூடிய வசதிகள் உண்டு

**5. New Imigrant, No Regular Salary**

ரக்சி ஓட்டுனர், வெயிட்டர், வெயிற்றஸ் போன்ற தொழில் புரிபவர்கள் தமது மாதாந்த வருமானத்தை நிரூபிப்பது சிக்கலாக இருக்கும். அத்துடன், புதிதாக இந்நாட்டில் குடியேறியவர்கள் கடன் சரித்திரத்தைக் காட்ட முடியாது. இவர்களுக்கும் இப்பொழுது அடமானம் எடுப்பதில் சில நெகிழ்வுகள் காணப்படுகின்றன.

மேலே குறிப்பிட்ட காரணங்களினால், புதிதாக வீடு வாங்குபவர்களின் இன்றைய நிலைமை முன்னைய காலங்களை விட இலகுவாக்கப்பட்டுள்ளது. இந்த சாதகமான நிலைமைகளை எவ்வளவு மக்கள் பாவிக்கின்றார்கள்?

புதிதாக வீடு வாங்குபவர்களை ஊக்குவிப்பதற்குப் பல வசதிகளை, ஏன் நிதி நிறுவனங்கள் உருவாக்குகின்றன? கூடியளவு நுகர்வோரை உருவாக்குவதற்காகவே! வீட்டின் விலை அதிகரிப்பால் பலரும் வீடு வாங்குவதைத் தற்காலிகமாகத் தள்ளிப் போடுவதைத் தடுப்பதற்காகவே இவ்வாறு செய்யப்படுகின்றது. அத்துடன், வட்டி வீதம் மட்டுமான கொடுப்பனவு, நீண்ட கால Amortization போன்றவற்றால் நிதி கொடுக்கும் நிறுவனங்களே கூடியளவு பணத்தை உழைக்கின்றன. அத்துடன் காப்புறுதியின் அளவும் அதிகரிக்கப்படுகின்றது.

மொத்தத்தில் யாவும் வாங்குபவரையே நீண்டகாலக் கடனாளி ஆக்குகின்றது. அத்துடன் மேலதிகமாக அதிக பணம் செலுத்தவேண்டியுமுள்ளது. இதனால், வீடு வாங்குபவர்கள் தமது வசதியைக் கருத்தில் கொண்டு எந்தவிதமான வசதியைப் பாவித்து வீடு வாங்குவது சிறந்தது என முடிவு எடுப்பதே சிறந்தது.

■ ■ ■

HiTech
Home Inspection

"A Professional Home Inspection Service for Your Protection"

We offer the following Services;

- Mold Inspection
- Air Quality Inspection
- Pre-Purchase Inspection
- Pre- Listing, Sale and Renovation Inspections
- Problem Solving Inspection
- Inspection of relatively new homes as warranty expire
(1st, 2nd and 7th year, from the day you moved in)

உங்கள் புதிய வீட்டின் 1ம், 2ம், 7ம் வருட உத்தரவாதம் முடிவதற்கு முன் வீட்டைப் பரிசோதிப்பதால், உத்தரவாதத்திறகுட்பட்ட பிழைகளை அறிந்து, செலவின்றித் திருத்திக் கொள்வதற்கு, தகுதியான பரிசீலினையைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள்.

IAC2 CERTIFIED Mold CERTIFIED



The World's Elite Inspectors
NACHI National Association of Certified Home Inspectors

Andrew Marioselva C.H.I
Member of National Association of Certified Home Inspectors (NACHI)
Member of International Association of Certified Indoor Air Consultants (IAC2)

T: 416 829 0082 C: 416 822 8876 F: 905 948 9216
E: amarioselva@on.nachi.org

## உலகத்தமிழர் சமூகநூலகம் விடுக்கும் அறிவித்தல்

### ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோருக்கான பகிரங்க வேண்டுகோள்

அன்புடையீர்!

நூலகத்தினைப் பயன்படுத்துதல்

ஆசிரியர்களும், கல்விகற்கும் மாணவர்களும் பயன்பெறும் வகையில் எமது நூலகத்தில் 13,500க்கும் மேற்பட்ட நூல்கள் உள்ளன. நீங்கள் ஒவ்வொருவரும் நூலகத்துக்கு வருகைதந்து நூல்களை எடுத்துப் படித்துப் பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இது விடயத்தில் ஆசிரியர்களினதும், பெற்றோர்களினதும் ஊக்குவிப்பு முக்கியமானதெனக் கருதுகிறோம்.

1. சிறுவர்களுக்கான நூல்கள் 1,000க்கும் மேல் உள்ளன.

2. திறமைச் சித்திபெறும் நோக்குடன் தமிழ்மொழி வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கு 6,000க்கு மேற்பட்ட தமிழ்மொழி சம்பந்தமான நூல்கள் உள்ளன.

3. ஆசிரியர்கள் மற்றும் இளங்கலைத் தமிழியல் (B.A. Tamil) வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கென 7,500க்கு மேற்பட்ட நூல்கள் உள்ளன.

புலம்பெயர்ந்த எம் மக்கள் பயன் கருதியே இந்நூலகம் உருவாக்கப்பட்டது. அதனை முழு அளவில் பயன்படுத்தி அறிவைப் பெருக்கிக்கொள்வது உங்கள் ஒவ்வொருவரினதும் கடமை என்றே கருதுகின்றோம். காலம் கடந்தபின் யோசிப்பதில் பயன் இல்லை.

நிறைந்த பயன்பெற வாரீர்!

தொடர்புகளுக்கு: 416 335 0622
நூலகர்
உலகத்தமிழர் சமூக நூலகம்


Why ME!
Friendly, Confidential and Professional Service !
Scarborough:
4 bedrooms, 3 washrooms, Almost 2000 SQF, Hardwood floor on the main floor
379,900
4 bedrooms, 3 washrooms, walkout basement, Close to TTC
398,900
4 bedrooms, 3 washrooms, 2690 SQF, Less than 2 years old
448,800
4 bedrooms, 3 washrooms, 2700 SQF, Separate entrance to basement, Hardwood floor on 1st and 2nd floor.
489,900
5 Bedrooms, 4 washrooms, Almost 3000 SQF, Hardwood floor on 1st and 2nd floor, Lot of upgrade. Close to TTC.
455,000
Markham:
3 bedrooms, 3 washrooms, 2 years old, Freehold town house
ASKING $299,000
3 bedrooms, 3 washrooms, Almost 1 year old,
ASKING $309,900
3 Bedrooms semi, Separate entrance to basement, Almost 1800 sqf,
ASKING 325,000
3 bedrooms, semi, close to go train, schools,
ASKING $335,000
4 bedrooms detached, only 6 month old,
ASKING $393,000
Scarborough bungalows:
3+2 Bedrooms, 2 Kitchen and Separate entrance Minutes to schools and TTC
Open house Sunday 2 to 4 pm
ASKING $349,900
Businesses for sale:
SMOKERS CORNER
Convenience store in Oshawa for sale (Ritson / Taunton Rd) $15,000 /week sale
ASKING $129,000
Convenience store in Oshawa for sale (King/Wilson) $16,000/week sale
ASKING $149,000
Plaza for sale Toronto Good income. Monthly income $12,300
FOR SALE 1,700,000
Quiznos Sub MMMM...TOASTY!
OKVILLE, Weekly sales $7,000 Asking 225,000
MARKHAM, Weekly sale $8,500 Asking 329,000
Brampton:
4+2 bedrooms, 2500 sqf, Finished basement with 2 bedrooms, 2 kitchens, Less than 3 years old, Close to hwy 50,
399,900
5 bedrooms luxury dream home, More than 3000 SQF, Mcvean&Queen (Hwy 7),
619,900
Photo Not Available
For sale 369,000
Vacant land in Ajax, 2.69 Acres. Build your dream home.
Dry clean/Laundry business for sale. Scarborough, Sales monthly $27,000 Longlease
Investment property, Ground floor coffee and donut shop and basement leased for $1,600/month + utilities, Upstairs 2 separate apartments, rented for $1,700 /month.
BUILDING AND THE BUSINESS FOR SALE $399,000.
GOLD CLUB MEMBER 2005
PLATINUM CLUB MEMBER 2006
HOMELIFE HIGHER STANDARDS
Homelife GTA realty Inc., Brokerage *
*Independly owned and operated
Buy or sell commercial and/or residential properties Call
Large Banquet hall
4 banquet halls in one building, total of 26,000 SQF, with kitchen, cooler, freezer.
Capacity over 1000 people.
Call me for details.
Financing can be arranged.
THANA SUSENDRA
Sales Representative
Office 416 321-6969
CEll 416 893-4376
1711 McCowan road, Suit #206, Scarborough,on.
Lucky draw for new car and some other prices will be on August 2007
Some conditions apply. Not intend to solicit properties currently listed for sale.

# துளிர்கால வெள்ளம்

செந்தூரன் புனிதவேல்
- காப்புறுதி முகவர் -

இப்போது துளிர்கால ஆரம்பம். இது, எல்லோருக்கும் மனமகிழ்ச்சியைத் தருவதுடன் வீட்டுப் பராமரிப்பிலும் சற்று உற்சாகமாக ஈடுபடவைக்கும் காலமாகும்.

இக்காலத்திற்கே உரிய மழைவீழ்ச்சியுடன், கரைந்துசெல்லும் பனியுமாக பள்ளமான இடங்களில் வெள்ளம் நிறைவதற்கு அதிகமாகவே சந்தர்ப்பமுண்டு. இப்படி நிறகும் நீர்நிலைகளால் நிலநீர் மட்டம் உயர்ந்து வீட்டின் பேஸ்மன்றிலும் நீர் நீச்சல் தடாகமாகும் சந்தர்ப்பமுண்டு.

பனி கரைவதாலும், பெரு மழை பெய்வதாலும் பேஸ்மன்றில் தண்ணீர் வெடிப்புகளுக்கூடாக நீர்ப் பொசிவு ஏற்படலாம். சில வேளைகளில் இப்படி வரும் நீரால் ஏற்படும் நட்டத்தை காப்புறுதி தர மறுக்கவும் கூடும். அப்படி மறுப்பதற்கான முக்கிய காரணம் நல்ல நிலையில் உள்ள வீட்டில் நீர் உள்ளே வரமுடியாது. எனவே, வீட்டுப் பராமரிப்பில் குறை இருப்பதால் தான் நீர் உள்ளே வந்துள்ளது எனத் தீர்மானிக்கக் கூடும்.

இப்படியான அதிர்ச்சி வைத்தியம் தரப்படாதிருக்க நீங்கள் உங்கள் முகாமையாளருடன் தெளிவாக எவை காப்புறுதி ஈடுசெய்யும், எவை காப்புறுதி ஈடு செய்யாது என்பதைக் கேட்டு அறிவதுடன் அவர்கள் தரும் உடன்படிக்கைப் புத்தகத்தை வாசிப்பதுடன் விளங்காதது ஏதுமிருப்பின் அவற்றைக் கேட்டுக்கொள்வதும் அவசியம்.

துரதிஸ்டவசமாக நீர்க்கசிவு ஏதும் ஆரவார சத்தமின்றி அமைதியாக நடப்பதினால், வீட்டு உரிமையாளர் அறியாமலே வீட்டின் அடித்தள அறைகள் ெள்ளத்தால் நிரம்பி விடலாம். இவற்றைத் தவிர்ப்பதற்கான ஐந்து யோசனைகள் கீழே தரப்பட்டுள்ளன:

உங்கள் காணியின் சுற்றுப்புறத்தை சமன் செய்யும் வேளையில் (Landscaping) மண் வீட்டின் சுவரிலிருந்து வேலி நோக்கி சரிவாக வைப்பது அவசியம். புதுவீடுகளில் மண் சரிவு வீட்டிலிருந்து வேலி நோக்கி சரிய இருப்பதை அவதானித்திருப்பீர்கள். ஆனால், காலம் செல்லச் செல்ல மண் கழுவுப்படுவதாலும், இறங்குவதாலும் சமதளமாக அமைந்துவிடுகிறது. இந்நிலையில் சுவரோடு மண் குவித்து, அதை சாய்தளமாக அமைப்பது அவசியம்.




வீடுகளின் கூரையிலிருந்து வடியும் நீர் எளிதாக வீட்டில் இருந்து சற்றுத் தூரம் ஓடி, பின் வெளிவரவேண்டும். அடியில் உள்ள பகுதி உடைந்து விட்டால் அது தேவையில்லை என்று எறிய வேண்டாம். அதை நல்ல காரணத்துடன் தான் பூட்டியுள்ளார்கள். மேலும், வடிகுழாய்கள் அடைத்து அல்லது வெடித்திருந்தால் அவற்றை உடனே நேர்செய்துவிடுங்கள்.

மழைநீரை உங்கள் காணியுள் உள்ள பூஞ் செடிகளுக்குச் செலுத்துவது சுற்றாடலுக்கு பயன்தரும் விடயமாகும்.

உங்கள் வீடு மிகப் பழமைவாய்ந்த வீடானால், அடித்தள அறையில் ஒரு மின் நீர் இறைக்கும் கருவியை வைத்திருப்பது நலம். ஆனால், பொதுவாக ரொறன்ரோ நகரில் இதற்கான அவசியம் இல்லை என்பது குறிப்பிடத் தக்கது.

காலத்துக்குக் காலம் அடித்தள அறையை நோட்டம் விடுங்கள். சுவர்களில் வெடிப்பு அல்லது நீர்க்கசிவு தோன்றினால் உடனே அதற்குத் தக்க பரிகாரம் செய்ய உதவும். ஏதும் குறை காணப்பட்டால் காலம் தாழ்த்தாது உடனேயே அதற்குத் தேவையான திருத்த வேலைகளைச் செய்து பெரும் நட்டத்தைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

நீங்கள் எப்போதும் மனதில் வைத்திருக்க வேண்டிய விடயம் என்னவென்றால் காப்புறுதி எதிர்பாராத நட்டத்தை ஈடு செய்வதன்றி, கவனயீனத்தால் வரும் நட்டத்தை ஈடுசெய்யாதென்பதுடன், அப்படி ஈடு செய்யவும் முடியாது. அல்லாவிடில், வீட்டு உரிமையாளர்கள் தமது வீடுகளைப் பராமரிப்பதைவிடுத்து, காப்புறுதி செய்யட்டும் என்று இருந்துவிடுவார்கள்!

அடுத்தடுத்த கட்டுரைகளில் மற்றைய பராமரிப்பு வேலைகளைக் கவனிப்போம்.

■ ■ ■

## ஆஸ்திரியாவின் முன்னாள் அரண்மனை விற்னைக்கு



19 நுாற்றாண்டைச் சேர்ந்த இந்த அதிபர் மாளிகளைில் நான்கு ஆஸ்திரிய அதிபர்கள் தங்கிச் சென்றிருக்கிறார்கள். அதன் விலை 6 மலில்லியன் டொலர்கள்தான். 750 சதுர அடிதான் அரண்மனை. ஆனால் தோட்டம் 10 ஆயிரம் சதுர அடி. அப்ப சொத்து வரி கனக்கக் கட்ட-வேண்டியிருக்கும். சோலை வரி என்னமாதிரி ஆஸ்திரியா-விலை என்பது தெரிய வில்லை. 2004 இலிலிருந்த ஒருவரும் இல்லாமல் இருக்-கும் இந்த அரண்மனையை வாங்க-விரும்பினால் மே மாதம் 24 ஆவது திகதி வரை நீங்கள் முயற்சிக்கலாம்.

A JEWEL OF THE ROUGE $388,000




Enjoy the view and the tranquillity of the Rouge Park from the comfort of your home in the city.

Premium lot backing onto pond. 1 ½ years new. 1.800 sq foot aprox . 4 Bedrooms, 2 ½ Bathrooms, Walk-in closet in Master bedroom, 2 car driveway with a distinctive interlocking stone, 1 indoor garage with direct entrance from garage to the house, Beautiful front yard landscaping, fenced backyard, Un-finished basement with private separate entrance, Rough-in 3 pcs Bathroom and enlarged windows in the basement. Hardwood floors (beautiful Kempas thicker and wider wood strips) in the Living Room, Dinning Room and Family Room. First floor recently painted with gorgeous neutral Colors, Eat-in Kitchen, Laundry on second floor, Rough-in Central Vacuum and Central Air, Close to the Toronto Zoo, University of Toronto at Scarborough, Hospital, Schools, Shopping Malls and TTC.

Call me today to view this property.

Ken Kurpa
Sales Representative

Re/Max Crossroads Realty, Brokerage
Office 416.491.4002
Cell 416.294.9322






## பணத்தை மீளப்பெறுவதற்கான புதிய ஆயுட்காப்புறுதித் திட்டம்

New "Guaranteed Return" whole Life Insurance

ஆயுட்காப்புறுதித் தொகையின் அரைவாசித் தொகை 65ஆவது வயதில் மீளப் பெறமுடியும். மரணம் ஏற்பட்டால் கட்டிய பணம் முழுவதும் ஆயுட்காப்புறுதித் தொகையுடன் சேர்த்து வழங்கப்படும்.

**சேமிப்புடன் கூடிய நிரந்தர ஆயுட்காப்புறுதி**
(Universal Life Insurance)

**வைத்தியப் பரிசோதனை இல்லாத காப்புறுதி**
(Non Medical Life Insurance)

**கொடிய நோய்களுக்கான காப்புறுதி**
(Critical Illness Insurance)

**குழந்தைகளின் உயர் கல்விக்கான சேமிப்புத் திட்டம்**
(RESP)

கனடாவின் சிறந்த காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து உங்கள் வசதிக்கேற்ப குறைந்த செலவில் காப்புறுதி பெற்றுக் கொள்ளவும் மற்றும் காப்புறுதி சம்பந்தமான அனைத்து ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.

LILAND INSURANCE INC.

RBC Insurance



## சிறீதரன் துரைராஜா

காப்புறுதி முகவர் (Insurance Broker)

**416.918.9771**

759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407

digi Media Creations

**உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும் ஓர் பாதுகாப்பு...**

# ஆயுட் காப்புறுதியும் நாம் பெறும் நன்மையும்



சிறிதரன் துரைராஜா
- ஆயுட் காப்புறுதி முகவர் -

ஆயுட் காப்புறுதி என்றதும் எமக்கு பிடிக்காத இரு விடயங்கள் நினைவுக்கு வரும். ஒன்று மரணம். மற்றையது காப்புறுதி விற்பனை முகவர்கள். ஒருவர் கூறினார்: ஆயுட் காப்புறுதி முகவர் ஒருவரிடம் ஒரு மாலைப் பொழுதை கழிப்பது மரணத்தை விட மோசமானதென்று!

எவ்வளவு பணம் இருந்தாலும் எம்மை விட்டுப் பிரிந்த ஒருவரை ஈடுசெய்ய முடியாது. ஆனால், ஒருவரின் எதிர்பாராத இழப்பால் ஏற்படும் பொருளாதாரத் தாக்கத்தைத் தவிர்ப்பதற்கு ஆயுட் காப்புறுதி உதவுகின்றது.

அதாவது, ஒருவரின் மரணத்துக்குப் பின்பு அவரது அன்புக்குரியவர்கள் எதுவித பொருளாதாரத் தடங்கலுமின்றி, தங்கள் வாழ்வைத் தொடர்வதற்கு ஆயுட் காப்புறுதி அவசியமானது.

எமக்கு எவ்வளவு தொகைக்கு காப்புறுதி தேவை என்பதைக் கணிப்பதற்கு, காப்புறுதி நிறுவனங்கள் சில முக்கிய விடயங்களைக் கவனிக்க வேண்டுமென்று வலியுறுத்துகின்றன.

ஒரு குடும்பத்தின் நிதி நிலை, அவர்களின் தேவைகள், அவர்களுக்குத் தேவையான எதிர்காலத் திட்டங்கள், அவர்களுக்குத் தற்போதுள்ள கடன்கள், பொறுப்புக்கள் போன்றவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஒரு மனிதனின் பெறுமதியை எப்படிக் கணிப்பது? ஒருவர் தனது வாழ்நாளில் எவ்வளவு பணம் சம்பாதிக்கின்றார் என்பதை வைத்து அவரது பெறுமதியைக் கணிக்கலாம். ஒரு மனிதனின் மிக முக்கியமான சொத்து, அவரது பணம் சம்பாதிக்கும்

> “ஆயுட் காப்புறுதி முகவர் ஒருவரிடம் ஒரு மாலைப் பொழுதைக் கழிப்பது மரணத்தை விட மோசமானதென்று!”

வல்லமை. எனவே, சம்பாதிக்கும் வல்லமை இருக்கும் ஒருவரை, ஒன்றுமில்லாமல் தெருவில் விட்டால்கூட அவரால் வாழ்க்கையைத் தொடரமுடியும். எனவே, மனிதனின் பெறுமதி மிகவும் அதிகமானது. ஆனால், கணிப்பிடுவதற்காக, காப்புறுதி நிறுவனங்கள் பின்வரும் முறையில் கணிப்பிடுகின்றன.

65 வயதிலிருந்து தற்போதைய வயதைக் கழித்து வரும் இலக்கத்தால் உங்கள் வருட வருமானத்தைப் பெருக்கினால் கிடைக்கும் தொகைதான் உங்கள் பணப் பெறுமதி. இது குறைந்த அளவு மட்டுமே. காரணம் ஒருவரின் வருமானம் உயர்ந்து கொண்டு போகலாம். பொதுவாக எல்லோரும் 65 வயதில் ஓய்வு பெறுவதால், ஒருவர் 65 வயதுவரை எவ்வளவு பணம் சம்பாதிக்கலாம் என்பதை வைத்து அவரது பெறுமதி கணக்கிடப்படும். உதாரணமாக, 30 வயதானவர் ஒருவருடத்தில் 50,000 டொலர் வரை சம்பாதித்தால் அவரது குறைந்த பெறுமதி (65 – 30) X 50,000 = 1,750,000 டொலர்களாகும்.

எனவே, ஆகக் குறைந்தது 1,750,000 டொலர் தொகை ஒருவரின் பெறுமதியாகின்றது. இவரை எதிர்பாராத விதமாக இழந்தால் அந்தக் குடும்பமானது இந்தத் தொகையையும் இழக்கின்றது. ஆனால், இவரது பெறுமதி இவர் இருக்கும் போது தெரியாது.

நண்பர் ஒருவரின் வீட்டுக்கு ஒரு காப்புறுதி முகவர் சென்றிருந்தார். அவர் மிகவும் வசதியானவர். கனடாவில் ஒரு விவசாயி. அங்கே அவருடைய பல உபகரணங்கள், இயந்திரங்கள் இருந்தன. எல்லாவற்றிற்கும் காப்புறுதி செய்யப்பட்டிருந்தது, ஆனால், அவருக்கு மட்டும் ஆயுட் காப்புறுதி இருக்கவில்லை. காப்புறுதி முகவர் அவரிடம் கேட்டார் - ஏன் உங்களுக்கு மட்டும் காப்புறுதி இல்லை? ஏனைய அனைத்துக்கும் காப்புறுதி செய்துள்ளீர்கள் என்று. அந்த விவசாயி சொன்னார் - அவை எல்லாம் மிகவும் பெறுமதியான உபகரணங்கள். அவை இல்லாவிட்டால் என்னால் விவசாயம் செய்ய முடியாது என்று. அப்படி என்றால், உங்கள் பெறுமதி எப்படி? நீங்கள் இல்லாவிட்டால் இந்த உபகரணங்களும் இயந்திரங்களும் விவசாயம் செய்யுமா?

அதன் பின்னர் வியப்படைந்த விவசாயி, அவரின் பெறுமதியை அறிந்து, ஆயுட் காப்புறுதியின் அவசியத்தையும் புரிந்துகொண்டார்.

**ஒருகுடும்பத்தின் காப்புறுதித் தொகையை எப்படிக் கணிப்பிடுவது?**

அவர்களின் சேமிப்பு, அவர்களுக்கு உள்ள கடன்கள் போன்றவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும். ஒரு குடும்பத்திற்கு மாதாந்தம் எல்லாத் தேவைகளையும் பூர்த்திசெய்ய எவ்வளவு பணம் தேவைப்படும்? அதில் ஒருவரை இழக்க நேர்ந்தால், எப்படி அந்த வருமானத்தை ஈடு செய்ய முடியும் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். அதாவது, காப்புறுதி மூலம் கிடைக்கும் பணத்தை சரியான முறையில் முதலீடு செய்வதன் மூலம் இழந்த வருமானத்தைப் பெறமுடியும். எனவே, காப்புறுதித் திட்டமொன்றைப் பெறுவதற்கு முதல், சரியான நிதிக் கணிப்பீட்டு ஆய்வு ஒன்று செய்யப்பட வேண்டும். (Financial needs analysis) இந்த ஆய்வு செய்ய வேண்டியது காப்புறுதி முகவரின் கடமை. தற்போது புதிய சட்டமொன்று மாகாண அரசின் நிதிச் சேவை நிறுவனத்தால் அமுலாக்கப்படவுள்ளது. எனவே, காப்புறுதி முகவர்கள் சரியான முறையில் ஒருவரின் நிதி நிலைமை, அவரின் தேவைகள் பற்றிய ஆய்வு செய்யாமல் காப்புறுதித் திட்டம் வழங்குவது சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.


(தொடரும்)

■ ■ ■


# வீடு வாங்க, விற்க...

**To Buy or Sell your:**
- Residence
- Convenience Store
- Cottage
- Condo
- Restaurant

**Kipling/Steeles Ave**




$ 149,900
- 2 Bedrooms, 2 Washrooms
- Approx 1300 Sq Ft.
- Ceramics In Kitchen & Bath rm
- Open Balcony From Master Bedroom With Ensuite Bath
- Close To Schools, TTC.

**Kennedy/Eglinton**




$ 189,000
- 2+1Bedrooms, 2Washrooms
- Approx. 1100 Sq. Ft.
- Parquet Floors Through Living And Dining
- Close To Bus,Shops, Schools

**Kennedy/Ellesmere**



$ 229,900
- 2 Bedrooms, 2 Washrooms
- Corner Unit With Lots Of Light
- Newer Tridel Building
- Steps To T.T.C., Shops & Close To 401


**Brimley & Denison**



$ 273,000
- 3+1 Bedrooms, 3 Washrooms
- All Brick Link Detached Home with Finished Basement
- Interlocking Private Driveway
- Close To Transit, Shops, Schools

ROYAL LEPAGE
Connect Realty, Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED

**Port Union/Lawson**



$ 300,000
- 3 Bedrooms, 3 Washrooms
- Reno'd Designer Baths
- Extensively Landscaped Garden W/Shed & Trellis
- Close To All Amenities

**Brampton**



$ 359,900
- 4 Bedrooms, 4 Washrooms
- Approx 2000 Sq Ft, 7 Yr New
- Brand New Paint, Brand New Hardwood Flooring
- Close To All Amenities & 401

**Middlefield/Highglen**



$ 444,900
- 4 Bedrooms, 4 Washrooms
- Almost 2400 Sqft. 4 Yr New
- Brand New Driveway
- Walk To All Schools, Steps To Ttc, Shopping Mall.

**Keele/Finch**



$ 164,900
- 2 Bedrooms, 1 Washroom
- Ultra Large Inspiring West View 2 Balcony!
- Proposed Subway, Banks, University, Schools, Shops.



SIVA THARMAN KANDIAH
Sales Representative
CELL: 416 301 9540
BUS: 416 284 4751(24 Hrs)

**Convenience Store**



$ 149,000+Stock
- Very Busy Plaza 'Daisy Mart' With Lots Of Parking
- 1750 Square Feet.


வீடு வாங்க, விற்க...
இதில் அறிமுகமானவர்களை அழையுங்கள்....
Karu Kandiah FRI. CRES, Broker
19 வருடங்களாக இத்துறையில் முன்னணியில்...
அனுபவம்! அறிவு!! திறமை!!! பொறுமை!!!
THE CHAIRMAN'S CLUB
NATIONAL
Award Winner 2003 to 2006
Top 1% in Canada
KARU'S ROYAL TEAM
Top 10 TEAM in CANADA
Karu's Royal Team
Royal LePage Sold Homes
Quicker and for more in the GTA Last year
Siva Navaratnam*
Praba Jeganathan*
Chandran Sornalingam*
Siva Kandiah*
Charles Deva*
Malini Muhunthan*
Ranjan Franics Xavier*
Naren Sambasivam*
Joy Emmanuel*
Sri Ganesh Thambaiah*
Austin Flavius*
Raj Ariyam*
Neelan Thambiah*
Ganesh Thangarajah*
Meera Ram*
Wilton Gnanapragasam*
Murali Kanagasbai*
Kumar Varatharajah*
Ramanan Ramachandran*
Sajanthan Shan*
Jeya Artputharajah*
Ken Seyon*
Sunil Guneratne*
T. Junction
Open House at Karu's Royal Team Office
April 7 & 8, 11 am to 5 pm
Bathurst/King
- 4 Bedrooms - 4 Washrooms
- New Stunning Aspenridge Home In Macleod's Landing. 75K For Premium Lot Backing Into Greenbelt
$619,000
Midland/Lawrence
- 3+1 Bedrooms, 2 Washrooms
- A Terrific Oversized Bungalow In A Prime Location
- Nestled On A Beautiful Premium Pie Shaped Lot & Backing Onto A Ravine Type Setting
$349,900
Neilson/Ellesmere
- 3+2 Bedrooms, 4 Washrooms
- Location, Location, Location. Bright And Spacious Home
- To Shopping, Schools, Hospital, Ttc, University, Centennial College, Park and 401.
$189,900
Morningside/Finch
- 4+1 Bedrooms, 5 Washrooms
- Approx 3100 Sq Ft! Immaculate House Backing Onto Ravine! Walkout Basement With One Bedroom & Kitchen
- Close To School, Park &Ttc
$489,000
Middlefield/McNicoll
- 2+1 Bedrooms, 2 Washrooms
- Convenient&Fabulous Beautiful Bright 2 Storey Detached Home In High Demand Area
- Professional Landscaping, Bsmt Finished With Office
$314,900
Torbram/Sandalwood
- 3 Bedrooms, 3 Washrooms
- 3 Years New! Approx 2000 Sqft By National 'Oberon' Model
- Separate Ent.To Bsmt & Dir. Access To Garage
$369,900
Keele/Finch
- 3+2 Bedrooms - 3 Washrooms
- Do You Want To Invest???, Then This Is The One. York University Close By, Ttc, Park. Detatched House With Finished Basement With Seperate Entrance
$539,000
Bur Oak/Markham
- 3+1 Bedrooms, 3 Washrooms
- Never Lived In Stacked Townhouse
- Walk To All Schools, Near Go, Malls, Medical, Shops, Dentist,Stouffville Hospital
$294,500
Mccowan/Eglinton
- 2+1 Bedrooms, 2 Washrooms
- 24 Hrs Ttc, Eglinton Go, Doctors, Shops, Schools, Brand New Park At Door Step
- Brand New Paint All Over, Fully Laminated
$174,900
Tapscott/Mclevin
- 3 Bedrooms, 2 Washroom
-Luxurious Condo Stacked Townhouse.Walk-Out To Balcony From Main. Close To Ttc, School & Park.
$239,900
Hwy 27/Rexdale
- 2 Bedrooms, 2 Washrooms
- New Mansions Of Humber-wood By Tridel,State Of The Art Amenities. Luxury At The Highest Level.Excellent View At Night,
$239,500
Bovaird/Great Lakes
- 4 Bedrooms, 4 Washrooms
- Approx. 2000 Sqft, 7Yr New Detached House In Quiet Neighbourhood- Close To All Amenities, Future Hospital & Rec Centre, Hwy 410.
$359,900
Northgate/Roughley
- 4+1 Bedrooms, 4 Washrooms
- Wonderful Neighbourhood
- Elegantly Decorated
- Over 45K In Upgrades
- Easy Access To Commuter Routes
$361,900
Kipling/Steeles
- 2+1 Bedrooms, 2 Washrooms
- DesirableCorner Unit With Solarium! Very Clean With Many Upgrades. Solarium Can Be Used As Home Office/Study Room. Close To All Amenities.
$153,900
Denison/Kennedy
- Great Food Court Outlet For Oriental & South Asian Food In A Residential/Commercial Area
- A Residential/Commercial Area W/Regular & Walk-In Customers
$65,000
Kipling/Steeles
- 2 Bedrooms, 2 Washrooms
- Location! Location! 24 Hours Kipling & Steeles Bus Services. Close To Shops, Schools, Park & Mall. Ideal For Investors!!.
$149,900
Markham/Sheppard
- 3+2 Bedrooms, 2 Washrooms
- Finished Bsmt With Sepate Entrance,Lots Of Parking Spaces, Close To Schools, Shops, Library, And Dr. Office, Mins To Ttc & 401
$299,000
Steeles/Kipling
- 2 Bedrooms, 2 Washrooms
- Super Ravine Condo With Beautiful View. Corner Unit With Gleaming Birch Hardwood Flooring.
$159,900
Keele/Finch
- 2 Bedrooms, 1 Washrooms
- Ultra Large Inspiring West View
- Future Subway, Banks, York University, Schools, Shops, Go Station And Much More!!
$164,900
Meadowvale/Sheppard
- 1 Bedrooms - 1 Washrooms
- Location! Location! Clean One Bedroom Apartment With Separate Entrance
- Close To School, Ttc, Plaza And Park
$700 For Lease
St.Clair/Keele
- 3 Bedrooms, 3 Washrooms
- Beautiful Three Bedroom, Converted To Two For More Spacious Bedrooms! Finished Basement With Fmaily Room
$291,900
Siva Ratheesan*
Kannan Kankesu*
Sara Thangaras*
Thayaparan (Tai) Arumugam*
Saba Ganeash*
Nitharshan (Nike) Kumar*
Roger Kuhan Thambiah*
Ragu Paramsothy*
Vithi Thillainayagam*
Paul Premraj*
ROYAL LEPAGE
Connect Realty, Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED
Tel: 416-284-5555
880 Ellesmere Road. Suite 203(Kennedy & Ellesmere), Scarborough, ON.
* Sales Representative

# உங்கள் வீடுகளில் காபன்...

5ம் பக்கத் தொடர்ச்சி...

களை அடிக்கடி சுத்தம் செய்ய வேண்டும்.

- அளவுக்கதிகமான வாகன நெரிசலுள்ள வீதிகட்கு அருகாமையில் வீடுகள் இருந்தால் வெளியே உள்ள காபன் மொனொக்சைட் மட்டங்கள் உங்கள் உள்வீட்டு வளியின் தரத்தைப் பாதிக்கும்.

மேற்கண்ட வழிமுறைகளை நீங்கள் பின்பற்றினால், நீங்கள் காபன் மொனொக்சைட்டால் ஏற்படும் அபாயங்களை அதிகளவில் தவிர்க்கலாம். எனினும், இத்தகைய வழிமுறைகளைப் பின்பற்றினாலும் கூட தவிர்க்க முடியாத அபாயகரமான நிகழ்வுகள் ஏற்படக் கூடும். உங்கள் வீட்டில் காபன் மொனொக்சைட்டைக் கண்டறியக் கூடிய கருவியைப் பொருத்துவது ஓர் பாதுகாப்பான முன்னெச்சரிக்கை வழிமுறையாகும். சில மாநாகர சபைகளில் இது சட்டமாகும். காபன் மொனொக்சைட்டைக் கண்டறியும் கருவி வகைகள் வெவ்வேறு வழிகளில் செயலாற்றும். எனினும் இவை எல்லாவற்றிலும் காபன் மொனொக்சைட்டின் நியம அளவில் ஏற்படும் மாறுதல்களைக் கண்டறியும் தன்மை சிறப்பாக உள்ளது. இவை எல்லாம் வெவ்வேறு சூழல்களின் கீழ் இயங்குவதற்கு ஏற்ப சான்றிதழ் அளிக்கப்பட்டவை.

## காபன் மொனொக்சைட் கண்டறியும் கருவியை வாங்கும் போது எத்தகைய அம்சங்களை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்?

அநேகமான காபன் மொனொக்சைட் கண்டறியும் கருவிகள் குறுகியகாலத்தில் காபன் மொனொக்சைட் மட்டங்கள் உயர் அளவை அடையும் போது எச்சரிக்கை மணியை ஒலிக்குமாறு வடிவமைக்கப்பட்டுள்ளன. எவ்வாறெனினும், சுகாதார நிறுவனங்களின் அறிவுறுத்தலின்படி, நீண்ட காலத்தில் குறைந்த மட்ட வெளியேற்றுகைகள் கூட கவனத்தில் எடுக்கப்படல் வேண்டும் (Health Canada, 1989).

மிகவும் உயர் மற்றும் தாழ்மட்டங்களை எடுத்துக் காட்டும் கண்டறி கருவிகள் மிகவும் விலையுயர்ந்தவையாயிருந்த போதும் இவை அதிக திருத்தமான தன்மையையும் அதிக தகவல்களையும் வழங்கக் கூடியவை.

காபன் மொனொக்சைட் கண்டறியும் கருவியொன்றை வாங்கும் போது கனடா நியம சங்கத்தின்(Canadian Standards Association - CSA) நியமத்துடன் பட்டியல் படுத்தப்பட்ட கண்டறியும் கருவியை கவனத்தில் கொள்ளவும். பரிசோதிக்கும்நிறுவனத்தின் சின்னங்கள், வாசகங்கள் கருவியில் காணப்படும்.

## காபன் மொனொக்சைட் கண்டறியும் கருவியை எங்கே வைக்கலாம்?

அநேகமான உற்பத்தியாளர்கள் தமது காபன் மொனொக்சைட் கண்டறியும் கருவியை எங்கே நிறுவ வேண்டும் என்று குறிப்பிடுவர். பொதுவாக, கண்டறியும் கருவியை வைக்க வேண்டிய சிறந்த இடம், நீங்கள் நித்திரை செய்யும் போது எச்சரிக்கை மணியைக் கேட்கக் கூடியதாக இருக்கும் இடமாகும். காபன் மொனொக்சைட் ஆனது வளியை ஒத்த நிறையுடையதுடன் ஒரு அறையினுள் சீராகப் பரவக் கூடியது. ஆகவே ஓர் கண்டறியும் கருவியை எச்சரிக்கை மணி கேட்கக் கூடிய எந்த ஒரு இடத்திலும் எந்த உயரத்திலும் வைக்கலாம். மேலதிகமான கருவிகளை வீட்டைச் சுற்றி வேறு பல இடங்களிலும் வைக்கலாம். உதாரணம்: பிள்ளையின் படுக்கை அறை. இக் கருவியை வீட்டில் பொருத்த முன் பின்வரும் பட்டியலை கவனத்திற் கொள்ளுங்கள். கருவி சேதமடைவதைத் தவிர்க்கவும், தவறான எச்சரிக்கை மணி ஒலிப்பதைக் குறைக்கவும் கருவியை பின்வரும் இடங்களில் தாபிக்க வேண்டாம்.

- வெப்பமூட்டப்படாத நில அடித்தளங்கள் (Basements), கராஜ்
- உயர் ஈரப்பதன் கொண்ட பிரதேசங்கள்
- தலை மயிருக்கு இடும் தூவல்கள் (Hair Spray), நறுமணத் தைலங்களை விசிறும் கருவிகள் போன்ற இரசாயன கரைதல்கள் அல்லது சுத்திகரிக்கும் திரவங்கள் காணப்படும் இடங்கள்.
- காற்று, புகை வெளியேறும் புகை போக்கிகள், துவாரங்கள்
- வெப்பமேற்றும், சமைக்கும் உபகரணங்களின் 2 மீற்றருக்கு உட்பட்ட இடங்கள்.
- காற்றுக்காக திறக்கப்படக் கூடிய இடைவெளிகள்.
- இயற்கை வாயு சுற்றோட்டம் குறைவாக இருக்கும் பகுதிகளின் அல்லது மூலைகளின் 2 மீற்றருக்கு உட்பட்ட இடங்கள்
- உயர் போக்குவரத்து பகுதி போன்ற சேத மேற்படக் கூடிய பகுதிகள்
- வானிலைக்கு நேரடியாக உட்படக் கூடிய பகுதிகள்

## காபன் மொனொக்சைட்டைக் கண்டறியும் கருவி எச்சரிக்கை மணி ஒலித்தால் நாம் செய்ய வேண்டியது யாது?

எச்சரிக்கை மணி ஒலித்தால் அலட்சியம் செய்ய வேணடாம். காபன் மொனொக்சைட் கண்டறியும் கருவிகள், ஓர் ஆரோக்கியமான வளர்ந்தோர் எந்த ஒரு அறிகுறியையும் உணர முதல் ஒலிக்கக் கூடியவாறு வடிவமைக்கப்பட்டுள்ளன. சிசுக்கள், வயது முதிர்ந்தோர், சுவாசம் மற்றும் இருதய நோயுள்ளோர் குறிப்பிட்ட இடரைக் கொண்டிருப்பதுடன், காபன் மொனொக்சைட் நச்சாதலின் குறைந்த மட்டத்திற்கு கூட பதில் தாக்கத்தை அதிகளவில் வெளிப்படுத்தக் கூடியவர்களாக இருப்பர்.

## காபன் மொனொக்சைட் வெளியேறும் மூலாதாரத்தை அறிந்தால் நீங்கள் செய்ய வேண்டியவை யாவை?

உங்கள் கண்டறிகருவி எச்சரிக்கை மணியை ஒலித்ததுடன், காபன் மொனொக்சைட்டை வெளியேற்றக் கூடிய மூலாதாரமும் உங்களிடம் இருந்தால், உதாரணமாக ஓர் மண்ணெய் வெப்பமேற்றி இருந்தாலும் கூட நீங்கள் செய்ய வேண்டியவை:-

- உங்கள் செல்லப் பிராணி உட்பட அனைவரையும் வீட்டை விட்டு வெளியேற்றுங்கள். அனைவரையும் கணக்கிடுங்கள்.
- காய்ச்சல் போன்ற அறிகுறிகள் யாதாயினும் இருந்தால் 911 ஐ அழையுங்கள்.
- காபன் மொனொக்சைட் வெளியேற்றும் மூலாதாரத்தை அகற்றுங்கள் அல்லது நிறுத்தி விடுங்கள்.
- வீட்டில் காற்றோட்டத்தை ஏற்படச் செய்யுங்கள்.
- எச்சரிக்கை மணியை மீண்டும் சரி செய்யுங்கள்
- எச்சரிக்கை மணி ஒலித்து முடியுமட்டும் மீண்டும் வீட்டில் குடியேற வேண்டாம்.
- எதிர்காலத்தில் இந்த நிலைமைகளைத் தவிர்ப்பதற்கு ஏற்ற படிமுறைகளை மேற்கொள்ளுங்கள்.

உங்களுக்குத் தெரியாத மூலாதாரத்தில் இருந்து காபன் மொனொக்சைட் வெளியேறினால்.....

- உங்கள் செல்லப் பிராணி உட்பட அனைவரையும் வீட்டை விட்டு வெளியேற்றுங்கள். அனைவரையும் கணக்கிடுங்கள்.
- யாதாயினுமொருவருக்கு காய்ச்சல் போன்ற அறிகுறிகள் இருந்தால், 911 ஐ அழையுங்கள். சுகாதாரப் பிரச்சனை ஏதும் இல்லாவிடில், வாயு சேவை, வெப்பமேற்றும் ஒப்பந்தகாரர் அல்லது தீயணைப்புத் திணைக்களத்தை அழைத்து வீட்டைப் பரிசோதியுங்கள்.
- தனிக் குடும்ப வீட்டில் நீங்கள் வசித்தால், உங்கள் வீட்டை காற்றோட்டமுள்ளதாக்க வேண்டாம். எரிபொருள் எரிக்கும் உபகரணங்களை நிறுத்துங்கள். அல்லது வேறு யாதாயினுமொருவர் உங்கள் வீட்டை பரிசோதனை செய்யுமுன் காபன் மொனக்சைட் கண்டறியும் கருவியை மீண்டும் சரி செய்யுங்கள்.
- வரிசையான வீடுகள், தொடர் குடியிருப்புகளில் நீங்கள் வசித்தால், வீட்டை காற்றோட்டமுள்ளதாக்கி எரிபொருள் எரிக்கும் உபகரணங்களை நிறுத்தி விடுங்கள். இந்த நிலையில் காபன் மொனொக்சைட் மூலாதாரத்தைக் கண்டறிய முயல்வதை விட உங்கள் அயலவர்களின் பாதுகாப்பு மிக முக்கியமானது.
- எல்லா எரிபொருள் எரிக்கும் உபகரணங்களையும் தகுதி வாய்ந்த தொழில் நுட்பவியலாளரைக் கொண்டு பரிசோதித்து திருத்தம் செய்யுங்கள். இவை காபன் மொனொக்சைட் மூலாதாரம் என இனங் காணப்படலாம்.
- வீட்டைப் பரிசோதித்தவர்கள் அபாயம் நீங்கி விட்டது என அறிவித்தாலொழிய வீட்டில் மீண்டும் குடிபுக வேண்டாம்.

## காபன் மொனொக்சைட் நஞ்சூட்டப் பட்டமைக்கான அறிகுறிகள்.

உங்கள் குடும்ப அங்கத்தவர்கள் யாவரும் காபன் மொனொக்சைட் நஞ்சூட்டலின் அறிகுறிகளை அறிந்திருப்பதனை உறுதிப் படுத்துங்கள்.

### சிறிதளவு வெளியேற்றம்.

தலையிடி, தடிமன், கண் எரிவு போன்ற காய்ச்சலுக்குரிய அறிகுறிகள்.

### நடுத்தரமான வெளியேற்றம்.

தலைச் சுற்றல், மயக்கம், வாந்தி போன்ற அறிகுறிகள். குழப்பமும், என்ன ஏற்படுகின்றது என்பதை அறிய முடியாத தன்மையாலும் பாதிப்புக்குட்படும்சிலருக்கு வீட்டை விட்டு வெளியேறுவதற்கோ அல்லது உதவிக்கு அழைப்பது பற்றியோ தீர்மானம் எடுக்க முடியாது கஷ்டப்படுவர்.

### அளவுக்கதிகமான வெளியேற்றம்:

மயக்கம், மூளைப் பாதிப்பு, இறப்பு.

### தொடர்ச்சியான குறைந்தளவு வெளியேற்றம்

இது அவதானிக்கக் கூடிய அறிகுறிகளிற்கு இட்டுச் செல்லாவிடினும் நீங்கள் இத்தகைய வெளியேற்றத்தைத் தவிர்க்க வேண்டும்.

## காபன் மொனொக்சைட் கண்டறிகருவியை எவ்வாறு பரிசோதிக்கலாம்.

அதிகமான காபன் மொனொக்சைட் கண்டறியும் கருவிகளிற்கு ஓர் பரிசோதனை பொத்தான் (test button) காணப்படும். இதனை ஒரு கிழமைக்கு ஒரு தடவை அழுத்தி, கருவி வேலை செய்கின்றதா எனப் பார்த்தல் அவசியம். வெளிக்காட்டியைக் (Display) கொண்டுள்ள கண்டறி கருவிகள் காபன் மொனொக்சைட்டின் தெரிந்த மூலாதாரங்களான சிகரட் புகை அல்லது வாசனைக் குச்சியின் புகை மூலம் பரிசோதிக்கப்படலாம். காபன் மொனொக்சைட்டிற்கான மூலாதாரத்தை (உதாரணம்: சிகரட் புகை) 8-10 அங்குலங்கள் அப்பால் தள்ளி வைத்து காபன் மொனொக்சைட்டின் சிறிய அளவு காணப்பட்டால் கூட எண்ணிலக்க வெளிக்காட்டி (Digital display) எவ்வாறு பதிலளிக்கின்றது என்பதை அவதானியுங்கள். ஆனால் இந்தப் பரிசோதனையின் போது அநேகமாக எச்சரிக்கை மணி ஒலிக்காது.

காபன் மொனொக்சைட் கண்டறியும் கருவி விற்கப்படும் இடங்களில் கண்டறியும் கருவி பரிசோதனைப் பொதிகள் (test kits) உள்ளன. இவை காபன் மொனொக்சைட்டின் (1000ppm) உயர் மட்ட அளவு வரை காட்டுவதுடன் பரிசோதனையின் போது இக் கருவியை வைப்பதற்கு பிளாஸ்டிக் கூடாரத்தையும் வழங்கும். இந்த பரிசோதனை காபன் மொனொக்சைட்டின் அதி உயர் மட்டத்துடன் ஓர் எச்சரிக்கை மணி ஒலிப்பதையும் நிரூபிக்கும்.

கனடா நியம சங்கமும் (CSA), ஐக்கிய அமெரிக்காவும் (Underwriter's laboratory or UL) காபன் மொனொக்சைட் நியமத்தை எழுதுவதையும் உற்பத்திப் பொருட்களை பரிசோதளை செய்வதற்குமாக இணைந்துள்ளன.

இதனை வாசிப்பதுடன் மட்டும் நின்றுவிடாது இதனை செயற்படுத்துவதன் மூலம் உங்களினதும் உங்கள் குடும்ப அங்கத்தவர்களினதும் உயிர்களைப் பாதுகாத்து பயன் பெறுவீர்களாக.

■ ■ ■



# வீடு வியாபார நிலையம் வாங்க விற்க



**Brand New condos in**
Downtown,Etobicoke,
Scarborough,Richmond Hill



**RICHMOND HILL**
Bathurst / Humberland
Detached 2 Story
Bedrooms 4 ,Washroom 4
2 Years old
**$409,900**




**Mavis / Eglington**
**$ 334,900**
3 Bedrooms
3 Washrooms
Semi-Detached
Stainless/Steel Appliance



Derry / Rexwood
in Malton
Condo Townhouse 3Story
Bedrooms 3 ,Washroom 3
2 Years old
**$298,000**

**FREE Market Evaluation** **Lowest Commission**

# Dir. 416 816 1500

**Gas Stations**
(Petro Canada, Shell, Esso, Sunoco)
Convenience Stores
Also
**AVAILABLE**

## சத்தி மருதப்பா
## Sathhi Maruthappah

Century 21
Affiliate Realty Inc. Brokerage.
80 Corporate Dr. # 208
Toronto,ON, M1H 3G5
416 290 1200



---

**invis**
"low mortgage rates are just the beginning...."

## இலவச ஆலோசனையுடன் வீட்டுக்கான கடனுதவிபெற

BUSINESS PARTNER invis

- 1st & 2nd Mortgage
- Commercial Mortgage
- Re-Finance to get rid of your loans

- Bridge Financing
- Cottage Properties Financing
- Up to 90% LTV
- Non-Permanent Residents
- Rental Properties Financing
- Self-Employed
- No Money Down Mortgage



வீடு மற்றும் வர்த்தக நிலையங்களுக்கான கடனுதவிபெற

Tel: **(416) 854-6183**
Office: **(416) 273-8232**


**K. N. Kannan**
Mortgage Consultant

Fax: (416) 430-0222
inviskana@gmail.com
www.invis.ca

OFFICE: 2857 LAWRENCE AVE. E. SUITE 16, SCARBOROUGH, ON. M1P 2S9
90 KENNEDY RD. S., UNIT C, BRAMPTON
HEAD OFFICE: 701 EVANS AVE., SUITE 600, TORONTO, ON. M9C 1A3

All trademarks, names and logos are the property of their respective owners.

# Technical Analysis ஒரு ஆரம்பம்

மாறன் செல்லையா

- ஈட்டுக்கடன் ஆலோசகர் -


பங்குச் சந்தை முதலீடு ஆரம்பித்த நாள் முதலே சந்தையின் திசையை முன்பே கணிப்பிட பலரும் பல்வேறு வழிவகைகளை ஆராய்ந்து கண்டுபிடிக்க முயற்சி செய்தார்கள். சிலர் பொருளாதார அடிப்படையை வைத்து ஆராய முயற்சித்தார்கள். சிலர் கணித முறையில் ஒரு சூத்திரத்தைக் கண்டுபிடிக்க முயற்சித்தார்கள். இன்னும் பலபேர் ஆரூடம் மூலம் அறிய முடியுமா என்றுகூட நட்சத்திரங்களின் நிலையை ஆராய்ந்தார்கள்.

பங்குச் சந்தையின் போக்கை வரைபுகளில் வரைவதன் மூலம் அதன் போக்குகளை நிரணயிக்கும் ஆய்வை Technical Analysis என்பார்கள். இந்த ஆய்வின் மூலம் சந்தை நிலவரத்தின் போக்கைக்காட்டும் சுட்டிகள் ஏதாவது இந்த வரைபுகளில் மறைந்திருக்கிறதா என்று இந்த ஆய்வாளர்கள் ஆய்வது வழக்கம்.

மிகுந்த ஈடுபாட்டுடன் பங்குச் சந்தையில் பங்குபற்றுபவர்களுக்கு மிகுந்தளவு தகவல்கள் தற்போது கிடைக்கின்றது. இணையத்தள வசதிகாரணமாக தகவல்கள் உடனடியா கவே எல்லோருக்கும் கிடைக்கக் கூடியதாக இருக்கின்றது. இந்தத் தகவல்கள் பல, அந்த நிறுவனத்தால் நிர்வாகத் திடமிருந்தோ அல்லது அந்த நிறவனத்தின் பங்குகளை வைத்திருப்போர்களிடமிருந்தோ வருகிறது. இந்தச் செய்திகளை வெளியிடுவோர்சிலர் ஒருஉள்ளார்ந்த நோக்கத்துடன் பங்குகளில் விலையை உயர்த்தும் நோக்குடன் அந்தச் செய்தியை வெளியிடுகிறார்கள். இந்தச் செய்திகள் குறித்து படிப்போர் கவனமாக இருக்கவேண்டும்.

அண்மையில் இந்த வரைபுகள் பற்றிய ஆய்வுகளைச் செய்பவர் ஒருவர் 200 நாள் அசையும் சராசரி வரைபில் முக்கியத்துவம் பற்றிக் குறிப்பிட்டு இருந்தார். சாதாரண நாளாந்த மூடும் விலையின் வரைபுடன் இந்த 200நாள் அல்லது 40 வார சராசரி மூடும் விலையுடன் ஒப்பிடுவதன் மூலம் பங்குச் சந்தையின் திசையின் நோக்கை அறிவதாகும்.

கணணிகள் மூலம் மிகவும் சிக்கலான வரைபுகளை வரைந்து ஆராயக்கூடிய நிலைமையில், இந்த சாதாரண சராசரி வரைபுகள் சாதாரணமானவையும் மிகப் பழைமையானவையும் ஆகும். வாராந்த மூடும் விலை இந்த சராசரி வரைபுகளுக்கு மேலாக இருந்தால் சந்தையின் திசையின் நோக்கம் மேல் நோக்கியாகும்.

இந்த சராசரி கோட்டுக்குக் கீழே வாராந்த மூடும் விலை வந்துவிட்டால் சந்தையின் திசைநோக்கு கீழ் நோக்கியாகும்.


மேலும் சந்தையின் சலன நிலையையும் (volatility) ஆதார நிலைகளையும் (suport level) நிர்ணயிக்கவும் இந்த 200 நாள் அசையும் சராசரி உதவும் என்கிறார் அந்தக் கட்டுரையாளர். அவர் மேலும் கூறுகையில், இந்த 200 நாள் அசையும் சராசரி ஒரு காளையின் சந்தைக்கும் (Bull market), ஒரு கரடியின் சந்தைக்கும் (Bear Market) இடையிலான வெட்டுப்புள்ளியாகும் என்றார். இந்த 200 நாள் அசையும் சராசரி மேல் நோக்கி திரும்பியவுடன் பங்குகளை வாங்கி நீண்ட நிலை (long position) எடுப்பதுடன் கீழ்நோக்கித் திரும்பினால் பங்குகளை விற்று குறுகிய நிலை எடுப்பதும் (Short position) தனது வழக்கம் என்கிறார் அவர். அத்துடன் பல பங்குச் சந்தையில் ஈடுபடுவர்கள் இந்த 200 நாள் சராசரியை முதலீடு சம்பந்தமான முடிவுகள் எடுக்கப் பயன்படுத்துவது வழக்கம் என்றார் அவர்.

அவர் மேலும் தனது அனுபவத்தை விபரிக்கையில் இந்த வரைபின் மீது Wall street, Bay steet இல் உள்ள அனைவரும் ஒரு கண் வைத்திருப்பது வழக்கம் என்கிறார். மிகுந்த அனுபவமடைந்த வரைபு ஆய்வாளர்கள் என்றால் என்ன சொத்துக்களை நிர்ணயிப்பவர்கள் என்றால் என்ன சில்லறை முதலீட்டாளர்கள் என்றால் என்ன எல்லோரும் இந்த 200 நாள் வரைபை அவதானிக்கத் தவறுவது இல்லை. இந்த வரைபுகள் பற்றிய ஆய்வை நம்பாதவர்கள் கூட 200நாள் வரைபைப் பார்ப்பது உண்டு.

இங்கே தரப்பட்ட வரைபில் இருப்பது கனடிய large cap 60 Index fund. இது கனடாவில் முக்கிய 60 நிறுவனங்களும் கனடிய பொருளாதாரத்தின் ஆரோக்கியத்திற்குச் சாட்சியாகும்.

இந்த Index fund இல் இருந்து 60 நிறுவனங்களுக்கும் தனியாக ஆய்வு செய்ய வேண்டும். அதன்படி, தனித் தனியாக வராந்த மூடும் விலை வரைபுடன் அந்தந்த நிறுவனங்களின் 200 நாள் அசையும் சராசரியை ஒப்பிட வேண்டும்.

இந்த 60 நிறுவனங்களில் பெரும்பாலானவற்றின் வரைபுகள் அசையும் சராசரியிலிருந்து விலகிநின்றால் சந்தை உச்சமடைந்துள்ளது - ஒரு திருத்தத்திற்கு நேரம் வந்துவிட்டது எனச் சொல்லலாம். ஏப்பிரல் 2006ல் 49 நிறுவனங்களின் (82வீதம்) பங்குகள் அவற்றின் அசையும் சராசரியில் இருந்து விலகியிருந்தன. ஜுன் 2006ல் 16 நிறுவனங்கள் மட்டுமே (27வீதம்) அசையும் சராசரியின் இருந்து விலகியிருந்தன.




இந்த வரைபின்படி 200 நாள் அசையும் சராசரியின் இருந்து விலகிச் சென்றால் Index fund மீண்டும் கீழே வருவது தெரிகிறது. கடந்த மாதம் நடந்த பங்குச்சந்தை திருத்தத்தின் பின்னரும் (Conection) அசையும் சராசரி இன்னமும் மேல் நோக்கியே சுட்டிநிற்கிறது. இன்னும் நுணுக்கமாக இந்த வரைபை ஆய்வு செய்யவேண்டுமானால் அண்மையில் நடந்த திருத்தத்தின்போது 51 நிறுவனங்கள் 85 வீதமான நிறுவனங்களின் பங்குகள் அசையும் சராசரியில் இருந்து விலகியிருந்தன. இந்த திருத்தத்தைத் தொடர்ந்து பங்குச் சந்தை சுட்டிகள் மேலும் உயர்ந்துள்ளன. இந்த நிலையில் பங்குச் சந்தை முதலீட்டாளர்கள் அவதானமாக இருக்க வேண்டும்.

■ ■ ■


EXPERT
BUILDING INSPECTIONS LTD

"Dedicated to Expert, Honest & Independent Inspections"

Tel: 905 940 0811 Fax 905 940 6108
Toll Free 1 866 373 3315

- Commercial Building Inspections
- Environmental Assessments
- Air Quality Investigations
- Problem Analysis & Solutions
- New Home Warranty Inspections
- Resale Home Inspections
- Complete Home Audit
- Thermal Imaging

www.expertinspector.com

- Tough and Thorough Inspections by **University of Toronto** educated Building Science Experts Specializing in Defect Recognition
- Our Inspectors are Registered Home Inspectors under the Province of Ontario 1994 Home Inspectors Act-Bill 158 and full members of **ASHI** and **CAHPI**-Ontario
- Exceed Nationally Recognized Standards
- Important Maintenance Advice & Follow Up Support For First Time Buyers
- On-Site Narrative Reports
- Seven Days a Week

ASHI MEMBER
CAHPI Ontario



VJ'S
RENOVATION &
CARPET CLEANING



- HARDWOOD FLOORING
- PLUMBING
- BASEMENT WORKS
- ELECTRICAL WIRING
- CARPET CLEANING (RESIDENTIAL/COMMERCIAL)
- TOTAL RENOVATION

CONTACT: VJ. KUMAR
647.588.2880

# நிறங்களில் மிளிரும் வீட்டின் அழகு

**-மஞ்சுளா இராமலிங்கம்-**

## காப்பி நிறம்

இது மனதுக்கு இதம் அளிக்கும் ஒரு வர்ணம். மனஉறுதி, உத்தரவாதம் போன்றவற்றை இந்த நிறம் கொண்ட அறைகள் நம் மனதில் உற்பத்தி செய்பவையாம். பசியைத் தூண்டக்கூடிய இந்நிறத்தை நீங்கள் தாராளமாக சமையலறையின் சுவர்களுக்குப் பூச்சாகப் பயன்படுத்தலாம். (குன்டாக உள்ளவர்கள் தவிர்த்துக் கொள்வது நன்று) இயற்கையுடன் நெருக்கமான சம்பந்தம் கொண்டது காப்பி வர்ணம். மற்றும் இந்த நிறம் கொண்ட அறைகளில் நடமாடும் வேளைகளில் நம் மனதில் இதமும், மன நிம்மதியுடன் கூடிய ஒரு பாதுகாப்பு உணர்வையும் தோற்றுவிக்கின்றன. இந்நிறம் சில வேளைகளில் மன உளைச்சல், மற்றவர்களிடம் இருந்து ஒதுங்கி, விலகி, ஒட்டாமல் நிற்பது போன்ற மறைமுகமான விளைவுகளையும் ஒரு தனி மனிதனின் மனதின் அடித்தளத்தில் விதைத்துவிடும். எனவே, கவனியுங்கள். ஒரு அறையில் இந்த வர்ணம் அழகாக இருக்கும் என நீங்கள் நினைக்கும் பட்சத்தில், இந்நிறத்தை மற்ற நிறங்களுடன் கலந்து பயன்படுத்துங்கள். இந்நிறத்தைப் பாவிக்கும் வீதம், அந்த அறையில் மற்ற நிறங்களின் பயன்பாட்டைவிட கூடுதலாக அமையுமாறு பார்த்துக் கொள்ளுங்கள். இயற்கையைச் சித்தரிக்கும் ஓவியங்களைச் சுவரில் மாட்டும்போது, காப்பி நிறத்தை அந்த ஓவியங்களுக்கு மெருகூட்டும் விதமாய் சுவருக்கு வர்ணமாகப் பாவியுங்கள்.

## வெள்ளை நிறம்

வெள்ளை நிறம் என்பது உண்மையில் ஒரு நிறமல்ல. பல வர்ணங்களின் கலவையே வெள்ளை நிறத்தின் வெளிப்பாடு என்கின்றன ஆராய்ச்சிகள். முழுமை, நிறைவு. இவைகளின் பிரதிபலிப்பு வெள்ளை நிறம். வெள்ளை நிறம் தூய்மை, சுத்தம். அன்பு, உண்மை, நேர்மை போன்றவற்றை மனதில் தோற்றுவிக்கும் தன்மை கொண்டது. அறையை பெரிய பரிணாமம் கொண்ட அறையைப் போல் உருவாக்க விரும்பினால் நீங்கள் தாராளமாக அந்த அறையின் சுவர்களுக்கு வெள்ளை நிறத்தைப் பூசலாம். ஆனால், அதேவேளை முழுவதும் வெள்ளைநிறத்தைப் பூசும் அந்த அறையானது மனதுக்கு வெறுமையையும் தோழமை இல்லா உணர்வையும் தோற்றுவிக்க வல்லது என்பதையும் மனதில் கொள்ள வேண்டும்

## கறுப்பு நிறம்

கறுப்பு நிறம். இதைப்பற்றிச் சொல்லவே வேண்டாம். கறுப்பு அதிர்ஸ்டமில்லாத ஒரு நிறம். இறப்பு, சோகம், குதூகலமில்லாத மனம், அறியாமை, கொடூரம் போன்ற மனநிலைகளை இந்நிறம் தோற்றுவிப்பதுண்டு.அமெரிக்க பழங்குடிஇனத்தவரகள், கறுப்பு ஒரு முன்னேற்ற வாழ்வைக் கொடுக்கக்கூடிய நிறம் என்ற நம்பிக்கை கொண்டிருந்தார்கள். பழமைவாய்ந்த எகிப்திய நாட்டில் கறுப்பு நிறம் என்றாலே, வாழ்க்கையையும், மறுபிறப்பையும் தரக்கூடிய நிறமாகக் கருதினார்களாம். ஆனால், இந்த மர்மங்கள் நிறைந்த கறுப்பானது பெண்களுக்கு மிகவும் பிடித்த ஒரு நிறமாகும். ஒரு பெண் கறுப்பு நிறத்தில் ஒரு ஆடையாவது வைத்திருப்பாள். கறுப்பு நிறம் கறைகளை மறைக்கக் கூடியது. அத்துடன், இந்நிறத்தை மற்ற நிறங்களுடன் கலந்து பூசும்போது ஒரு அறையின் சுவரானது கொள்ளை அழகாக இருக்கும்.

## சாம்பல் நிறம்

சாம்பல் நிறத்தை "சினேகம் நிறைந்த நிறம்" என்ற அமெரிக்கப் பழங்குடியினர் நம்பியிருந்தனர். மிகவும் காரமாக. அதிக அழுத்தமுள்ள நிறங்களைப் பயன்படுத்தும் போது, அவற்றின் கடுமையைக் குறைக்கும் பொருட்டு சாம்பல் வர்ணத்தை அடித்தள நிறமாகப் பயன்படுத்தலாம். பார்க்க மிகவும் அழகாக இருக்கும். மற்ற எந்த ஒரு நிறத்துடனும் சாம்பல் நிறத்தை இணைத்து வர்ணம் பூசினாலும் அந்த நிறக் கலவை மிகவும் அழகாகவே இருக்கும். பொறுப்பு, பாதுகாப்பு, ஒரு நிலைப்பாடு, மனிதத் தோரணை, ஒன்றை ஆராய்ந்து அறியும் தன்மை முதலிய குணாதிசயங்களை ஒருங்கே மனதில் விதைக்கக்கூடிய தன்மை சாம்பல் நிறத்துக்கு உண்டு.

## தங்க நிறம்

தங்க நிறம். இந்த நிறத்தை முழுமையாக ஒரு அறைக்குப் பூசுவது அழகைத் தராது. அழகு மிளிர்ந்த இந்த நிறத்தை சில இடங்களில் கொஞ்சம்போல, மற்ற நிறங்களுக்கு ஏதுவாகப் பயன்படுத்தும் தறுவாயில், இந்நிறம், மனதுக்கு நல்ல சிந்தனை-களை விதைத்து, அச்சிந்தனைகளைச் செயலிலும் காட்டச் செய்யும். இந்நிறங்கள் தரக்கூடிய குணாதிசயங்களாவன செல்வம், செல்வாக்கு, நல்ல நோயற்ற உடம்பு, வெற்றி, சுதந்திரஉணர்வு போன்றவையாம். இந்நிறத்தை வீட்டில் பயன்படுத்துவதன் மூலம், உங்கள் தன்னம்பிக்கையை மேலும் உயரச் செய்யலாம். அத்டதுடன், நிம்மதியையும் வாழ்க்கையை அனுபவிக்கும் இரகசியத்தையும் தரும் இந்நிறம் வெற்றி, சந்தேசம் போன்றவற்றையும் நம் வாழ்வில் இரட்டிப்பாக்கித் தரும்.

■ ■ ■

**Condo For Sale**
330 McCowan & Eglinton

Well maintained two bedroom & Solarium
with balcony unit for sale or lease.
2 washroom. Excellent layout, New Laminiated floor. Laundry with new frontload LG washer dryer.
Available April 01, 07. 24 hour security services. Close to GO Station, School Mall.

**Call: 416.264.3791**
**or 647.400.7600**

*** * * Lowest price in the building * * ***

**OPEN HOUSE**
**APRIL 01 SUNDAY 2-5pm**




**410-301 Prudential Dr.**

**Reduced by $30,000.00**



**Bellamy & Lawrence**
- 5 Bedroom Home
- Complete Basement Sept. Entrance
- Good for Two Families

www.PowerofSaleHome.com
விரும்பிய இடத்தில் விரும்பிய இல்லத்திற்கு...



**Suresh Sellathurai**
*Sales Representative*

Century 21
AFFILIATE REALTY INC. BROKERAGE

Apex Creation - 647.439.3310

**Dir. : 416.356.7330 Bus. : 416.290.1200 (24Hr.)**
80 Corporate Drive,Unit #208, Toronto, ON. M1H 3G5
*Not intend to solicit buyers or sellers currently under contract with a broker.*


AirComPlus
Breaking IT Barriers...
AirComPlus
Hi SPEED INTERNET
தமிழர் வானில் புதிய வரவு
இணைய உலகின் இன்றைய தெரிவு
256kbps
23.95
Starting From
Other Services
Networking
Web Hosting
instaling and Servicing
Business Phone Systems
Security Camara Systems
CALL
416 CONNECT
416 266 6328
Compare our 3Mbps price with others...
$47.95
Cable company
$33.95
AirComPlus
$47.95
Phone company
www.aircomplus.com
A Tamil Internet Service Provider in Canada



416 7596000

www.veedu.com

VEEDU REALTY INC. BROKERAGE




## Taunton/ Baycliffe

Gorgeous 2-Year New, Luxury Master Ensuite, Custom Centre Island and Pantry in Kitchen, Sundeck, Gazebo, French Doors And Much More.. You Have To See To Appreciate.

MIA

**Ranjan Kumaresiya***




## Markham/16th Ave.

Gorgeous, Spacious And Perfect Home. Stainless Steel Appliances (Fridge, Stove, B/I D.W.), Ceramic B/Splash, Strip H/Wood Floors, Almost 20K In Upgrades, Steps To Shopping, Go Station, Schools, Churches Etc., Fenced Private Yard And Additional Storage In The Garage And More



**Sarangan Ratnarajah***




## Mc Cowan/Castlemore

Close To All Amenities, Short Walk To TTC (On Mc Cowan), Shopping, Schools and Parks. Clean Home Less Than 3 Yrs Old with Library/Home Office In The Front. New Cac (2006) and Cvac. Flexible Closing.



**Sarangan Ratnarajah***





## Bayview/Hitec/Bantry

Truly Gorgeous Freehold Townhouse By Greenpark, Desirable Neighborhood, Step To Transit, Shopping, Schools, Parks+Comm Centre, Prof Finshd Bsmt W/Rec Rm W/Pot Lights. Lots of Closet Storage, Beautiful Kit W/Upgrade Cabinets. Fully Fenced Yard.



**Nathan Baskaran***




## Mccowan/Mcnicoll

Excellent Neighbourhood. Steps To TTC At Mccowan Rd/McNicoll. One Bus To Subway, Mall, Albert Campbell P.S., Grade Schools Nearby. Finished Basement With Separate Entrance. Seller Spent 40K In Upgrades, Roof Reshined (2001). New Sun Deck (2006), Brdlm (2006), Driveway (2006)



**Tam Sivathasan****




## Brimley/N Of Steeles

Monarch Built 'rosewood' model, 2400 Sqft, Neutral Decor, Show Very Well, 9'Ceiling On Main, Upgrd Appliances, Oval Tub, Skylite, Bright & Clean, 10 Potlights, Privately Fenced Back Yard, Interlocking Extended Driveway (Part).



**Chand Vythilingam***




## Finch/Warden

Priced to Sell, Beautiful Apartment In A Well Maintained 6 Storey Building With Keyless Security. Newly Renovated Floor And Washrooms And Paint. Oversized Balcony and Ensuite Laundry. Close To School, Walk To Bridletowne Mall And Public Transit.



**Sujatha Sathiabal***




## Kennedy/Sheppard

Convinient Location, Very Clean And Bright , Marble Hallway and Tennis Court. Steps to TTC, Go, High school, and Hwy 401



**Sujatha Sathiabal***




## Midland/Lawrence

Large End Unit, Well Maintained Building, Steps From SRT and TTC. Close To Shopping Centres, Schools And Mosque

MIA

**Pirabu Ponnambalam***




## Mccowan/401

Well Maintained Luxury Condo. Corner Unit With 2 Full Baths. Excellent South/East Exposure Sun filled. Steps To Scarboro Town Centre, SRT/TTC, 401 Highway, Shopping And Many Other Amenities. Marble Foyer.



**Varatharajah Kandasamy***




## Conlins / Ellesmere

Excellent Layout, Spacious And Bright Home. Newly Renovated With New Carpet, Paint, Granite Counter Top, Deck, Circular Stairs, Skylight, Jacuzzi And Much More.... Close To TTC, Schools And Unversity Of Toronto.

MIA

**Gop Kalaeswaran***





## Neilson/Military Tr.

Beautiful Bright End Unit, A++ Condition, Close To Schools, Shopping, Transportation, Private Backyard Patio, Minutes To Hwy 401, Centenary Health Centre, U Of T (Scar. Campus)



**Karunahkaran Manickanadarasa***




## Bayview & Wellington

A Stunning Brand New Townhouse In A Great Neighborhood, Close To All Amenities, Cherry Hardwood Throughout Main Floor & Master's Bedroom, Spent Thousands On Upgrades, Property Shows A+++



**Suba Aynkharan***





## Weston Rd/Rogers

'Neat & Clean', Renovated With Neutral Decor, Hardwood Floors Through-Out, Finished Basement With Walk-Out, Cold Cellar W/ Cantina, Large Kitchen, Close To Schools, Ttc, Malls & Parks. 'Pride Of Ownership', Bright Home

MIA

**Merlyn D'Costa***




## Bayview/Wellington

Brand New Town House, Less Than 3 Months Old. Tastefully Decorated & Spacious. Kit.W/Breakfast Rm. Close To All Amenities. Shows Very Well A+++. Just Move In And Enjoy!!!!!



**Suba Aynkharan***

## Real Estate Classes to Begin soon...

Guidance provided by experienced professionals

Enquire at CALL:


**416-759-6000**

... REALTORS without BORDERS! ™



| $ 195,000. | $ 171,900. | $ 267,000. |
|---|---|---|
| Mccowan/Steeles 2BR, 2WR | Steeles/Mccowan 2BR, 2WR | Mccowan/ Dennison 3BR, 2WR |
| Well Maintained Building. Steps To Public Transportation, Schools, Church. Popular Public & Catholic Schools Are Within Minutes Of Walking Distance. | Renovated 2+1 Bedrooms. Condo In Well Maintained Building. Condo Was Recently Repainted - Walk Across To Shop, Ttc Right In Front Of Building | Great Starter Home. Close To Schools, Parks, Shopping. Great Neighborhood, Quiet Street. Lots Of Parking. |







**Logan Manikkavasagar**
Associate Broker

Century 21 Percy Fulton Ltd. 416•298•8200

**416•708•9903**
www.loganhotproperties.com

**Kalai Logan**
Sales Representative

# THINKING OF BUYING OR SELLING PROPERTY

for professional, reliable and honest service

- Residential-Commercial-Industrial-Investment
- List Your Home (Low Commission)
- Mortgage, Lawyer, Home Inspection



## Manickanadarasa Karunahkaran

Sales Representative

Dir: 647.272.8597

1345 Morningside Ave., Suite: 8, Toronto, ON M1B 5K3,
Office: 416.759.6000 fax: 416.759.6005
www.veedu.com

VEEDU REALTY INC. BROKERAGE

I'm here to get your mortgage smarter and faster.
உங்களுக்கு அதிக கடன் பளு இருந்தால் அனைத்தையும் குறைந்த ஒரு மாதக்கட்டணத்தில் கொண்டுவருவதுடன் உங்களுக்கு அதிக பணத்தையும் சேமிக்க உதவுவேன்.

- **Residential**
- **Industrial**
- **Commercial**

**1st, 2nd, 3rd Mortgages Upto 100%...**

வங்கி வட்டி வீதத்தை விட குறைந்தளவு வட்டி வீதம்

**NO FEE FOR RESIDENTIAL MORTGAGES**

- Rate discount up to 3%
- Give me a call for free consultation
- Mortgages without no down payment

நீங்கள் வங்குரோத்துக்கு போயிருந்தாலும் நிராகரிக்கப் பட மாட்டீர்கள். யாருமே நிராகரிக்கப் படமாட்டார்கள் அனைவரும் தகுதியானவர்கள். குறைந்த வட்டி வீதத்தில் ஈட்டுக்கடன் பெற்றுக்கொள்ளவும், கடன்கள் குறித்த இலவச ஆலோசனைகளுக்கும் அனைவரதும் நம்பிக்கைக்கு பாத்திரமான அகிலா செந்திலை அழையுங்கள்

**We are giving the best rate in town and pay your mortgage faster with good advise**

**Our interest rates starts from 0%**

- First-time Buyers
- Renewal
- Refinancing
- Pre-Approval
- Self Employed
- Bankruptcies
- Poor Credit
- New Immigrants
- Debt. Consolidation
- Construction Loans

invis

**After Approval**

# Joy is yours Pride is ours





## அகிலா செந்தில்
## Akila Senthil, AMP

*Senior Mortgage Consultant,*

**416.895.4321**

701 Evans Ave., Suite 600, Toronto, ON M9C 1A3
Fax: 416.644.0943, akilasenthil@invis.ca


உங்கள் வீட்டுக்கான ஈட்டுக்கடன் தேவைகளுக்கு
அனுபவம் - நம்பிக்கை - நாணயம் - சேவை
"Debt is the Slavery of the Free. Our Ambition is Your Freedom"
ஈட்டுக்கடன் முகவராக விரும்புகிறீர்களா?
வீட்டுக்கான ஈட்டுக்கடன் முகவராக வருவதற்கு நீங்கள் விரும்புகின்றீர்களா?
வீட்டுக்கான ஈட்டுக்கடன் பற்றியும் அனைத்து ஆலோசனைகயையும், கல்வியும் தொடர்ச்சியான பயிற்சியும் எம்மால் வழங்கப்படுகின்றன. இன்றே எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.
Want to become a Mortgage Consultant?
We provide you free workshops, training and seminars to become a certified Mortgage
digi Media Creation
BonaFide
Mortgage Solutions
1920 Ellesmere Road, Suite 111, Toronto, ON M1H 2V6
Tel: 416.548.7475, Fax: 416-548.7496
Toll Free: 1.800.952.1366
www.bmsic.com, info@bmsic.com
• Mortgages
• Re-Finance
• Seminar
• Workshops
www.bmsic.com
one stop solution for all your mortgage needs


Free Alarm System Stating from $19.95
Protectron
Residential & Commercial Alarm Systems
Special Offer
• Free Installation
• 2 Digital Key Pad
• 3 Motion
• All Windows & Doors
• Garage Opener
• Tel & Cable
• Burglar alarm
• fire alarm
• police emergency
• Medical alert
Security Camera
New Home Buyer!
• Dish Washer • Ice Maker
• Waser & Dryer • Phone Jack
Insulation and Labour FREE
(some conditions may apply)
Garage Door Opener
Range Hood
• General Contractors • Sales • Service • Installation
Please Call for a FREE in-home product consultation
647-893-4414

# இதுவரை நடந்த இரண்டாவது சிறந்த பெப்ரவரி

**S.K. பாலேஸ்**
- வீடு விற்பனை முகவர் -



### மார்க்கட் வோச்

"TREB அங்கத்தவர்கள் 6,772 விற்பனை பெப்ரவரி 2006இல் நடந்ததாக அறிவித்தனர். இது பெப்ரவரி 2006இல் விற்பனையான 6,750 ஐ விடவும் சற்று அதிகமாகவும், இதுவரை இந்த மாதத்தில் பதிவு செய்யப்பட்ட இரண்டாவது சிறந்த விற்பனையுமாகும்'' என்று TREB தலைவி டொறாதி மேசன் இன்று அறிவித்தார். ரொறன்ரோவின் காலநிலை சென்ற மாதம் குளிராக இருந்திருக்கலாம். ஆனால் ரொரன்டோவின் மீள் விற்பனை வீட்டுச் சந்தை மிகவும் சூடாகவே இருந்தது என திருமதி மேசன் குறிப்பிட்டார். முடிவைச் சொல்ல இன்னும் காலம் இருந்தாலும் 2007ம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்தே, இளவேனிற்காலம் கடந்த காலத்தைப் போல நல்ல விற்பனையை இலகுவில் தரும் என்பது தெளிவாகிவிட்டது. அவை சாதனை அல்லது சாதனையை அண்மிய செயற்பாடுகளாகும்.

இதற்கிடையில் விற்பனை நடவடிக்கை வேகமெடுக்கத் தொடங்கியபோது சென்ற மாதம் சராசரி விலை நான்கு வீதம் உயர்ந்து $368,687 இல் நின்றது. இது பெப்ரவரி 2006 தொகையைவிட நான்கு வீதம் அதிகம். சந்தையில் சராசரி 35 நாட்கள் இருந்தன.

**மொத்த விற்பனை விபரம்**
**கொமேஷல் றியல்டி வோச்**
**(வெப்ரவரி - 2007)**

வேகம் பெப்ரவரியிலும் தொடர்கிறது
(திங்கள், மார்ச் 12, 2007)

973,222 சதுரஅடி இடம் குத்தகைக்கு விடப்பட ரொரன்ரோ MLS முறைப்படி விடப்பட்டதாக TREB அங்கத்தவர்கள் அறிவித்ததாகக் கொமேஷல் சபையின் தலைவர் ரொன் றிட்ஸ்டில் இன்று அறிவித் தார். 2007இல் இதுவரை 2,000,000 சதுர அடி நிலம் வியாபாரம் செய்யப்பட்டது எனக் குறிப்பிட்டார் திரு றிட்ஸ்டில்.

அநேக வகையான உடமைகளின் விலை சென்ற பெப்ரவரி விலையைவிட அதிகமாக உள்ளது. தொழில் இடம் ஆறு வீதம் உயர்ந்து $5.95 sfn ம் வர்த்தக இடம் மூன்றுவீதம் உயர்ந்து $15.16 sfn.

**"ரொறன்ரோவின் காலநிலை சென்ற மாதம் குளிராக இருந்திருக்கலாம். ஆனால் ரொரன்டோவின் மீள் விற்பனை வீட்டுச் சந்தை மிகவும் சூடாகவே இருந்தது"**

| பிரதேசம் | விற்பனையின் எண்ணிக்கை | சராசரி விலை |
|---|---|---|
| 28 மேற்கு மாவட்டங்கள் | 2,522 | $ 342,060 |
| 14 மத்திய மாவட்டங்கள் | 1,224 | $ 504,381 |
| 23 வடக்கு மாவட்டங்கள் | 1,395 | $ 389,306 |
| 21 கிழக்கு மாவட்டங்கள் | 1,631 | $ 290,392 |

**வீட்டுச் சந்தை சுட்டிக்காட்டி**

| | பெப்ரவரி 2006 | பெப்ரவரி 2007 | % மாற்றம் |
|---|---|---|---|
| விற்பனை | 6,756 | 6,772 | +1% |
| புதிய பட்டியல் | 12,869 | 11,880 | -8% |
| சுறுசுறுப்புப்பட்டியல் | 19,992 | 19,369 | -3% |

**தனிக்குடும்ப வீட்டு விற்பனை விபரம்**

| வீட்டுமாதிரி | விற்பனை | % | மீடியன் |
|---|---|---|---|
| Detached | 3,289 | 98 | $380,000 |
| Semidetached | 837 | 99 | $304,000 |
| Condo Town House | 538 | 97 | $238,450 |
| Condo Apt. | 1,439 | 97 | $222,000 |
| Link | 154 | 98 | $280,000 |
| ATT/ROW/Town House | 480 | 98 | $290,000 |
| Co-Op Apt | 28 | 97 | $180,000 |
| Det.Condo | 7 | 99 | $316,000 |

### அயல் வட்டாரச் சதுக்கம் யூனியன்வில்

இந்த வருடம் இதுவரை விற்பனையான 14 வீடுகளில் 10ம் Detached Homes. இவற்றின் சராசரி விலை $641,390 இது 2006 முதல் இரண்டு மாதங்களில் பதிவு செய்யப்பட்ட விலையான $523,188 ஐ விட 22% அதிகமாகும்.

கொமேஷல் றியல்டி வோச்
(வெப்ரவரி - 2007)

### வேகம் பெப்ரவரியிலும் தொடர்கிறது

(திங்கள், மார்ச் 12, 2007)

- 973இ222 சதுரஅடி இடம் குத்தகைக்கு விடப்பட ரொரன்ரோ MLS முறைப்படி விடப்பட்டதாக TREB அங்கத்தவர்கள் அறிவித்ததாகக் கொமேஷல் சபையின் தலைவர் ரொன் றிட்ஸ்டில் இன்று அறிவித்தார். 2007இல் இதுவரை 2,000,000 சதுர அடி நிலம் வியாபாரம் செய்யப்பட்டது எனக் குறிப்பிட்டார் திரு றிட்ஸ்டில்.
- அநேக வகையான உடமைகளின் விலை சென்ற பெப்ரவரி விலையைவிட அதிகமாக உள்ளது. தொழில் இடம் ஆறு வீதம் உயர்ந்து $5.95 sfn ம் வர்த்தக இடம் மூன்றுவீதம் உயர்ந்து $15.16 sfn.

### விற்பனைச் சந்தையின் சிறப்புகள்

வெப்ரவரியில் 57 தொழில்/வர்த்தக விற்பனை ரொரன்ரோ MLS முறையில் விற்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இதில் பெரும்பகுதி 28 தொழில்உடமை விற்பனையாலும் (சகல பிரிவுகளும்) ஆனது. இவை சராசரி $71,88 சதுரஅடி ஆகும். இது MLS இல்லாத தொழில்விற்பனையான $64.15 சதுர அடியுடன் ஒப்பிடக்கூடியது.




# Buy & Sell Residential and Commercial Properties

Raj. A. Rasaratnam B.Com.
Sales Representative
416-726-8055
416-299-8570

HomeLife/ GTA Realty Inc.
Real Estate Brokerage*
*Independently own and operated
1711 McCowan Rd., Suite #206,
Scarborough, ON. M1S 3Y3
Bus: (416) 321-6969
Fax: (416) 321-6963




Mortgage arrangement, Business incorporation and corporate tax preparation
416-726-8055

# சூழலும் சக்தியும்

- பொன் குலேந்திரன் -

பெரும் வெடிப்பு (Big Bang) தத்துவம் பிரபஞ்சத்தின் பிறப்பையும், காலத்தின் தோற்றத்தையும் விளக்கும் விஞ்ஞான கோட்பாடாகும். வெடிப்பு ஏற்படுவதற்கு முன்னர் தனிச்சிறப்பு நிலையில் (State of Singularity) பிரபஞ்சம் இருந்தது. இந்த நிலையில் திண்மங்களும் சக்திகளும் ஒரு புள்ளியில் குவிந்திருந்தன. பிரபஞ்சத்தில் உள்ள கருந்துளையில் (Black Hole) இந் நிலையுண்டு. பிரபஞ்சத்தினை ஒரு கோளத் தின் மேற்பரப்பாக விஞ்ஞானிகள் கருது கிறார்கள். இப் பிரபஞ்ச கோள வடிவத்தி னுள்ளும் வெளியேயும் ஒன்றுமில்லை. வேதகால ரிஷிகள் பிரபஞ்சத்தை ஒரு முட்டை வடிவமாகக் கருதினர். சக்தி அதி கரிப்பாலும், திண்ம அணுக்களுக் கிடையே உள்ளானதள்ளு விசைகளாலும் (Repulsive forces) வெடிப்பு தோன்றி பிரபஞ்ச சக்தி வெளியேறியது. $E=MC^2$ என்ற சக்தி E, திண்மம் M, ஒளியின் வேகம் C ஆகிய வற்றை இணைக்கும் அயன்ஸ்தீனின் சமன் பாட்டின் படி சக்தியில் இருந்து திண்மத்திற் கும், திண்மத்தில் இருந்து சக்திக்கும் மாற் றலாம். இந்த மாற்றத்தால் ஒளி பிறக்கிறது. இக்கோட்பாடே அணுசக்தியின் வலுவை மனிதன் அறிய உதவியது. பல்லாயிரம் உயிர்களை அழித்தது. பிரபஞ்சத்தில் சக்தி வெளியேற்றத்தால் ஒளிதோன்றியது. காலம் ஆரம்பித்தது. காலத்தின் ஆரம்பம் 13.7 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் என்பது ஒரு கணிப்பு பிரபஞ்சத்தின் முன்னைய நிலையை காலத்தின் தோற்றத்தின் போது கணக்கில் இங்கு எடுக்கவில்லை. வான் வெளியில் பல கோடி நட்சத்திரங்கள், கிரகங்கள் தோன்றின. இதில் நாம் வாழும் பூமி சூரியனின் நட்சத்திரக் குடும்பத்தில் ஒரு சிறு அங்கத்தினராக இயங்குகிறது. எமது சூரிய குடும்பத்தை விட பெரிய குடும் பங்களும் பிரபஞ்சத்தில் உண்டு. அங்கும் உயிரினங்கள் அந்த சூழலுக்கு ஏற்ற தோற்றத்துடன் எம்மைவிட புத்திசாலிகளாக வாழலாம். இதை நாம் கற்பனையில் சினி-மாவில் பார்த்துள்ளோம். இது போன்று பிரபஞ்சத்தில் ஆயிரக்கணக்கான நட்சத் திரக் குடும்பங்கள் உண்டு.

பெரும் வெடிப்பினால் தோன்றிய பூமியின் சுற்றுப்புறச் சூழல் (Environment), அதில் வாழும் எல்லா உயிரினங்கள் கண்ணுக்கு புலப்படாத பிரபஞ்ச சக்தியையே நம்பி வாழ்கின்றன. பூமியைச் சுற்றியுள்ள வளி




மண்டலத்தின் வெப்ப நிலை, பரிசுத்தமான நிலம், நீர், மனித இனம் வாழ உதவுகின் றன. இதனால் தான் இந்து மதம் ஐம்பூதங் களான காற்று, நீர் , நெருப்பு, நிலம், வளி மண்டலத்தை கடவுளாக பாவித்து இந்து மதச் சடங்குகளில் அவைக்கு மரியாதை கொடுத்து கிரிகைகள் நடத்துகிறது. அது மட்டுமல்ல சக்தியானது இயற்கையில் எங் கும் பரவி இருப்தனால் இந்து மதத்தில் வேம்பு. ஆலமரம், மாமரம் , வில்வமரம், துளசி, சந்தணமரம், பலா போன்ற மரங் களை தல விருட்சங்களாக வணங்குகிறார் கள். அவ்வாரே பசு, எருது, சிங்கம், புலி, நாய் போன்ற மிருகங்களையும் , பாம்பு போன்ற ஊர்வனகளையும் வழிபடுகின்றனர். இவ்வழிபாடு சக்தியை குறிக்கோளாகக் கொண்டது.

சக்திக்கும் இயற்கையல் உள்ள மலை. நதி, கடல், நிலம், மரங்களுக்கு என்ன தொடர்பு? சக்தி இருந்தால் தான் இயங்க முடியும். பௌதிகத்தில் இயக்கச் சக்தி (Kinetic Energy) நிலைச் சக்தி (Potenila Energy)என்பதை பற்றி நாம் படித்திருக் கிறோம். இவைற்றை விட இரசாயன சக்தி, சூரிய சக்தி, இயந்திர சக்தி, அணு சக்தி, பொன்றசக்தியின் பலவடிவங்களை இயற் கையில்இருந்து மனிதன் பெற்று, அவற்றை தனது பாவனைக்கு உபயோகித்துள்ளான். அச்சக்திகள் மூலம் தொழிற்சாலைகளை இயங்கவைத்து கழிவுப்பொருட்களை திரும் பவும் சூழலை மாசுபடுத்த வெளியேற்றியுள் ளான். எத்தகைய சுயநலவாதியாகிறான் மனிதன்.

பல நாடுகளின் பூர்வ குடிமக்கள் இயற்கை வழிபாட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்கி றார்கள். இதில் தென்னிறந்தியர்களை முக் கியமாக குறிப்பிடவேண்டும். நிலமம் மரங் களும் அவர்கள் வணங்கும் தெய்வம். அரிஸ்டோட்டல் போன்ற தத்துவ ஞானிகள் கூட பஞ்ச பூதங்களை பற்றி குறிப்பிட் டுள்ளார். மரங்கள் வளர்ந்து, மலர்ந்து. காயப்பதற்கு அதனுள் இருக்கும் சக்தி துணைபோகிறது. மனித உடலுக்கு ஆன்மா எப்படியோ மரங்களுக்கு அதன் சக்தி முக்கியம். மலைகளுககுகள் சக்தி முடங்கி கிடக்கிறது. தக்க தருணத்தில் எரிமலை யாக வெடித்து வெளியேறுகிறது. நதிகள் மழை காரணமாக கரை புரண்டு ஓடும் போது அதன் சக்தி வெளி வருகிறது. அதே போல் கடல் அலைகளும், பூகம்பத்தாலும் காற்றாலும் தனது சக்தியின் வலுவை எடுத்துக் காட்டுகிறது. நிலத்துக்கடியே வெப்ப நிலை உயர்வதினாலும் நிலத் தட்டுகள் ஒன்றுடன் ஒன்று உராய்வதி னாலும் சக்திவாயந்த பூகம்பம் தொன்று கிறது. வான்வெளியில் பருவ நிலையில் ஏற்படும் மாற்றம் காரணமாக சூறாவளி தோன்றுகிறது. இவை ஒன்றின் தோற்றத்

35ம் பக்கம் பார்க்க...



34ம் பக்கத் தொடர்ச்சி...

தால் மற்ற பஞ்ச பூதங்களும் இயங்கத் தொடங்கி தமது சக்தியினை வெளிக்காட்டுகிறது. இவையல்லாம் ஒரே பூதக் குடும்பமல்லவா?

சுற்றுப்புறச் சூழல், சக்தியினை பிரபஞ்சத்தில் இருந்து பெற்று உயிரினங்களை வாழவைக்கிறது, சூரியனிடம் இருந்து பூமி பெறும் சக்தி சூழலையும் உயிரினங்களையும் வாழ வைக்கிறது. அதனால் தான் பண்டைய காலத்தில் இந்தியா, ஜப்பான், எகிப்து, தென்அமெரிக்கா, கிரேக்கம் போன்ற நாடுகளில் ஆதவனை தெய்வமாக வணங்கி வந்தனர். தாய் குழந்தைக்கு பால் ஊட்டுவது போல ஆதவன் பூமிக்கு சக்தியை கொடுக்கிறான். விவசாயத்தை வளர்த்து மானிடர்களுக்கு உணவை கொடுக்கிறான். காலத்தோடு சூழலானது படிப்படியாக மாற்றங்கள் அடைந்துள்ளன. மலைகள், நதிகள், குளங்கள், கடல்கள், காடுகள், மேகங்கள், நிலம் ஆகியவை சூழலின் அங்கங்கள். ஐம்பூதங்கள் என அழைக்கிறது. “புல்லாகிப் பூண்டாய் புழுவாய் மரமாகி ... என திருவாசகத்தில் சூழிலில் வாழும் உயிரியனங்களை மாணிக்க வாசகர் குறிப்பிட்டுள்ளார். இவை காலத்துக் காலம் ஏற்படும் மாற்றங்களை குறிக்கும். மறுபிறவியினையும் எடுத்துக் காட்டுகிறது.. நிலப்பரப்பு உருமாற்றம் அடைகிறது. பனி மலைகள் பருவ நிலைக்கு ஏற்ப மாற்றமடைகின்றன. கடல் மட்டம் உயர்கிறது. வாவிகள், புது நதிகள் பல தோன்றுகின்றன. சில நதிகள் மறைந்து விடுகின்றன. மனிதன் மாற்றத்தால் பயன் அடைகிறான்.

தமிழ் இலக்கியத்தில், காலத்தை ஆறு பகுதிகளாகவும் நிலத்தை ஐந்து பகுதிகளாகவும் வகுத்துள்ளார்கள் நமது மூதாதையர்கள். காலத்தின் பகுப்பு பருவ கால வெப்பநிலையையும் சுற்றுப்புறச் சுழலைப் பொறுத்தது. காலத்தை முன்பனி. பின்பனி, இளவேணில், முதுவேணில், கார்காலம், குளிர்காலம் என வகுத்தனர். இதில் வெப்பஅதிகமான காலமாகிய ஆனி ஆடி காலங்களின் வசந்தகாலமே “முதுவேனில்” காலமாகும். நிலத்தை பொறுத்தமட்டில் மருதம், குறிஞ்சி, முல்லை, நெய்தல், பாலை ஆகிய ஐந்து விதமான நிலப்பரப்புகளாக, சூழலுக்கும், செய்யும் தொழிலுக்கும் ஏற்ப நிலங்களை வகுத்துள்ளனர்.

இரு புள்ளிகளுக்கிடையேளான குறுகிய இடைவெளியை தூரம் என்கிறோம். அதே போன்று இரு சம்பவங்கள் நடந்த இடைவெளியினை நேரம் என்கிறோம். காலம் அல்லது நேரம் மாற்றத்துடன் அல்லது இயக்கத்துடன் சம்பந்தப்பட்டது. பிரபஞ்சம் இயங்காதிருப்பின் நேரம் அல்லது காலம் என்ற தத்துவத்திற்கு இடமில்லை. இங்குதான் பெரும் வெடிப்பு என்ற தத்துவம் காலத்ததோடு இணைகிறது. பிரபஞ்சம் சிறுமுட்டை வடிவில் இருந்து வெடித்து, விரிவடைந்து. சுருங்கி மறைந்து, பின்னர் திரும்பவும் வெடித்து விரிவடைந்து சுருங்கி ஒரு சுழற்சி முறையில் இயங்குகிறது. இதைத்தான் இந்துமதம் படைத்தல் . காத்தல் அழித்தல் என்ற தொழிலுக்கு பிரம்மன். விஸ்ணு, சிவன் ஆகியோரை உருவாக்கி காலத்தை செயல்படவைக்கிறது. ஆகையால் பிரபஞ்ச இயக்கம் காலத்தோடு தொடர்புகொண்டது. எப்போது பிரபஞ்சம் இயங்கத்தொடங்கியதோ அப்போது காலம் பிறந்தது என்பார்கள் சில விஞ்ஞானிகள். எப்போது காலம் பிறந்தது என்பதற்கு சரியான விடைதெரியாது விஞ்ஞானிகள் தவிக்கிறார்கள். ஆனால் பிரபஞ்சத்தில ஏற்பட்ட பெரும் வெடிப்பு 13.7 பிலலியன் ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்டது என்கிறார்கள் விஞ்ஞானிகள். ஆதற்கு முன்னர் பிரபஞ்சம் இருண்டு இருந்ததா?

இயற்கையில் இருந்து மனிதன் கற்க வேண்டியவை பல. அறிவியலின் கண்டுபிடிப்புகள் பல இயற்கையில் நடப்பவையை அவதானித்து கண்டு பிடிக்கப்பட்டவை. பறவையைக் கண்டு விமானம் படைத்தான் என்றார் கவிஞர் கண்ணதாசன், மரத்தில் இருந்து அப்பிள் கிழே விழுவதைக் கண்டு புவியீர்ப்புசக்தியின் விதிகளை கண்டுபிடித்தான் நியூட்டன். மின்னலை பார்த்து மின்சாரத்தை கண்டுபிடித்தான். தேன் கூட்டின் அமைப்பினை பார்த்து, இரசித்து பெரும் கட்டடிங்களின் உருவங்களை அமைத்தான். வண்ணத்துப் பூச்சிகளின் வர்ண அமைப்பை பார்த்து ஓவியங்களை அழகுபடுத்தினான். வரிசையாக செயலாற்றுவதினால் திறமையாக செயலாற்ற முடியும் என்ற பாடத்தை எறும்புகளிடம் இருந்து கற்று ஒழுங்காக கியூவில் நிற்க கற்றுக் கொண்டான். மிருகங்களின் உருமறைப்பினைக் கண்டு தானும் அந்த தந்திரத்தை போர் யுக்திக்குப் பயன் படுத்தினான். இப்படி இயற்கையில் காணக்கூடிய அவதானிப்புகள் எத்தனையோ. இரகசியங்கள் எத்தனையோ. இவையெல்லாம் வருங்காலத்தில் விஞ்ஞான கண்டுபிடிப்புகளாக தோன்றலாம்.

மனிதன் தான் செய்யும் தவறான செயல்களாலோ அல்லது எடுக்கும் முடிவுகளினாலோ வாழக்கையில் ஏற்படும் ஏமாற்றங்கள் அல்லது தோல்விகளுக்கு காலத்தை குறை சொல்வது வழமை. நல்லது அல்லது கெட்டது நடந்தால் அதற்கு நல்லகாலம், கெட்டகாலம் என முத்திரை குத்தி விடுவார்கள். சென்ற காலத்தில் நடந்ததை மறந்து விடு, வருக்காலத்தில் நடக்கப்போவதையிட்டு கற்பனை காணாதே. நிகழ்காலத்தில் நடப்பதை எவ்வாறு சந்திக்க வேண்டும் என்பதை பற்றி சிந்தி என்கிறார் ஆன்மீகவாதி. இதற்கு காரணம் நடந்தவை திரும்பவும் நடக்கப் போவதில்லை, அதை நினைத்து காலத்தை விணடிக்காதே. வருங்காலத்தில் நடக்கப் போவதை நினைத்து கற்பனைகள் பல செய்து உன் நேரத்தை விரையம் செய்யாதே ஏன் என்றால் வருங்காலத்தில் நடக்கப்போவதை உண்ணால் ஊகிக்க முடியாது. ஆதனால் தற்போது நடக்கப்போவதை பற்றி சிந்தித்து செயலாற்று. இது மனித வாழ்வில் காலத்தின் இன்னொரு ஒரு கோலம்.

அயன்ஸ்தீனது சார்புக்கொள்கையும் காலமும் என்ற தத்துவம் ஒரு புரட்சியை உண்டு பண்ணிவிட்டது எனலாம். காலமும் ஒளியின் வேகமும் அறிவியலில் விளங்கிக் கொள்வது மிகக் கடினமான விடையங்களாகும். ஓளியின் வேகம் பிரபஞ்சத்தின் வயதையும் மற்றைய நட்சத்திரகளின் தூரத்தையும் கணிக்க உதவுகின்றன. ஒரு வினாடியில் 186000 மைல்கள் ஒளி பயணம் செய்யுமாகில் ஓரு வருடத்தில் $365 \times 24 \times 60 \times 60 \times 60 \times 186{,}000 = 5.87 \times 10^{12}$ மைல்கள் பயணம் செய்யும். இதனை ஒளி வருடம்(A Light Year) என்பர் வானசாஸ்திரிகள். நட்சத்திரங்களின் தூரத்தை இந்த அளவுகோளை வைத்து கணிப்பார்கள். Alpha Centuari என்ற பூமிக்கு அன்மையில் உள்ள நட்சத்திரமானது 4.2 ஒளி வருட தூரத்தில் அமைந்துள்ளது.

Time Dilation என்பது ஒளியின் வேகத்துக்கு அருகே நாம் பயணம் செய்வதால் ஏற்படும் விளைவுகளை கணிப்பதாகும். பிரபஞ்சத்தில் நிகழ்வுகளுக்கு சில வழிமுறைகள் உண்டு. ஒரு நிகழ்வு ஏற்படின் அதை தொடர்ந்து இன்னொரு நிகழ்வு ஏற்படுகிறது. இந்நிகழ்வுகளின் தொடரின் முடிவே சூழலின் தற்பொதைய நிலை. இந்நிகழ்வுகள் தொடர்ந்து போனால் இன் பல்லாயிரம் ஆண்டுகளக்கு பின் பூமியின் நிலை என்ன என்பதை எம்மால் ஊகிப்பது கடினம். ஆனால் மனிதனால், இந்நிகழ்வுகளில் மாற்றம் ஏற்படுகிறது என்பது நிட்சயம். சூழலை மனிதன் மாற்றுகிறான். எதற்காக? தனது சுயநலம் நிறைந்த பொருளாதார வளர்ச்சிக்கும் சொகுசான வாழ்வுக்கும் தான்.

இயற்கையிலிருந்து சக்திகளை பல வழிகளில் பெறலாம். ஐம்பூதங்கள் அதற்கு வழிகாட்டுகிறது. சூரியசக்தியானது ( Solar Energy) விலையுயர்ந்த மின்சக்தியின் விரையத்தை குறைக்க வழிகாட்டுகிறது. நிலத்திற்கு அடியில் உள்ள எரிபொருள் விரையமாகாமல் செய்ய உதவும். வீட்டிற்கு வேண்டிய மின்சகத்தியனை சூரியசக்தி மூலம் பெறலாம். காற்றில் இருந்து பெறக்கூடிய சக்தியும் அவ்வாறே. சூழலின் சக்தியை மதித்து நடவுங்கள். சக்திகளை விரயமாக்காதீகள். ஊதாரணத்துக்கு பூமிக்கு அடியில் உள்ள விலைமதிக்க முடியாத எரிபொருள் தீர்ந்து விட்டால் போக்குவரத்துக்கு மனிதன் என் செய்வான்? இன்னொரு சக்தி தீாந்து விட்டால் இயறகையில் இன்னும் பல சக்திகள் உண்டு. ஆனால் இயற்கையை மாசுப்படுத்தி அதன் சீற்றத்தை தூண்டி மனித இனத்தின் அழிவைத் தேடிக்கொள்ளாதீர். பூமியை பாலைவனமாக்கி விடாதீர். (தொடரும்)


## Burnamthorpe/Mavis.




**$399,000**

4 bedrooms detach house with 2 bed rooms basement apartment with separate entrance. 2500 square feet ,all hard wood floors, 170 feet depth(deep back yard),40 feet frontage and has a big size family room. close to Square one mall,few blocks from the Go station, plaza,school, bus close to hwy 403 and 401.

**specializing in Mississauga ,brampton and toronto**

**sell your house faster**

**as low as 1% commission call pera nathan**

**TOP PRODUCER 2004, 2005, 2006**

## Trent Hills



**$23,999 Acres**

1.62 Acres Of Land. Percy Township. Municipality Of Trent Hills, Cambell Ford. Large Private Lot In Trent Hills. East Of Toronto. Only 90 Mins Drive From Toronto. Roll #1435-229-030-03022. Prime Development Land In The Near Future. Directly Opposite To Gummow Road.


## Windsor



**$22,000 Sq Ft**

Vacant Land Located On Ecorse Road, 4000 Square Feet Close To Windsor Prime Development Land In The Near Future.


## Hwy 10/Dundas



**$159,900**

2+1 Bedrooms, 1 Washroom, Condo Apt, Spectacular View Of City. Close To All Conveniences Best Describes This Open Concept Unit.


## Hwy 10/Central



**$174,900**

3 Bedrooms, 2 Washroom, Condo Apt, Large 3 Bdrm Corner Unit. Approx. 1300 Sq. Ft Conveniently Located One Bus Stop To Subway In The Heart Of Mississauga


## 10/Central Pkwy



**$189,900**

3 Bedrooms, 2 Washroom, Condo Apt, Bright And Spacious. 1 Bus Stop To Islington Subway. Fridge, Stove, Dishwasher, Washer/Dryer (All New), Cable T.V. Incld.

## Cawthra/Dundas



**$143,900**


3 Bedrooms, 1 Washroom, Condo Apt, Bright And Spacious. Very Large. Absolutely Immaculate 10++. Bigger Unit In The Building. Beautiful Parquet Floors. Steps To All Convenience.

COLDWELL BANKER

Terrequity Realty Brokerage

2690 Erin Centre Blvd, Unit A5, Mississauga, ON,L5M 5P5

Income Tax Preparation
வருமானவரி தயாரிப்பு



# பேரா நாதன்

## சௌந்தரநாதன்

Real Estate Broker

**416.721.6563**

416.495.4072

www.peranathan.com

digi Media Creations

# விதைகளைச் சேமித்து வைத்துக் கொள்ளும் உரிமை உழவர்களிடமிருந்து பறிக்கப்படுகிறது

கடும் எதிர்ப்புகளுக்கிடையில் காப்புமை (திருத்தச்) சட்ட முன்வரைவு, ( The Patents Amendment Bill) இந்திய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

உலக வணிக நிறுவனத்தின் ( WTO) வணிகம்சார் நுண்மதிச் சொத்துமைக்கான ( Trade Related Intellectual Property Rights- TRIPs) விதிமுறைகளின் கீழ் வடிவமைக்கப்பட்டுள்ள இந்தக் காப்புரிமைச் சட்டக் கூறுகள் ஏற்கெனவே இரண்டு முறை திருத்தங்களுக்கு உள்ளாகியுள்ளன. 1970-ம் ஆண்டின் செய்முறைகளுக்கான காப்புரிமை (Process patent) என்பது முற்றிலும் மாற்றப்பட்டு, செய்பொருட்களுக்கான காப்புரிமை ( Product patent) என்பது இதன்மூலம் நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

**- மு. பாலசுப்பிரமணியன் -**

காப்புரிமை என்பது நம் நாட்டில் பொருள்களின் செய்முறைகளுக்கு மட்டுமே செய்யப்பட்டு வந்தது. இதன்படி செய்முறையில் சிறிய மாற்றங்கள் செய்து அதே பொருளை வேறு யாரேனும் தயாரித்துக் கொள்ளலாம். இப்போது உள்ள சட்டக் கூறுகளின்படி செய்பொருளையே காப்புரிமை செய்யலாம். எனவே இப்படிக் காப்புரிமை செய்யப்படும் பொருளை வேறு ஒருவர் செய்ய முடியாது. இது, மேலோட்டமாகப் பார்க்கும்போது நல்லதுபோலத் தோன்றலாம். ஆனால் இந்தக் காப்புரிமை விதிகள் வாழ்வாதாரமான விதைகள், மருந்துகள் போன்ற அடிப்படையான பொருள்களின் மீது பாயும்போது மிகப் பெரிய சிக்கலை உருவாக்குகின்றன. ஒரு சிலர் மட்டும் இதைக் கையில் வைத்துக்கொண்டு பெரும் பணம் திரட்டிக் கொள்ள முடியும். எந்த விலைக்கும் விற்றுக் கொள்ள முடியும். மேலும் இந்தக் காப்புரிமைச் சட்டத்தின்படி தாவரங்கள், நுண்ணுயிர்கள் மற்றும்சிறிய விலங்கினங்கள் ஆகியவை மரபனு மாற்றம் செய்யப்பட்டு ( Genetically Modified) காப்புரிமை செய்யப்படுகின்றன. அதாவது உயினங்களின் மரபனுக்களில் (Gene) மாறுதல்களைச் செய்து புதிய உயினம் என்று காப்புரிமை பெற்றுக் கொள்ளப்படுகிறது.

> **"ஆண்டாண்டு காலமாக விதைகளைப் பாதுகாத்து அடுத்த தலைமுறைகளிடம் கொடுத்த உழவர்களை இனிமேல் விதைக் காவலர்கள் (Seed Inspectors) கட்டுப்படுத்துவார்கள். உழவர்களின் வீடுகளில் வைத்திருக்கும் விதைகளைத் திடீரென்று "சோதனை" செய்து, உரிமம் இல்லாத விதைகளைக் காரணங்காட்டி தண்டத்தொகை விதிக்கலாம். தளைப்படுத்தவும் செய்யலாம்."**

உண்மையில் உயினங்களை மாந்தர்கள் உருவாக்கவில்லை. அவை இயற்கையின் கொடை. ஐ.நா. அமைப்பின் உயிரிப்பன்மய மாநாடு (Convention on Biodiversity) விதிமுறைகள், உயிருள்ளன வற்றை (நுண்ணுயிர்கள், தாவரங்கள், விலங்குகள் போன்றவற்றை) தனியார் " உடமை கோருதல்" கூடாது என்கிறது. "உயியல் பன்மயத்தன்மையைக் காக்க வேண்டும் " என்றும் கூறுகிறது. இந்த ஆவணத்திலும் இந்தியா கையொப்பமிட்டுள்ளது. ஆனால் இந்த உயிரிப்பன்மய மாநாட்டு ஆவணத்திற்கு சட்டவகை உரிமை இல்லை. அது பல் இல்லாத பாம்பு. ஆனால் வணிகம்சார் நுண்மதிச் சொத்துமைச் சட்டத்திற்கு சட்டவகை உரிமை உள்ளது. இதனால் தான் ஐ.நா. அமைப்பைவிட உலக வணிக நிறுவனம் ஆதிக்கம் செலுத்த முடிகிறது. எனவேதான் இந்திய அரசுக்கு உலக வணிக நிறுவனம் "நெருக்கடி" கொடுக்க முடிகிறது.

இனிமேல் பன்னாட்டு நிறுவனங்களின் பொருள்கள் நம் நாட்டிற்குள் பாயும். மருந்துகள், விதைகள் போன்ற வாழ்வாதாரங்களின் விலைகள் பன்மடங்கு உயரும். குறிப்பாக, பெரும்பான்மை மக்கள் ஈடுபட்டுவரும் வேளாண்மைத்துறை கடுமையான பாதிப்பிற்கு உள்ளாகும் என்பதுதான் இதற்கு கிளம்பி இருக்கும் எதிர்ப்புகளுக்குக் காரணம்.

வணிகம்சார் நுண்மதிச் சொத்துமை விதிகளின்படி, உயிர் காக்கும் மருந்துகள் கடுமையாகப் பாதிக்கப்படுவது ஒருபுறம் இருக்க, விதைகளைச் சேமித்து வைத்துக் கொள்ளும் உரிமை, உழவர்களிடமிருந்து பறிக்கப்படுகிறது. எல்லா விதைகளையும் இனி கம்பெனி மூலமாகவே வாங்க வேண்டிவரும். அதாவது விதைகளை இனி கட்டாயமாகப் பதிவு செய்து கொள்ள வேண்டும். பதிவு செய்ததைக் கண்காணிக்க விதை ஆய்வாளர்கள் வருவார்கள். இவர்கள் உழவனின் குடிசைக்குள் எந்த நேரத்திலும் நுழைந்து "பரிசோதிப்பர் ". ஆண்டாண்டு காலமாக விதைகளைப் பாதுகாத்து அடுத்த தலைமுறைகளிடம் கொடுத்த உழவர்களை

**37ம் பக்கம் பார்க்க...**



36ம் பக்கத் தொடர்ச்சி...

இனிமேல் விதைக் காவலர்கள் ( Seed Inspectors) கட்டுப்படுத்துவார்கள். உழவர் களின் வீடுகளில் வைத்திருக்கும் விதை-களைத் திடீரென்று “சோதனை “ செய்து, உரிமம் இல்லாத விதைகளைக் காரணங் காட்டி தண்டத்தொகை விதிக்கலாம். தளைப்படுத்தவும் செய்யலாம்.

மரபு விதைகளைக் கையாளுவதற்குத் தடையில்லை என்ற ஒரு வாதத்தை முன்வைக்கின்றனர், இந்தப் பன்னாட்டு நிறுவனங்களின் சார்பாளர்கள். நடைமுறை யில் இது இயலாது. உழவர் வைத்திருக் கும் விதை மரபு விதைதான் என்று மெய்ப்பிக்கப்படும்வரை சோதனைக்குத் தடையில்லை. எந்த உயினத்தையும் காப்புமைச் சட்டத்தின் கீழ் கொண்டு வரல் ஆகாது என்று உலகம் முழுமையும் எதிர்ப்பு இருந்த போதிலும் வணிகம்சார் நுண்மதிச் சொத்துமை விதிமுறைகள் நுண்ணுயிர்கள், விதைகள் போன்ற வற்றிற்கு காப்புமை கோருவதை உறுதி செய்கின்றன. விரல்விட்டு எண்ணக்கூடிய சில பன்னாட்டு நிறுவனங்கள் இப்படிப் பலவற்றிற்கும் காப்புமை பெற்றுள்ளன. இதன் மூலம் விதைச் சந்தையில் ஒற்றையாளுமை (Monopoly) செலுத்து கின்றன.

மரபனு மாற்று விதைகளின் மகரந்தத்தூள் அண்டை வயலில் விழுந்து அதே இன, நாட்டுவகைப் பயிர்களுடன் கலந்தால் அதைத் தமது விதைதான் என்று வழக்குத் தொடருகின்றன இந்த வணிகக் குழாம்கள். கனடா நாட்டில் இயற்கை வேளாண்மை செய்த பண்ணையாளர் ஒருவர் இப்படியான “வேலி தாண்டிய’ விதைகளுக்காகத் தண்டிக்கப்பட்டுள்ளார்.

இன்று இந்தியாவின் அடிப்படைக் கட்டு மானமாக இருக்கும் உழவர்கள் ஒவ்வொரு நாளும் தங்களது வாழ்வை இழந்து வருகிறார்கள். குறிப்பாக காப்புமைச் சட்டங்கள் மூலமாக மிக மோசமாகப் பாதிக்கப்படவுள்ள சிறுகுறு உழவர்களுக்கு இதுபற்றிய செய்தி ஏதும் தெயவில்லை என்பதுதான் மிகப்பெய சோகம். இனிமேல் ஆண்டாண்டு காலமாகத் தாங்கள் செய்து வந்த சேமிப்பு போன்ற செயல்களைத் தொடர்ந்து உழவர்கள் செய்யும்போது, ஏதும் அறியாமலேயே அவர்கள் சட்டத் திற்குப் புறம்பான (illegal) செயலைச் செய்பவர்களாக ஆகின்றார்கள்.

ஏற்கெனவே பசுமைப்புரட்சியின் விளைவாக உழவர்களிடமிருந்த விதைகள் அரசு நிறுவனங்களிடமும் பிற விதை விற்பனை யாளர்களிடமும் சென்றன. வணிகம்சார் நுண்மதிச் சொத்துமை விதிமுறைகள் அரசையும் தாண்டி முற்றிலுமாக உழவர் களை பன்னாட்டு நிறுவனங்களின் கைக-ளில் ஒப்புக் கொடுக்கின்றன.

மரபான விதைகளைப் பயிடுவதற்கு எந்தத் தடையும் இல்லை என்று நுண்மதிச் சொத்துமை விதிகள் கூறினாலும் நடை முறையில், நாளாவட்டத்தில் பன்னாட்டு நிறுவனங்களின் ஆதிக்கம் பசுமைப்புரட் சியின்போது எவ்வாறு மரபு விதைகளைக் கொண்டுபோனதோ, அதேபோல இப்போது கொஞ்ச நஞ்சம் உள்ள மரபு விதை களையும் கொண்டு போய்விடும். இந்தச் சட்டம் பன்னாட்டு நிறுவனங்களைக் காப் பாற்றவே பயன்படும்.

இந்த வகையான விதை ஒற்றையாளுமை, உழவர்களின் விதை உமையைப் பறிப்ப தோடு மட்டுமல்லாது, நாட்டின் உணவு உறுதிப்பாட்டிற்கே உலை வைப்பதாக அமைகிறது. நாட்டின் வேளாண்மைக்கான அடியாதாரமாக விளங்கும் விதைகள் ஒருசில வணிக நிறுவனங்களின் கைகளில் சென்றுவிடுமேயானால் நாட்டின் உணவு உறுதிப்பாடு, தற்சார்பு என்னாவது?

கடந்த மூன்று முறை நடந்த தேர்தல் களிலும், மக்கள் உலக வணிக நிறுவனம் தாங்கிப் பிடிக்கும் தாராளமயத்தையும் தனியார்மயத்தையும் எதிர்த்தே வாக்க ளித்து வந்துள்ளனர். பெரும்பான்மை மக்கள் தாராளமயத்தை வெறுக்கின்றனர். தாராளமயம் மிகப்பெரிய தோல்வியைச் சந்தித்து வருவதை பல ஆய்வுகள் மெய்ப்பிக்கின்றன. உலக வங்கி முழங்கிய “முன்னேற்றம்” மூன்றாம் உலக நாடுகளில் ஏற்படவில்லை. வறுமையும், வேலை யின்மையும் உலக மயமாகியுள்ளன. போர்கள் பெருகியுள்ளன. ஆகவே இந்தியாவிலுள்ள பெரும்பான்மை மக்களின் கருத்துக்கு ஏற்ப அரசு தனது நிலைப் பாட்டில் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும். சின்னஞ்சிறிய நாடான கியூபா தனது சொந்தக் காலில் நிற்கும்போது, பரந்துபட்ட இந்தியா, பன்மயமிக்க இந்தியா நிற்க முடியாதா?

■ ■ ■

**“மரபனு மாற்று விதைகளின் மகரந்தத்தூள் அண்டை வயலில் விழுந்து அதே இன, நாட்டுவகைப் பயிர்களுடன் கலந்தால் அதைத் தமது விதைதான் என்று வழக்குத் தொடருகின்றன இந்த வணிகக் குழாம்கள். கனடா நாட்டில் இயற்கை வேளாண்மை செய்த பண்ணையாளர் ஒருவர் இப்படியான “வேலி தாண்டிய” விதைகளுக்காகத் தண்டிக்கப்பட்டுள்ளார்.”**

**தாய்வீடு**
**பத்திரிகையில் விளம்பரம் செய்வீர்.**
**வணிகத்தின் எல்லைகளை விரிவாக்குவீர்!**
**416-400-6406**


## Mccowan Rd./Finch



Price is reduced to
***$210,000***

Shows Very Well
Steps To Woodside Mall
Steps to TTC Bus To Finch/Mccowan Subways,24 Hours
Close to Albert Campbell school

Finished Basement With Separate Entrance
End Unit like Semi
Seller Is Willing To Rent The Basement Apt. For $450/Month

Price is reduced to $210000

**commission 1%**

digi Media Creations



**குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குகள் செய்து தரப்படும்***

**Ranjan Kumaresiya**
Sales Representative

**Cell: 416.833.0152**
rkumaresiya@trebnet.com

**VEEDU REALTY INC. BROKERAGE**
1008 Midland Ave.
Toronto, ON
M1K 4G6
Tel: 416-759-6000
Fax: 416-759-6005
www.veedu.com

* ocac




## Go further with the Clarica opportunity.

If you're looking for independence, success, and an opportunity for financial rewards that reflect your efforts, then you should consider a career as a Clarica advisor in the financial services industry.

**What's driving you?** Call me or send your resume today!



**Chandran Rasalingam**
**Sales Manager**
Bus 416 412-0401 ext 305
Cell 416 909-0400
Fax 416 412-1438
2075 Kennedy Road, Suite 1300,
Scarborough ON M1T 3V3

gnanachandran.rasalingam@clarica.com
www.clarica.com/gnanachandran.rasalingam

CLARICA
*A Sun Life Financial Company*

Clarica Financial Services Inc.

# நல்லவீட்டில் குடிபுகுவோம்



வரதராஜா கந்தசாமி
- வீடு விற்பனைப் பிரதிநிதி -


தவறு 61: We didn't buy because we were afraid of making a mistake.

பாடம்: நீங்கள் வீடு சம்பந்தமான மேலதிக அறிவைப் பெருக்கிக்கொள்வதன் மூலமும் உங்களுடைய கனவு இல்லத்தை எளிதில் இலகுவாக்க முடியும். உதாரணமாக, "தாய்வீடு" பத்திரிகையில் வீடு சம்பந்தமான பலவித தகவல்கள் உள்ளடக்கப் பட்டிருக்கின்றன. இதுபோன்ற பத்திரிகைகளைப் படிப்பதன் மூலம் வீட்டைப்பற்றிய போதிய அறிவை வளர்க்க உங்களுக்குப் பெரிதும் துணைபுரிகின்றது. இரண்டு வருடங்களுக்கு முன்பு வீடு வாங்கிய டேவிட் - மரியா தம்பதிகள் எப்படி ஒரு நல்ல வீட்டிற்குக் குடிபுகுந்தார்கள் என்பதை அவர்கள் கூறும் கருத்துக்களின் அடிப்படையில் தெரிந்துகொள்வோம்.

பத்து வருடங்களுக்கு மேலாக வாடகை வீட்டிலிருந்தார்கள். அவர்கள் இருவருக்கும் வீட்டை வாங்கினால் தவறு விட்டுவிடுவோமோ என்கின்ற மனப்பயம். அக்காலப் பகுதியில் சில வீடுகளைப் பார்த்துவிட்டு, தமது விருப்பைத் தெரிவித்துவிட்டு, இறுதி நேரத்தில் வாங்காமல் விட்டுவிடுவார்கள். காரணம் வீட்டை வாங்கிய தங்களது உறவினர்கள், நண்பர்கள் மூலமும், நேரிலும், பத்திரிகைகளில் வந்த தகவல்கள் மூலமும் தவறுகளைத் தெரிந்து கொண்டார்கள். வீட்டைப்பற்றிய மேலதிக அறிவைப் பெற்றுக்கொண்ட அவர்கள் கூறும் கருத்திலிருந்து கற்றுக்கொண்ட பாடம் இதோ!

நீங்கள் பார்க்கும் வீடானது பலவித கேள்விகளை உள்ளடக்கியது. எப்படிப்பட்ட வீடு, எந்த இடத்தில் வாங்குவது என்பது மிக முக்கியமானது. அத்துடன், யாரை அணுகுவதன்மூலம் நீங்கள் விரும்பும் ஒரு நல்ல வீட்டைத் தெரிவுசெய்யலாம்? பலர் இவ்விடயத்தில் தவறுசெய்யப் பல காரணங்கள் உள்ளன. இப்படிப்பட்ட தவறுகளை எப்படித் தவிர்ப்பது என்பதுபற்றி சில தகவல்களை உங்களுக்குத் தருகிறோம்.

நீங்கள் வசிக்கப்போகும் வீடானது உங்களுடைய வாழ்க்கையில் மிக முக்கிய



பங்கை வகிக்கிறது என்பதைக் குறித்துக் கொள்க. முதலாவதாக எப்படிப்பட்ட வீட்டை நீங்கள் தெரிவுசெய்கிறீர்கள்? இந்த வீட்டின் அளவு என்ன? எத்தனை அறைகள்? இடம், கார் தரிப்பிடம், fire place, வேலி, துணி துவைக்கும் இயந்திரம், பாத்திரம் கழுவும் இயந்திரம் போன்றன உள்ளடக்கப்பட்டிருக்கின்றனவா என்பதை முக்கியமாகக் கருத்தில் கொள்க.

மேலும் பாடசாலைகள், சமூக மையம் (Community centre), விளையாட்டு மைதானம், போக்குவரத்து வசதிகள், வைத்தியசாலைகள், நூல் நிலையங்கள், பொருட்கள் வாங்கும் இடங்கள், அத்துடன் நீங்கள் வேலைபார்க்கும் இடம் அண்மையில் உள்ளதா? என்பதும் உங்களுடைய குடும்பத்திற்கு மிக முக்கியமானது.

இங்கே உங்கள் வீடானது நல்ல மூலதனமாக இருப்பதைக் கருத்திற்கொண்டு நீங்கள் எதிர்பார்க்கும் வீட்டை எந்த இடத்தில் வாங்குவது என்பதுபற்றி தற்போது முடிவு எடுத்துவிட்டீர்கள். தற்போது உங்களுக்குப் பிடித்தமான வீட்டை வாங்குவதற்கு வீடு விற்பனைப் பிரதிநிதியை தெரிவுசெய்துவிட்டீர்கள். தற்போது உங்களது பணவசதிக்கு ஏற்றவாறு வாங்குவதுபற்றி முடிவு செய்துவிட்ட நீங்கள், தற்போது உங்களது வீடு விற்பனை முகவர் ஊடாக பல வீடுகள் பார்வையிட்டிருக்கிறீர்கள். பல வீடுகள் பார்த்துவிட்ட உங்களுக்கு முக்கியமாக சில வீடுகள் பிடித்துவிட்டன. இனி எந்த வீடு தரமானது? பெறுமதியானது? நீங்கள் முடிவெடுக்கும் தருணம் நெருங்கிவிட்டது. இங்கே முக்கியமானது அவ்வீட்டின் structure and grounds. இவற்றிற்கு பரிசோதனை முக்கியம். அத்துடன் அவ்வீடு அமைந்துள்ள இடமும், அயலில் வசிப்பவர்களையும் மீண்டுமொருமுறை குறித்துக்கொள்வோம்.

வீட்டை விற்பவரிடம் இருந்து பெற்றுக்கொண்ட நில அளவை வரைபடம். அதனை மீண்டுமொருமுறை பரிசோதனை செய்க. உதாரணமாக வீடு அமைந்துள்ள காணியின் எல்லைகள் எல்லாம் சரியாக இருந்தால் உங்களுக்கு அது அதிர்ச்சியைத் தராது. தற்போது உங்களுக்கு அவ்வீடானது நன்றாகவே பிடித்துவிட்டது. தற்போது நீங்கள் அவ்வீட்டைப் போய்ப் பார்த்து வீட்டுப் பரிசோதனை செய்ய வேண்டும். அதில் கவனிக்க வேண்டிய முக்கிய விடயங்கள்:

1. Structural defects
2. Signs of water damage
3. Lack of water pressure
4. Faulty plumping
5. in adequate wiring

நீங்கள் அதிக தொகை கொடுத்து வாங்கும் இவ்வீட்டிற்கு நன்கு தேர்ச்சிபெற்ற வீட்டுப் பரிசோதனைகளை அணுகுவது என்பது மிக முக்கியமானது. அவர் அவ்வீட்டைப் பரிசோதனை செய்கையில் நிலவறை முதற்கொண்டு கூரை வரை அவ்வீட்டைப் பரிசோதிப்பார். அத்துடன் heating and cooling system, plumping, walls, roof and ceiling, insulation, electrical wiring, foundation, ventilation, doors, and windows and septic and sewer system என்பன இதில் முக்கியமாக உள்ளடங்கும். அவ்வீட்டைப் பரிசோதனை செய்தபின் ஏதாவது திருத்த வேலைகள் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளதா? எதிர்காலத்தில் அவ்வீட்டை எப்படி பராமரிப்பது என்பதுபற்றியும் அவரிடம் விளக்கம் கேட்கவும். அத்துடன் நல்ல

## தொடர் 1-22

திட்டமிடுதலுடன் அவ்வீட்டை உங்கள் குடும்பத்துடன் குடும்ப நலன்கருதி செயற்படுவீர்களானால் அது உங்களுக்கு எதுவித அதிர்ச்சியையும் தராது என்று குறிப்பிடுகிறார்கள் David and Maria தம்பதிகள். அத்துடன் மரியாவின் கருத்தின்படி, 2 வருடங்களில் அவ்வீடானது 20,000 டொலர்களினால் அதிகரித்துள்ளதாக மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

தவறு 62: We are thought it over and decided to continue renting.

பாடம்: அதிகமான கனடியர்கள் தொடர்ந்து வாடகை வீட்டில் வசித்து வருகிறார்கள். இது அவர்கள் விட்ட மாபெரும் தவறாகும். கனடாவில் வீட்டு வாடகை அதிகமாகக் காணப்படுகிறது. அதன் காரணமாக அநேகமான கனடியர்கள் வீடு வாங்கத் தயக்கம் காட்டிவருவது குறிப்பிடத்தக்கது. ஆனால், வீட்டை வாங்கியவர்கள் கூறும் கருத்தின்படி வாடகைக்கு இருப்பதைவிட சொந்தமாக வீடு வைத்திருப்பதால் ஏற்படும் நன்மைகள் சில:

1. வீட்டுரிமை என்பது பாதுகாப்பானது.
2. செல்வம் தரக்கூடியது மட்டுமல்ல வசிப்பதற்கும் உதவுகிறது. வாடகைக்கு இருப்பதால் அது வசிப்பதற்கு மட்டுமே பயன்படுகிறது.
3. வீட்டுரிமை என்பது நீண்ட கால நோக்கில் பார்க்கும்போது வீடானது சொந்தமாக வரும் வாய்ப்புமுள்ளது. ஆனால், வாடகை வீடு அப்படியல்ல.

இங்கே புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் குறுகிய காலத்தில் தங்களது கடினமான உழைப்பால் அதன் பயனாக வீடுகள் வாங்கி வாடகைக்கு விடுவதும், வீடு வாங்குவதும் வீட்டைப் பராமரிக்கும் வியாபார நிலையங்களை ஆரம்பித்து வெற்றி நடைபோடுவதும் அதற்கு உறுதுணை புரியும் வீடு விற்பனை முகவர்களையும், ஊடகங்களையும் உருவாக்கித் தந்த எமது மக்களுக்கு நன்றி கூறவேண்டும்.

தவறு 63: The sellers wouldn't move out of the house.

பாடம்: Put a penalty clause in your contracted that will force the sellers either to move or pay.

புதிய வீடானால்: நீங்கள் புதிய வீட்டிற்குக் குடிபுகும் பட்சத்தில் அவ்வீடானது நீங்கள் எதிர்பார்க்கப்பட்ட திகதிக்குள் கட்டி முடிக்காமல் இழுக்கலாம். அதற்கான காரணங்களான காலநிலை, கட்டுமானப் பொருட்கள் தட்டுப்பாடு, வேலை பகிஸ்கரிப்பு, கட்டடம் கட்டுபவர், ஒப்பந்தகாரர்கள், உப ஒப்பந்தகாரர்களுக்கு இடையேயான பிணக்குகள் காரணமாக அமையலாம். சில வேளை 2-6 மாதங்கள் கூடத் தாமதமாகலாம். அப்படி நிகழும் பட்சத்தில் ஒப்பந்தப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள (Completion delay penalty in your purchase contract) Penalty clause இல் குறிப்பிட்டதுபோன்று கட்டடம் கட்டுபவரிடமிருந்தோ அல்லது கட்ட ஒப்பந்தகாரரிடமிருந்தோ அதற்கான அபராதத்தை அறவிட வாய்ப்புள்ளது. ஆனால், அவர்கள் Penalty clause ஐ அதிகம் விரும்பாமல் உங்களிடம் பேச்சுவார்த்தை நடாத்தி ஒரு நல்லிணக்கப் பாட்டிற்கு வருவார்கள்.

பழைய வீடானால்: வீட்டின் நிலவறைப் பகுதியில் வாடகைக்கு குடியிருக்கும் குடியிருப்பாளர்கள் எதிர்பாராத விதமாக அவ்வீடானது விற்கப்படும்போது, அக்குடியிருப்பாளர்கள் அவ்வீட்டை விட்டு வெளியேற மறுப்பார்கள். land load – Tenant இணைக்கப் பத்திரம், சட்டத்தரணியின் ஆலோசனை, வீட்டை வாங்குபவருக்கும் வீட்டை விற்பவருக்கும் உள்ள நல்லிணக்கப்பாடு மிக முக்கியமாகக் கருதப்படுகிறது. வாடகைக் குடியிருப்பாளர் வெளியேற மறுக்கும் பட்சத்தில் ஒப்பந்தப் பத்திரத்தில் குறிப்பிட்டது போன்று penalty clause இல் இருந்து பணம் அறவிடப்படும்.

(தொடரும்)

நல்ல வீட்டில் குடிபுகுவோம்!

• வீடு வாங்குதல் • வீடு விற்றல் • வீட்டிற்கான ஈட்டுக்கடன்


முதலீட்டாளர்களுக்கு ஓர் நற்செய்தி!

காணி வாங்கி வீடு கட்டுதல்!
ஒன்ராறியோ Building Code ற்னமைய
காணி வேண்டி வீடு கட்டுதல்
-ரொரன்டோ அல்லது அதன் புறநகர்ப்பகுதிகள்-

Cottage கட்டுதல்!
உங்கள் விடுமுறையை
உல்லாசமாகக் களித்திட
காணி வாங்கி Cottage
கட்டுதல்

தோட்டக்காணி வாங்குதல்!
Farm Land Opportunities
Custom Built Homes
காணிகள் விற்பனைக்கு உண்டு

• B.Eng (Hons) London UK
• Environmental Management Post Graduate Diploma - Construction- Niagara College
• Project Management - George Brown College
• Ontario Building Code - Part 9
• C.E.T - Road Construction Senior Inspector - MTO Designation



Varatharajah Kandasamy
Sales Representative
Dir: 647•898•2991
Off: 416•759•6000

VEEDU REALTY INC.
BROKERAGE
1345 Morningside Ave. Suite 8
Toronto Ont. M1B 5K3
Tel: 416.759.6000

# வீடு, வியாபார நிலையங்கள் வாங்க, விற்க...

Share Our 23 years Award Winning Experience in Real Estate

**Chandran Sornalingam**
Broker

KARU'S ROYAL TEAM
Top 10 TEAM Across CANADA

ROYAL LEPAGE
Connect Realty, Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED

**Cell: 416-722-1654**
**Bus: 416-284-4751 (24 Hrs.)**
880 Ellesmere Road. Suite 203, Scarborough, ON.



**Pickering**



$ 750,000
- Bar & Grill Restaurant
- Excellent Business
- Amazing Location

**Markham**



$ 199,000
- Convenience/ Grocery
- Excellent Location
- Great Potential

**Toronto**



$ 125,000
- Supermarket/ Grocery
- Established Business
- Good lease Term

**Toronto**



$ 280,000
- Beaches Area
- Established Pub
- Excellent Rent

**Toronto**



$ 150,000
- Excellent Location
- Fine Dining Restaurant
- Profitable Business

**Brampton**



For Lease
- Exclusive Usage for dental Office
- Good Location

**Whitby**



$ 350,000
- Established Pub
- Excellent Location
- Makes Money

**Toronto**



$ 250,000
- New Bar & Grill
- Good Location
- Turn Key Operation

**Sold Franchises**

**Fox & Fiddle**
Toronto, Pickering
Waterloo, Uxbridge
And New market

Crown & Anchor Brampton
Macleod's Hamilton
Gator Ted's Burlington

Finnegan's Wake Oakville
Albert's Parlour Toronto
Stone house Scarborough
Heritage Champions Markham

---

PENS
CLOCKS
CALENDERS
MEMOS
MEASURING TAPES
CELL PHONE STANDS
FRIDGE MAGNETS
B. CARD HOLDERS
CORPORATE GIFTS
SEASONAL GIFTS
LASER ENGRAVING
PAD PRINTING
AND MORE................

# One Stop for
## TROPHIES, AWARDS AND PROMOTIONAL PRODUCTS

2007ம் ஆண்டுக்கென தமிழ்க் கலை சார்ந்த
தொழில், வியாபார விருத்தி அன்பளிப்புப் பொருட்கள்
(PROMOTIONAL PRODUCTS)
கலை சார்ந்த நிறுவனங்களுக்கும் கலை நிகழ்வுகளுக்கும்
சிறப்பு விலைகளில் கிடைக்கிறது.

புதிய அறிமுகம்

On high, with your thoughts
உங்கள் எண்ணங்களோடு உயரத்தில்





**PROMAR**
Awards & Promotions Ltd

www.promarawards.com **416-291 2344**

585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5

---

The Big choice
இல்லங்களை அழகுபடுத்த ஓர் பெரிய தெரிவு

மிகப் பெரியதும் மிக வித்தியாசமுமான வீட்டு, அலுவலக
சுவர்களை அலங்கரிக்கும் வர்ணக் கலைப் பொருட்கள்

சிறப்புத் தெரிவுகளாகவும், குறைந்த எண்ணிக்கையிலும்
இறக்குமதி செய்யப்பட்டிருப்பதால் உங்கள் தெரிவுகளுக்கு முந்துங்கள்
IN WHOLESALE PRICE FOR RETAIL

80 Nasdane Rd Unit C-59 416-898 4846

# Basement செய்வதற்கு

## தேவையான சில தகவல்கள்


தயாளன் சிவசம்பு

- ஈட்டுக் கடன் பிரதிநிதி -




வீட்டின் முக்கியமான தேவையை Basement பூர்த்தி செய்வதற்கு வாய்ப்புகள் உண்டு. ஆகவே அவற்றைச் சரியான முறையில் செய்வதால் எதிர்காலத்தில் எதிர்கொள்ள வேண்டிய பல பிரச்சினைகளைத் தவிர்த்துக்கொள்ளலாம். Basement ஐ வீட்டு உரிமையாளர்கள் இரண்டு காரணங்களுக்காகச் செய்வார்கள்.

முதலாவது இட வசதிக்காகவும், இரண்டாவதுBasement ஐ வாடகைக்குக் கொடுத்து ஒரு வருமானத்தைத் தேடிக்கொள்வதற்காகவும் செய்வார்கள். நாம் எவ்வாறு basement ஐச் செய்தால் அது வீட்டின் பெறுமதியை அதிகரிக்கும் எனவும், வீட்டிற்குத் தேவையான இடவசதியை உருவாக்கலாம் எனவும் பார்ப்போம்.

Basement ஐ எவ்வாறு செய்தல் வேண்டும் எனத் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். அத்தோடு எந்தத் தேவைக்கு நாம் Basement ஐப் பாவிக்கப் போகின்றோம் என முடிவு எடுத்தல் வேண்டும். Basement ஐ entertainment, பிள்ளைகள் விளையாடவும் பாவிக்கலாம். அதே நேரத்தில் நாம் எவ்வளவு பணம் செவழிக்கத் தயாராக இருக்கின்றோம் எனவும் முடிவு எடுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

பொதுவான கணக்கெடுப்பின்படி 10 வீதத்திற்கும் 20 வீதத்திற்கும் இடையிலான வீட்டின் பெறுமதியை திருத்துவதில் செலவிடலாம். அவ்வாறு செலவழிப்பதன் மூலம் நீங்கள் basement ல் செவழித்த பணத்தை வீட்டை விற்கும் போது ஈடுசெய்வதற்கு வாய்ப்புகள் உண்டு.

அதே நேரத்தில் basement ஐச் செய்யும் போது நாங்கள் தெரிவு செய்யும் நிறங்களோ அல்லது அலங்காரங்களோ பொதுவானதாக இருந்தால், அதாவது கூடுதலான வீட்டு உரிமையாளர்களால் ஏற்கக் கூடியதாக இருத்தல் நலம். நாம் எமது தனிப்பட்ட விருப்பதிற்கு மட்டும் தெரிவு செய்யும் போது அது சில நேரத்தில் பலராலும் ஏற்க முடியாது இருக்கலாம். அப்படியான நிலையில் நாம் எமது வீட்டை விற்கும் நேரத்தில் எமது விலைக்கேற்றவாறு விற்க முடியாது ஏற்படும். ஆகவே எமது ரசனைக்கு வேண்டும் என்றால் சுவர்களின் நிறங்களையோ அல்லது furniture என்பவற்றையோ பாவிப்பதன் மூலம் வீட்டை விற்கும் போது இலகுவாகப் பலரும் ஏறக்கக்கூடியதாக மாற்றிவிட்டு விற்றுக் கொள்ளலாம். அதே நேரத்தில் நீங்கள் விரும்பிய நிறத்தைத் தேர்ந்து எடுக்கும் போது அது இலகுவில் மாற்றக் கூடிய நிறமாக இருந்தால், மாற்றும் போது ஒரு தரமோ இரண்டு தரமோ மாற்றி அடித்து மாற்றிக் கொள்ளலாம். இல்லாவிடில் அந்த நிறத்தை மாற்றுவதற்குக் கூடிய பணத்தைச் செலவிட நேரும். அதாவது labour cost ஐ அதிகரித்து விடும்.

### Basementல் எவ்வாறு Humidityஐக் குறைத்துக் கொள்ளலாம் எனப்பார்ப்போம்.

Basement இல் அதிகளவு பகுதி நிலத்திற்குக் கீழே இருப்பதால் Humidity Dampness அதிகளவு ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் உண்டு. கீழே கொடுக்கப்பட்டுள்ள சிலவற்றைக் கவனத்தில் எடுப்பதன் மூலம் அவற்றைக் குறைத்துக் கொள்வதற்கு உதவியாக இருக்கும்.



- Cold Storage அறையை இயற்கையான காற்றோட்டம் உள்ள யன்னல் ஊடாகவோ அல்லது சுவரில் ஒரு துவாரத்தை ஏற்படுத்தி அதன் மூலமாகவோ காற்றோட்டத்தை உருவாக்கலாம்.
- Basement இல் storage ஏதாவது செய்யும் போது, பொருட்களை செய்து முடிக்கப்படாத நிலத்திலோ அல்லது சுவரிலோ வைத்தல் நல்லதல்ல.
- அதிகமான Storage அல்லது மேலதிகமான Closets தேவையான காற்றோட்டத்தைக் குறைத்துக் கொள்ளும்.
- Basement உள்ள எல்லா இடங்களும் காற்றோட்டம் உள்ளதா எனக் கவனித்தல் வேண்டும்.
- April மாதம் போன்ற காலத்தில் Central Humidities ஐத் துண்டித்து வைத்துக் கொள்ளுதல் நல்லது.
- Basement இல் நிலத்தில் போடும் Materials, Vinyl, PVSஅல்லது Ceramic ஆக இருத்தல் நல்லது. Carpet அல்லது Wood ஒரு நல்ல தெரிவாக இருக்கமாட்டாது.

மேலே கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் Basement ஐ எவ்வாறு ஈரப்பதன் இல்லாது வைத்திருக்க உதவி செய்யும் எனப் பார்த்தோம்.

நாம் ஈரப்பதனைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளாவிட்டால் Basement Mold, Mildew. Fungi அத்தோடு Bacteria என பலவை வந்தால் அது உங்களது சுகாதாரத்தைப் பாதிக்கும்.

Mold வராமல் இருப்பதற்கு அதற்கான சுற்றாடலை உருவாக்குதல் வேண்டும். அப்படியான சுற்றாடலை எவ்வாறு உருவாக்கலாம் எனப் பார்ப்போம்.

- Wood Studs ஐப் பாவிப்பதால் அது நனைந்து வெடிப்பதால் Mold வளர்வதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்கும். ஆகவே Steels Studs ஐப் பாவிக்கவும்.
- Styrofoam I Vapor Barrier இற்குப் பதிலாகப் பாவிப்பதால் Styrofoam, Vapor Barrier ஆகவும் insulator ஆகவும் செயல்படும்.
- Pink insulation இற்குப் பதிலாக Styro foam ridge ஐப் பாவிக்கலாம்.
- Air Cavities என்பது basement சுவர்களில் பொதுவாக வருவதுண்டு. ஆகவே அதை வராது பார்த்துக் கொள்ளுதல் வேண்டும்.
- Basement ஒரு floor இன் மேல் இன்னொரு floorஐ போடுதல் நல்லதல்ல. Subfloor, ஈரப்பதனை மற்றயை floor இற்கு இடையில் உருவாக்க வாய்ப்புண்டு.

■ ■ ■


**The Perfect Mortgage**
**Cutting The Cost Of Home Ownership**



- First and Second Mortgages
- Pre-Approved or any Mortgage needs
- Bank or Private

உங்களின் அனைத்து ஈட்டுக்கடன் தேவைகளுக்கும் அழையுங்கள்

csi MORTGAGES

"Providing Solutions for all your Mortgage Needs"



தயாளன் சிவசம்பு
Mortgage Consultant
416•558•4699
Fax: 905•819•2420
e-mail: asivasampo@users.morty.com

அத்துடன் வீடு வாங்க விற்க வசதி செய்து தரப்படும்.


மனிதரைப் பயமுறுத்தும் பலவற்றில்

அணு ஆயுதங்களும் கொடியவை.

அதே போல மற்றொன்று எப்போது எப்படி வரும் என்று

தெரியாதது புற்று நோய்.

தற்போது கண்டு பிடித்திருக்கும் ஓர் உயிரியல் புரதத்தின்

உதவியுடன் புற்றுநோய்பரவுவதைக் கட்டுப்படுத்தமுடியும்

என்று ஆய்வாளர் நம்புகின்றனர்.

*DIP* எனப்படும் இந்தப் புரதம் ஒரு ஒரு கலத்திலிருந்து

மற்றொரு கலத்திற்கு புற்றுநோய் பரவுவதைத் தடுக்கிறது

என்கின்றனர். நல்லதுதான்.

எப்போது நடைமுறை மருத்தவத்துக்கு வரும்?

# வீட்டார் பதில்கள்

## த. சிவதாசன்




கேள்வி:

**எனது வீட்டில் குசினி நீர்க்குழாயி லிருந்து நீர் ஒழுகிக்கொண்டிருக் கிறது. புதிய வால்வு, ரப்பர் சீல் எல்லாம் மாற்றிவிட்டேன். நீர் ஒழுக்கு நின்றபாடில்லை. நிவர்த்தி என்ன?**

**சிறீகாந்தன் மார்க்கம்**

பதில்:

உங்கள் நீர்க்குழாயில் வால்வு செப்புக் குழாயை மூடும் இடத்தில் இருக்கும் "சீட்" (seat) டில் வெடிப்பு அல்லது ஒறுவாய் வந்திருக்க வாய்ப்புண்டு. வால்விலுள்ள ரப்பர் வாசர் இந்த பித்தளை "சீட்" டுடன் இறுக்கமாகப் பூட்டப்பட்டாலும் மிக அழுத் தத்தோடு வரும் நீர் இந்த ஒறுவாயினூடு வெளியே வரக்கூடியதாயிருக்கும். இந்த "சீட்" ஒரு அறுகோணத் துவாரத்தைக் கொண்ட பித்தளையினாலான நட்டு (nut). நீர்க்குழாயின் இறுதியிலிருக்கும் அரை இஞ்சி புரித் துவாரத்தில் இந்த நட் பூட்டப்பட்டிருக்கும். இதைக் கழற்றுவதற்கு விசேடமான அறுகோண அலன் கீ எனப்படும் சாவி தேவை. Home Depot போன்ற கடைகளில் இந்த "சீட்" டையும் இதற்கான ஒரு விசேட கருவியையும் வாங்கிக்கொள்ளலாம் (Plumbing Section). இந்த சீட் பல அளவுகளில் கிடைப்பதால் பழைய சீட்டைக் கழற்றிக் கொண்டு போதல் நல்லது.

கேள்வி:

**சமீபத்தில் எனது புதிய வீட்டிற்கு ஒரு கடிதம் வந்தது. எனது வீட்டின் சோலை வரி (Property Tax) கூட்டப் பட்டிருக்கிறது என்றும் அதைக் குறைக்க விரும்பினால் ஒரு கட்டணத்தைக் குறிப்பிட்டு அதற்குக் காசோலை அனுப்பும்படியும் கேட்டி ருந்தார்கள். அப்படி சோலை வரி யைக் குறைக்க வழிகளுண்டா?**

**கணேஷ் ஸ்காபரோ**

எல்லா வீட்டுச் சொந்தக்காரர்களுக்கும் MPAC என்ற நிறுவனத்திடமிருந்தோ அல்லது நகரசபைத் திணைக்களத்திடமிருந் தோ வீட்டுக்கான தீர்க்கப்பட்ட வரிப் பெறுமதி (Assessed Value) என்ற ஒரு தொகையைக் குறிப்பிட்டு ஒரு பத்திரம் அனுப்பப் படுகிறது. இது உங்கள் வருமான வரி என்று நினைத்துச் சந்தோசப்பட்டு விடாதீர்கள். இது உங்கள் வீட்டுக்கு நகர-சபை வரிக்காரணங்களுக்காக தீர்மானித்த பெறுமதி. 1999ம் ஆண்டு மாநில அரசினால் அமுல் செய்யப்பட்ட புதிய சோலைவரி முறை. இதை Actual Value Assessment என்ற பெயரில் அவர்கள் அழைத்தார்கள். இந்த வரிப்பெறுமதியை அந்தந்தப் பிராந்தியத்துக்குரிய Mill Rate இனால் பெருக்க வருவதே நீங்கள் கட்ட வேண்டிய உண்மையான வருமான வரி.

உங்களுக்கு வந்த கடிதம் இந்த உண்மை யான வருமான வரியைக் குறைத்து தருகிறோம் என்று ஒரு தனியார் நிறுவனத் திடமிருந்து கிடைத்திருக்கிறது. உங்களின் விண்ணப்பப் பணம் கிடைத்ததும் வரிக் குறைப்புக்கான விண்ணப்பத்தை அவர்கள் அனுப்புவார்கள். அதன் விளைவாக நகர-சபை உங்கள் சோலை வரியை மறு பரிசீலனை செய்யும். சில வேளைகளில் உங்கள் வரி குறைக்கவும் படலாம். அல்லது அதிகரிக்கவும் படலாம். பேசாமல் அக்கடிதத்தைக் குப்பையில் போடுங்கள். வரி மீளாய்வு தேவையானால் நகரசபை யிடம் நேரே போய் விண்ணப்பியுங்கள். சரியான காரணங்கள் கொடுக்கப்படாவிடின் வரி குறைக்கப்படுவதற்கான சாத்தியக்கூறு கள் இல்லை. உங்கள் தெருவில் உள்ள ஏனைய வீடுகளை விட உங்கள் வீட்டின் பெறுமதியைக் குறைக்கும்படியான அம்சங் கள் ஏதாவதிருப்பின் அவை பாதிப்பான காரணிகளாகக் காட்டி வரிக்குறைப்புக்கு விண்ணப்பிக்கலாம். ஆனால் வரி மதிப்பவர் உங்கள் வீட்டை மீள்மதிப்பீடு செய்ய வரும்போது உங்கள் நிலக்கீழ் வீட்டில் யாராவது வதிவது கண்டு பிடிக்கப்பட்டால் உங்கள் வரியை அவர் அதிகரிக்கவும் செய்யலாம்.

> **“ வட்டியை மட்டும் கட்டி முதலைக் கட்டப் பழகாத ஒருவர் இறுதியில் வீட்டையும் வங்கியிடமே விட்டுச் செல்லுதற்கான ஆபத்துகள் நிறையவுண்டு. ”**

பி.கு. புதிய வீடுகளுக்கு நகரசபையின் முழு சேவைகளும் வழங்கப்படும்வரை (முழுதான தெருப்பாவனை) ஒரு இடைக் கால வரியையே நகரசபை அறவிடும்.

கேள்வி

**அடமானக் கடனுக்குப் (Mortgage) பதிலாக பாவனைக் கடன் (Line of Credit) என்று வங்கிகளால் கொடுக்கப்படுகிறதாமே. இரண்டுக்கு முள்ள வேறுபாடுகள், இணக்கங்கள் என்ன?**

**தேவசகாயம் மார்க்கம்**

பாவனைக் கடன் என்ற Line of Credit என்பது தங்கள் அபிமான வாடிக்கையாளர் களுக்கு வங்கிகளால் கொடுக்கப்படும் ஒரு வகையான சலுகைக் கடன். இக்கடனை எப்போதும் தரப்பட்ட வரையறைக்குள் எவ்வளவு தொகையையும் எடுக்கலாம். தண்டமில்லாது எப்போதும் திருப்பித் தரலாம். குறைந்த பட்ச கட்டுப்பணத்துக்கு மேல் விரும்பிய தொகையை மாதா மாதம் கட்டிக் கொள்ளலாம். சாதாரண நுகர்வோர் கடன் (Consumers Loan), வாகனக் கடன் (Car Loan) போன்ற கடன்களை விட இக்கடனுக்கு வட்டி குறைவாகவிருக்கும். இக்கடனின் பாவித்த தொகைக்கு மட்டுமே வட்டி அறவிடப்படும். அதாவது 10,000 டாலர்களுக்கு பாவனைக் கடன் அனுமதி இருந்து அதில் 2000 டாலர்களை மாத்திரமே பாவித்திருந்தால் அந்தத் தொகைக்கு மட்டுமே வட்டி வசூலிக்கப் படும். அநேகமான வங்கிகள் முதன்மை வட்டியைவிட (Prime Rate) 2 வீதம் அதிகமாக வசூலிக்கிறார்கள். இப்படியான பாவனைக் கடனுக்கு ஈடாக (Collateral) எதுவும் கேட்கப் படுவதில்லை. இதனால் இப் பாவனைக் கடனை காப்பற்ற கடன் (Unsecured Line of Credit) என்கிறார்கள்.

இதை விட இன்னுமொரு வகையான பாவனைக் கடனை வங்கிகள் வழங்கு கின்றன. அது காப்புள்ள பாவனைக் கடன் (Secured Line of Credit) எனப்படும். இப்படியான கடனைத் தருவதற்கு முன்னர் உங்கள் நிலையான சொத்து (பெரும்பாலும் உங்களுடைய வீடு) ஒன்றை ஈடாக வைக்க வேண்டும். இதையேதான் சில வங்கிகள் அடமானத்துக்குப் பதிலாகக் கொடுக்கிறார்கள். அடமானம் மீளப்படாத பட்சத்தில் வங்கி எப்படி உங்கள் வீட்டை அபகரிக்குமோ அது போலவே இத்தகைய பாவனைக்கடனை மீட்காத பட்சத்தில் வங்கி வீட்டை அபகரிக்கும்.

அடமானக் கடனுக்கும் பாவனைக் கடனுக்குமுள்ள வேறுபாடுகள் சிலவுண்டு. அறுதியாக்கப்பட்ட (Closed) அடமானக் கடன்களை தவணை முடியு முன்னர் மீளத் திருப்பினால் பொதுவாகத் தண்டம் கட்ட வேண்டி வரும். பாவனைக் கடனை எப்போதும் கட்டி முடிக்கலாம் கால வரையறை இல்லை. அடமானக் கடனின் மாதக் கட்டுப் பணம் வட்டியையும் முதலையும் கொண்டிருக்கும். 25 வருடக் கடன் பெரும்பாலும் 25 அல்லது அதற்குக் குறைந்த வருடங்களில் கட்டி முடிக்கப்படும். ஆனால் பாவனைக் கடனை ஒருவர் எத்தனை வருடங்களென்றாலும் வட்டியை மட்டுமே கட்டிக்கொண்டு இருக்கலாம். வங்கிக்கு இதனால் லாபம். இப்படியே வட்டியை மட்டும் கட்டி முதலைக் கட்டப் பழகாத ஒருவர் இறுதியில் வீட்டையும் வங்கியிடமே விட்டுச் செல்லுதற்கான ஆபத்துகள் நிறையவுண்டு. "வட்டியை மட்டுமே கட்டுங்கள். முதலுக்குச் சேர வேண்டிய தொகையை அதிய லாபம் தரும் வேறு முதலீடுகளில் போடுங்கள். அதில் கிடைக்கும் லாபம் உங்கள் கடன் வட்டியை விடவும் அதிகமாகவிருக்கும்" என்று சில வங்கிகள் ஆலோசனை சொல் கின்றன. அந்த முதலீடுகள் உத்தரவாத மற்றவை. உத்தரவாதமுள்ள முதலீடுகள் தரும் வட்டி உங்கள் கடனுக்குரிய வட்டியை அண்மித்தே இருக்கும். அதிக லாபத்தை எதிர்பார்க்கும் முதலீடு ஒரு வகையில் சூதுதான். அதை ஏற்றுக் கொள்பவர்கள் அடமானத்துக்குப் பதிலாக பாவனைக் கடனை எடுக்கலாம். கட்டாய மாக வட்டியோடு முதலையும் சேர்த்துக் கட்டி விரைவாக கடனை முடிப்போமென்று சங்கற்பம் பூண்பவர்களும் பாவனைக் கடனைத் தெரிவு செய்யலாம். வியா பாரிகள், அதிக பணமீட்டுபவர்கள், ஒழுங் கற்ற ஊதியமுடையவர்கள் போன்றவர்கள் இடைக்கிடை பெருமளவு பணம் கையில் கிடைக்கும்போது கடனைக் கட்டிக் கொள்ளலாம். அவர்களுக்கும் இப் பாவனைக் கடன் முறை சிறந்தது. மாதா மாதம் அறுதியான சாதாரண ஊதியம் பெறும் ஒருவருக்கு இக் கடன் நல்லதல்ல. அது அவரை மேலும் கடனாளியாக்கியும் விடலாம்.

...

www.inayam.net

- கலை விழாக்கள்
- எழுச்சி நிகழ்வுகள்
- ஊர்ச்சங்க ஒன்றுகூடல்கள்
- திருவிழாக்கள்
- கொண்டாட்டங்கள்
- நடன. நாடக. இசை விழாக்கள்
- குடும்ப நிகழ்வுகள்
- மரணச் சடங்கு நிகழ்வுகள்

எதுவானாலும்.

இணையம் .net மூலமாகத் தெரியப்படுத்துங்கள்.

உங்களுக்கு அனுகூலமான இடம். காலம். நேரங்களில் ஏனைய நிகழ்வுகள் திட்டமிடப்பட்டுள்ளனவா என்பதை முன்கூட்டியே அறிந்துகொண்டு உங்கள் நிகழ்வுகளை நிர்ணயித்துக் கொள்ளுங்கள்.

முன்கூட்டியே inayam.net இல் பதிவு செய்துகொள்வதன் மூலம் ஏனைய நிகழ்வுகளோடு போட்டிகள் உருவாகுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் நிகழ்வுகள் திருப்திகரமாக நடந்தேறுவதற்கு பங்குபெறும் மக்களின் அனுகூலம் முக்கியமானது.

இதைக் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்ட ஒருங்கிணைப்புத் தளமே inayam.net

முயற்சி செய்யுங்கள்!

முற்றிலும் இலவசம்

inayam

416•400•6406

digi

# LOFRANCO CHAGPAR
PERSONAL INJURY LAWYERS

## 30 மில்லியன் டொலர்கள்

**2006ம் ஆண்டு இழப்பீடாக மீளப் பெற்றுக்கொடுத்துள்ளோம்**

**Toronto**
Tel (416) 223-8333 Fax (416) 223-3404
5255 Yonge St., Unit 1300, North York, ON M2N 6P4

**Brampton**
515 Ebenezer Rd., Unit 104, Brampton, ON L6P 2K7

**Mississauga**
257 Dundas St. East, Unit 1, ON L5A-1W8

**Kitchener**
29 King Street East, Unit 7, Kitchener, ON N2G 2K4

www.lofrancochagpar.com

- வாகன வீதி விபத்தில் காயமடைந்தீர்களா?
- விபத்தின் காரணமாக வேலைக்கு செல்வதில்லையா?
- உங்கள் குடும்பத்தின் தேவைகளை கவனிக்க முடியவில்லையா?
- காப்புறுதி நிறுவனம் பணம் செலுத்துவதை நிறுத்திவிட்டதா?
- இழப்பீட்டுத் தொகையைப் பெறுவதில் தாமதமா?

MOTOR VEHICLE ACCIDENT
Serious Injuries



Rocky Lofranco
Senior Partner

இலவச ஆலோசனைகளுக்கு அழையுங்கள்

**LOFRANCO CHAGPAR**
Personal Injury Lawyers

**வாகன விபத்து கோரிக்கைகளில் 75 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம் கொண்ட சட்ட நிறுவனம்**

தமிழில் சேவை வழங்கப்படும்
இலவச ஆலோசனைகளுக்கு
**இலங்கதாஸ் பத்மநாதன்**

**LANKATHAS PATHMANATHAN**

**416 774 8122**

TORONTO • BRAMPTON • MISSISSAUGA • KITCHENER

free consultation

# விரும்பியோ அல்லால் விதிவசமோ.... புலம்பெயர்ந்தோம்


முடிந்தவரை மேல்நாட்டவர் போல் வாழவும் பழகிக்கொண்டோம். இருந்தும் சில பின்னடைவுகள் எம்மிடம் எஞ்சி நிற்கின்றன. அதில் ஒன்றுதான் நீண்டகால பாதுகாப்பான ஆயுட்காப்புறுதி செய்யாதிருத்தல் என்பது. நெருங்கிய உறவுகளிலோ அல்லது நமது குடும்பத்திலோ ஒரு இழப்பு ஏற்பட்டபின் வரும் ஞானோதயம் யாருக்கும் உதவாது. ஆகையால் யாராவது ஒரு முகவரை அணுகி ஏதாவது நல்ல நிறுவனத்தில் கட்டாயம் ஆயுட் காப்புறுதி செய்து வையுங்கள். நீங்கள் தெரிவு செய்யும்

**அந்த முகவர் நானாக இருந்தால் எனக்கும் மகிழ்ச்சிதான்.**



**Life Insurance • Critical Illness Insurance • Creditor Insurance**
**Segregated Fund • Disability Insurance • RESP • RRSP**

digi Media



**Guna Selliah**
Life Insurance Broker
**416.371.7776**

RBC

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.

759 Warden Ave., Toronto,
Ontario, M1L 4B5
Tel: 416.759.5453 ext: 401
Fax: 416.759.6220
E-mail: guna@lilandinsurance.com

**Life Insurance • Critical Illness Insurance • Creditor Insurance(Mortgage) • Disability Insurance • RESP • RRSP • IVIC (Investment)**


RAMAN APPLIANCES INC.
• General Contractors • Sales • Service • Installation
• GAS Furnace
• Central Air Condition +Humidifiers +Air Cleaners
• Central Vacuum
• Security Alarm Systems
AUTHORISED DEALER
We Deal in All Makes and Models Service and Repair
அனுபவமும் சேவை நேர்த்தியும் கொண்டவர்களின் சேவை!
Residential & Commercial Alarm Systems
ADT
AUTHORISED DEALER
Alarm Guard Security Services Inc.
Please Call for a FREE in-home product consultation
RAMAN APPLIANCES INC.
Show Room: 3021 Markham Rd., Suite#51, Scarborough, ON.
416•930•5117 416•332•1989
ராமன் செல்லையா
Raman


வர்த்தக நிறுவனங்கள் வாங்க, விற்க...
Gas Station with Convenience
Two Acre land included
Asking Only $650,000
Vacant Store With Property
Including 5 Separate Apartments
Asking Only $389,000
Grocery Store
Scarborough
Asking Only $39,000
Fish And Chips
(Fast Food Eat In Restaurant)
Can Be Convertible Both Srilankan
And Canadian Restaurant
Including All Equipments
In Scarborough
Asking Only $29,000
SOLD!
Property for Sale
Vacant Store With Apartment
Asking Only $394,000
Brand New Industrial Building
Markham
Asking Only $562,000
Your #1 choice agent for commercial properties!
Commission as low as 1% *
* some conditions apply.
Plaza for Sale
Asking Only $2,099,000
Store With Office For Investment
Scarborough
Asking only $720,000
Baskaran Sinnadurai
Commercial & Residential Sales Representative
416.880.8585
HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd., Suite 206
Toronto, ON. M1S 2Y3
416.321.6969
HOMELIFE
HIGHER STANDARDS


# M and M CONSULTANTS

**Serving 21years in Canada**

**www.mandmconsultants.net**



- *Advice on Bankruptcy*
- *Credit Counselling*
- *Arrangement with Creditors*
- *Corporate Taxation*
- *Interview with CCRA and Ministry of Finance on Audit issues*
- *Settlement without Bankruptcy / Consumer Proposals*




**2075 Lawrence Ave East #203**
(Warden & Lawrence)
Scarborough, ON
M1R 2Z4
**Tel: 416-266-0706**
**Fax: 416-256-2876**

**3645 Bathurst Street #212**
(Bathrust & Wilson)
North York, ON
M6A 2E4
**Tel: 416-256-9550**

# SERANDIBTRAVEL.COM

## SPECIAL TOURS AVAILABLE NOW!


**KAILASH MANSAROVAR YATRA**

THE SPRITUAL TOUR TO THE ROOF TOP OF THE WORLD

>17 days / 18 nights

>Departures:
April 30th - September 3rd, 2007
(Every Monday)

>Cost: $4,980.00 CAD





**ALL INDIA PILGRIMAGE TOUR**

**MALAYSIA - THAILAND - CAMBODIA TOUR**

**GUIDED TOUR TO CUBA**

**AUSTRALIA & NEW ZEALAND TOURS**

**EUROPEAN TOURS**

Serandib Travel1

For tour packages and more information contact us or vist our website. TICO (retail) #:50012691

Toronto: 416-750-0009, Montreal: 514-448-1389,
Canada wide Toll Free: 1-888-207-0902
serandibtravel1@bellnet.ca www.serandibtravel.com

USA

| | | | |
|---|---|---|---|
| New York: | 716-408-0342 | Detroit: | 313-263-0610 |
| Washington DC: | 202-517-0139 | Chicago: | 312-625-1420 |
| Los Angeles: | 213-254-0119 | Miami: | 305-625-4102 |
| New Jersey: | 732-783-1513 | Honolulu: | 808-457-1730 |

# கோடை விடுமுறை



## திரு மகேசன்


கோடைகால விடுமுறை வரப்போகின்றது. எங்கே போகலாம்? எப்படிப் போகலாம் என்று மண்டையைச் சொறிந்தபடி மன உளைச்சலை இலவசமாக வாங்கிவிட நம்மில் பலர் தயாராவது எமக்குத் தெரியாமல் இல்லை. நாம் பிறந்த மண்ணில் நம்மால் பார்க்காமல் தவறவிடப்பட்டவற்றை எண்ணி மனம் இன்னமும் கலங்கிக் கொண்டிருக்கிறது. அழகிய மலைச்சிகரங்கள், பண்டைய கற்சிற்பங்கள், நீலக் கடற் பரப்புகள், மலர்த்தோட்டங்கள் என்று பட்டியல் இட்டுக்கொண்டே போகலாம். அந்த உறுத்தல் நின்றுவிடப் போவதில்லை. அவற்றைக்காணும் பாக்கியம் இனிக் கிடைக்குமா என்பதே ஒரு மிகப் பெரிய கேள்விக் குறியாகிவிட்ட இன்றைய கால கட்டத்தில், எம் வேலைப்பளுவுக்கு மத்தியிலும் மனதிற்கு ஒரு சின்ன ஒத்தடம் கொடுக்க ஒரு வழித்தடம் கிடைக்காதா என்று மனம் அங்கலாய்ப்பது தெரிகிறது.

உல்லாசப் பயணத்துறையில் சரியான வழிகாட்டி இன்றி புறப்பட்டால் எமது பயணம் இக்கட்டான கட்டத்திற்கு இழுத்துச் செல்வது நிச்சயம். எமது பயணத்தில் பணத்தையும் அள்ளிக் கொட்டிக்கொடுத்துவிட்டு அனுபவிக்காது மண்டையில் அடித்துக் கொண்டு வீடு திரும்புவதை விட, பாதுகாப்பான ஒரு பயணத்தை இதயத்தை வருடிக் கொடுக்கும்படிவழங்க வழிவகைகள் நிறையவே இருக்கின்றன. அவற்றை உங்கள் வசதிக்கேற்றவாறு வழங்குவதே இப்பயணக் கட்டுரையின் நோக்கமாகும்.

உங்களில் பலர் நிறைய பணத்தை அள்ளிக்கொட்டி கியூபா, மெக்சிக்கோ, கரிபியன் தீவுகள் என்று புறப்பட்டுப் போவதற்கு முன்பாக, நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த கனடிய மண்ணில் எத்ததனையோ சொர்க்க பூமியான இடங்கள் இருக்கின்றனவே, அவற்றைப் பற்றி ஏன் சிந்திப்பதில்லை? இதோ – அதற்கான வழிப் பயணத்திற்கான கதவை இக்கோடை விடுமுறையில் கழிப்பதற்கான கதவினை சிலர் உங்களுக்காகத் திறந்திருக்கின்றார்கள். அவர்களோடு கரங்கோர்த்து பயணிக்கத் தயாரா?

19ம் நூற்றாண்டின் அழகை அள்ளிச் சுமந்து நிற்கும் நயாகரா லேக் (Niaagara ON The Lake)இல் இருந்துதான் உல்லாசப் பயணிகளை அழைத்துச் செல்லும் பயணத்தைத் தொடங்குவது வழக்கம். வழிந்தோடும் நயாகராவின் அழகினைக் கண்களில் தேக்கிக் கொண்டு பயணம் ஆரம்பமாகும். 1812ம் ஆண்டின் பிரிட்டிஸ் அமெரிக்க யுத்தத்தின் மிகப் பெரும் களமாக இந்த நயாகரா நீர் வீழ்ச்சிப் பிரதேசம் இருந்ததென்பது அமெரிக்க சரித்திரத்தின் முக்கிய அம்சமாகும். இயற்கை அழகு அள்ளிக் கொழிக்கும் இப்பிரதேசத்தில் கண்ணைக்கவரும் அழகிய மனம் கவரும் வண்ண மலர்கள் நிறைந்து விளங்கும். இப்பிரதேசத்தை இரவுப் பொழுதில் அழைத்துச் சென்று உங்கள் மனங்களிலும் வண்ணங்களைத் தூவுவார்கள்.

இங்கிருந்து அடுத்த பயணமானது கியுபெக் நகரை நோக்கி ஆரம்பமாகிறது. மொன்றியோல் நகரத்தைத் தாண்டி கியூபெக் நகரத்தினுள் நுழையும் போதே நமக்கும் ஒரு சரித்திரப் பிரசித்திபெற்ற அழகியல் நிறைந்த நகருள் பிரவேசிக்கும் உணர்வு தானாகவே நம்மை ஆட்கொள்ளும். Ville De Quebec என்று பிரெஞ்சு மொழியில் அழைக்கப்படும் கியூபெக் நகரம் சரித்திரத்திலும் அழகிலும் ஒருங்கே சேரப்பெற்ற ஒரு அழகிய பிரதேசமாகும். இதனூடே பிரவேசிக்கும்போது நாம் யாழ்.கோட்டைப் பிரதேசத்தில் ஏறி விளையாடித் திரிந்த அந்தக் கால பாடசாலை நினைவுகள் நம்மை ஒரு கணம் நெஞ்சை நெருடத்தான் செய்யும். யூனெஸ்கோ அமைப்பால் உலக கலாச் சாரப் பிரதேசமாக (UNESCO declared world heritage site) அங்கீகரிக்கப்பட்ட இந்நகரம் யூலை 3, 1608இல் சாமுலேல் டீ சப்பிளீன் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. கியூபெக் நகரமானது ஆரம்ப காலங்களில் இரண்டாவது மிகப் பெரிய ஐரோப்பிய குடியேற்றமாக வட அமெரிக்காவில் தொடங்கப்பட்டது. பிரெஞ்சு குடியேற்றவாசிகளால் பல தடவைகளாக பிரித்தானியர்களுக்கிடையே ஏற்பட்ட முறுகல் நிலைகளைத் தாண்டி 18ம் நூற்றாண்டில் பிரான்ஸ் கியூபெக் நகரமாக ஏற்றுக்கொண்டார்கள். பழைய கியூபெக் (Old Qubec) வானுயர்ந்த அழகிய கோட்டைகளைத் தாங்கி கனடாவின் மகுடமாகத் திகழ்கின்றது. கியூபெக் நகர சரித்திரபூர்வமான கோட்டை அமைப்புகளை கண்குளிரக் கண்டுகொண்டு அடுத்த பயணத்தை பிரின்ஸ் எட்வேட் தீவினை நோக்கி நகர்வோம்.



**Confederation Bridge**

This 8 mile long bridge connects Prince Edward Island to New Brunswick (Canada). It is the longest bridge in the world to span ice covered waters.

Prince Edward island இன் கவர்ச்சிகரமான Charlotttownஇல் காலடி எடுத்து வைக்கின்றோம். கிட்டத்தட்ட 35,000 மக்கள் தொகையைக் கொண்ட இப்பிரதேசமானது Maritime கலாச்சாரமும் கனடாவின் சரித்திரமும் பின்னிப் பிணைந்த இடமாகும். 1864ம் ஆண்டில் நடைபெற்ற Charott town மகாநாடுதான் "The birth place of Confederation ஏற்படக் காரணமாய் அமைந்தது. இன்றும்கூட விக்ரோறியாவில், கட்டடக் கலையின் அமைப்புடன் கூடிய கட்டிடக் கலை வளர்ச்சியைக் காணக்கூடியதாய் இருக்கிறது.

Great George வீதியானது தேசிய சரித்திரப் பிரசித்திபெற்ற வீதியாக அரசால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. 18ம் நூற்றாண்டின் அரசன் மூன்றாவது ஜோர்ஜ் இன் மனைவி ராணி சார்லொற்றின் ஞாபகார்த்தமாகவே பெயரிடப்பட்டது. உல்லாசப் பிரயாணிகள் எந்நேரமும் நிரம்பிவழியும் இங்கே மிகப் பிரபலம் பெற்ற "Anne of Green gables – The Musical நிகழ்வை பலரும் பார்க்கத் தவறுவதேயில்லை.

நமது நாட்டின் கட்டமைப்பு உருவாகக் காரணமாக அமைந்த சார்லொற் நகரிலிருந்து அடுத்த நகர்வு நியூபவுண்லாந்து நோக்கிப் புறப்படுகிறது.

Deer Lake ஆனது Gros Morne தேசிய பூங்காவின் கதவாக அமைந்திருக்கிறது. அற்லாண்டிக் கனடியன் நகரமான இவ்விடமானது நியுபவுண்லாந்தின் மேற்குப் பிரதேசத்தில் அமைந்துள்ளது. 4800 மக்கள் தொகைகொண்ட இடமாகும். Deer Lake ஆனது 1951இல் நகரமாகப் பிரகடனப் படுத்தப்பட்டது. நீண்ட அழகிய மலைத் தொடர்கள், மணற்றரை நிறைந்த நீல வானக் கடற்கரைகளும், இயற்கை அழகும் மீன்பிடித் தொழிலை மூலதனமாகக் கொண்ட தொழில்களும் அழகிய மான்களும் நிறைந்த இந்த நகரமானது எம் மண்ணின் மகிமையை நமக்குள் நிச்சயம் கொண்டுவரத் தவறாது. அண்மையில் பெங்களூரில் இருந்து வந்த பேராசிரியை பிரியா சர்க்கார் தலைமையில் கலந்து

49ம் பக்கம் பார்க்க...





J.R.B Universal Inc.

Almost All Services Available

- கடன் - அடமானக்கடன் - காப்புறுதி

- Loans
- Mortgages
- Insurance Claims
- Traffic Ticket
- Auto/Life Insurance
- Scholarship Plan (RESP)
- Real Estate Related
- Credit Counselling
- Accounting
- Tax Services



R.R. Rajkumar
B.Com (Hons) M.B.A
Dip. In Accy.

• 7555 Fax: 416 • 752 • 7556
Cell: 416 • 937 • 9081
2390 Eglinton Ave. East, 206B, Scarborough, Ont. M1K 2P5



# உங்கள் இல்லக்கனவுகளின் திறவுகோல்

- Residential 1st, 2nd, 3rd Mortgage
- Refinancing/Renewal/Transfer
- Switch the mortgage without loosing/paying any cents
- Mortgage for new immigrants
- Mortgage for non immigrants
- Mortgage for social insurance starting with 9
- 0 down payment mortgage
- Mortgage for previously bankrupt
- Mortgage for no credit established
- Mortgage for self-employed
- Mortgage for poor credit
- Commercial mortgages
- Secured, Unsecured line of credit
- Debt consultation

**NO CMHC or Genworth Premium**

**Guaranteed lowest rate**

Questions pls call

**Thevan Kankesu**

Certified Mortgage Consultant

**Future Financial Inc.**

**Direct: 416.939.8789**

Office: 416.446.0077 ext. 224

## மார்க்கம் மாநகரில்...

# UCMAS

For 4 - 12 years old Children

உங்கள் குழந்தைகளிடத்தில் மறைந்துள்ள நினைவாற்றல், மனஒருமைப்பாடு மற்றும் தன்னம்பிக்கையை ஊக்குவிக்கிறது.

UCMAS மனக்கணிதம் கற்பதன் மூலம் உங்கள் குழந்தை கணிதப்பாடத்தில் ஒரு வல்லவராக திகழ அழையுங்கள்

**Contact: Suren**

**UCMAS Markham South Centre**
8 Shadlock St., Unit 5
Markham, ON L35 3K9
**416.821.2011**

- Whole brain development program for children
- Confluence of ancient art and modern science of calculation that bring about speedy and accurate calculation
- Help to remove the 'fear' of Mathematics in school
- Attainment of life long skills that is concentration, creativity attentiveness and self confidence




digi Media Creations

# அறியவில்லையானால் அறிந்து கொள்ளுங்கள்

## கனடாவில் சில தகவல்கள் - தெடர் 3

சிவ பஞ்சலிங்கம்



- ஆயுட்காப்புறுதி பிரதிநிதி -

**வாகன காப்புறுதி, மற்றும் வீடு, சொத்துக்கள், வர்த்தக நிலையங்களின் காப்புறுதி ஒப்பந்தங்களின் பிரகாரம் நட்டஈடுகள் கோரும்போது, ஏதோ ஒரு வழியில் தங்களுக்கு ஏமாற்றம் ஏற்பட்டால் அல்லது ஏதாவது திருப்தியீனம் ஏற்பட்டால் இது பற்றி முறைப்பாடு செய்து தீர்வுகாண வேண்டிய அரச நிறுவனம் யாது?**

இந் நிறுவனத்தினை ஆங்கிலத்தில் “General insurance Ombud Service” எனக் குறிப்பிடுவது உண்டு.

2002ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந் நிறுவனம், வாகன காப்புறுதி நட்டஈடு கோரலில் காப்புறுதிக் கம்பனிகளோடு உள்ள பிரச்சினைகள் உட்பட வீட்டுக் காப்புறுதி, வர்த்தக நிறுவனங்கள், மற்றும் சொத்துகள் காப்புறுதி தொடர்பான பிரச்சினைகளில் மட்டும் தீர்வு காண்பதற்கு வாடிக்கையாளர்களுக்கு உதவுவார்கள். (மற்றும் ஆயுள் காப்புறுதி, மருத்துவ உடல் காப்புறுதிகளில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு இந்நிறுவனம் தலையிடமாட்டாது. அத்தகைய பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண இன்னொரு நிறுவனம் உள்ளது.)

ரொரன்ரோவில் உள்ள இந்நிறுவனத்தின் தலைமை அலுவலகம் தொடர்பான விபரங்கள் வருமாறு:

**General Insurance Ombud service**
**10, Milner Business Court**
**Suit # 701**
**Toronto, Ontario M1B 3C6**

**Tel: 1-877-225-0446**
**Fax: (416) 299 4261**

கனடாவின் மத்திய அரச சட்ட விதிகளின் படி இயங்கும் இந்நிறுவனம் வாடிக்கையாளர்களின் முறைப்பாடுகளை எதுவித

**தகவல் தொடர் - 3**

செலவுகளுமின்றி இலவசமான முறையில் சம்பந்தப்பட்ட காப்புறுதிக் கம்பனிகளோடு தொடர்புகொண்டு ஒரு மத்தியஸ்தராக நின்று முன்வைக்கும் தீர்வினை காப்புறுதிக் கம்பனிகள் ஏற்றுக்கொள்வது வழமையாகும்.

ஆனால், இங்கு முறைப்பாட்டினை இந்நிறுவனத்திற்கு வழங்க முன்பு சில ஒழுங்கு முறைகள் உள்ளன.

முதலில் குறிப்பிட்ட நட்டஈடு காப்புறுதி ஒப்பந்தங்களில் உள்ள சட்டவிதிகள், மற்றும் குறிப்பிடப்பட்ட தொகை நிவாரணத்தினைப் பெற்றுக்கொள்ளும் உடன்படிக்கை, எவ்வளவு காலங்களுக்குள் இவற்றினைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பன போன்ற விதிகள் யாவும் ஒவ்வொரு உடன்படிக்கையிலும் தெட்டத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கும். இதனைப் பூரணமாகத் தெளிவுபடுத்திப் புரிந்துகொள்வதுடன், அது தொடர்பாக காப்புறுதிக் கம்பனியின் பத்திரத்தில் தவறுகள், முரண்பாடுகள் உள்ளன என்பது நியாயமாகத் தெரிந்தால், அதனைச் சுட்டிக்காட்டி, இதில் உள்ள நியாயம் எது என்பதனைக் காப்புறுதிக் கம்பனியின் நட்ட ஈடு வழங்கும் பிரிவுடன் பேசி தீர்வு காணலாம்.

சாதாரணமாக பேசித் தீர்வு காண முடியாவிட்டால் நட்டஈடு வழங்கும் பிரிவின் அதி உயர் தலைமை அதிகாரிக்கு (Chief Executive officer in claims Department) நேரடியாக முறைப்பாடு செய்வதன்மூலம் முரண்பாட்டினைச் சற்று மேல்மட்டத்திற்கு எடுத்துச் செல்லலாம்.

மூன்றாவது நிலைப்பாடாக ஒவ்வொரு காப்புறுதிக் கம்பனியிலும் “முறைப்பாடுகளுக்குத் தீர்வு காணும் உத்தியோகத்தர்” (Complaint Liarson officer) நிபுணத்துவம் பெற்ற உத்தியோகத்தர் இருப்பார். இவ்விசாரணை அதிகாரிக்கு முறைப்பாடு செய்து தீர்வு காணலாம்.

இம்மூன்று நிலைப்பாடுகளிலும் தீர்வுகாண முடியாவிட்டால் அல்லது திருப்தியான தீர்வு கிடைக்கவில்லையெனக் கருதினால், பிரச்சினையினை மனுசெய்யும் உச்ச நீதிமன்றம் போலவே மேலே குறிப்பிட்ட நிறுவனம் செயல்படுகின்றது.

இந்நிறுவனத்தில் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண என மத்தியஸ்தம் வகிக்க இருக்கும் உத்தியோகத்தர்கள். காப்புறுதி சட்ட ஒழுங்கு விதிகள் யாவற்றிலும் அனுபவம், புலமை நிரம்பப் பெற்றவர்கள். பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்கள் பக்கத்தில் நியாயம் இருக்குமானால் அந்த நியாயத்தினைத் தங்களது சட்ட வரையறைக்குள் நின்று இந்நிறுவனம் இலகுவாகத் தீர்த்துவைப்பார்கள்.

ஒரு சட்டவரையறையினுள் நின்று செயற்படும் இந்நிறுவனம், பின்வரும் நிலைகளில் உள்ள பிரச்சினைகளைக் கவனத்தில எடுத்துக்கொள்ள மாட்டாது. அவையாவன:

குறிப்பிடப்பட்ட ஒரு காப்புறுதி ஒப்பந்தத்தின் விலைகளில் உள்ள முரண்பாடுகள்.

ஒரு இழப்புக்கு நட்டஈடு இவ்வளவு என்பதும், பிரச்சினை ஒன்றுக்குத் தீர்வு இதுதான் என்று சட்டத்தினால் ஏற்கனவே வரையறை செய்யப்பட்டிருந்தால், அத்தகைய சட்ட ஒழுங்குகளை மீறி இந்நிறுவனம் தீர்வுகாண மாட்டாது.

சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சினை நீதிமன்ற விசாரணையில் இருந்தால், அதன் முடிவு தெரியாமல் அப்பிரச்சினையில் இந்நிறுவனம் தீர்வு காணமாட்டாது.

■ ■ ■

காப்புறுதி சம்பந்தமான
தேவைகளுக்கும்
ஆலோசனைகளுக்கும்

சிவ. பஞ்சலிங்கம்
B. Com,
Licensed Insurance Broker

416.321.0999

# கோடை விடுமுறை

47ம் பக்கத் தொடர்ச்சி...

கொண்ட 86 மாணவர் மாணவிகள் அடங்கிய பயணிகள், தமக்கு இந்தப் பிரதேசமானது தமது தாய்மண்ணான இந்தியாவை நினைவுபடுத்துவதாக கூறி, விசேடமாக இன்னும் ஒருநாள் மேலதிகமாக நியூ பவுண்லாந்தில் தங்கி தமது பயணத்தைத் தொடர்ந்ததை இந்த நேரத்தில் நினைத்துப் பார்க்கிறோம். தமிழர்களாகிய எமக்கு இப் பயணம் ஒரு தாயகப் பயணம் போன்றதே. நியூபவுண்லாந்தின் மலைச் சிகரமானது இரண்டாவது உயரமான மலைச் சிகரமாக விளங்கி 2664 அடி தொலைவு நோக்கியதாகும்.

அடுத்து நுழைவது Yellowknife, North west territories ஆகும். இரண்டு மிகப் பிரதான ஏரிகளாக விளங்கும் Great slave lake, Yellowknife lake இங்கே காணப்படுகின்றன. 19ம் நூற்றாண்டில் இங்கே தங்கம் தோண்டும் வேலைகள் மும்முரமாக ஆரம்பிக்கப்பட்டன. 21ம் நூற்றாண்டில் தங்கம் தோண்டும் வேலைகள் இங்கே நிறுத்தப்பட்டு, Diamond mining தொழில் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது. 2.1 பில்லியன் டொலர் பெறுமதியான மாணிக்கக்கல் வியாபாரமானது இப்போது இப் பிரதேசத்தில் இடம்பெறுகிறது. உலகின் 3ஆவது இடத்தை இது பிடிக்கின்றது. எட்டுக்கு மேற்பட்ட மொழிகள் பேசப்படும் இங்கே கனடாவின் மூத்த குடியினர் என்று சொல்லப்படும் Native India வின் கலாச்சாரம் இன்னமும் பேணிப் பாதுக்கப் படுகின்றது.

அடுத்ததாக Yukon இல் அமைந்திருக்கும் டோசன் நகரம் நோக்கி பயணமாகலாம். இதுவும் 10ம் நூற்றாண்டில் தங்கம் தோண்டும் ஒரு நகரமாகவே இருந்தது. இங்கே அமைந்திருக்கும் Diamond Tooth Gerties Gambling Hall எந்நேரமும் உல்லாசப் பயணிகளால் நிறைந்திருக்கும். நீங்களும்



*Old Quebec City*

> **இப்பத்தான் இங்கேயே எவ்வளவு விடயம் பார்க்க இருக்கிறது எண்டு தெரியுது.”**

இங்கே சிறிது நேரம் நின்று உங்களின் அதிஸ்டத்தைப் பரிசோதிக்கத் தவற வேண்டாம். இங்கிருந்து white horse சென்று அதன் அழகை ரசித்து Follies cancan dancing show இலும் கலந்துகொண்டு பிரிட்டிஸ் கொலம்பியா நோக்கி நகர்வோம்.

Sandsdit, Skidegate நோக்கி நகர்வோம். பிரிட்டிஸ் கொலம்பியாவின் அழகு சேர்க்கும் Morsby island, Queen charlotte island போன்றவை காணக் கண்கோடி வேண்டும். பிரிட்டிஸ் கொலம்பியாவினுள் பிரவேசிக்கும் எமக்கு அங்கே நிலவும் இந்தியக் கலாச்சார வெளிப்பாடுகள் மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கத் தவறுவதில்லை. வன்கூவர் நகரத்தின் சனத்தொகையில் ஈழத் தமிழர்கள் கணிசமான அளவு இடத்தைப் பிடித்திருக்கிறார்கள். ஒலிம்பிக் நகரம், எக்ஸ்போ சிற்றி போன்றவை நமக்கு காணக்கிடைப்பது ஒரு வரப்பிரசாதமே.

இங்கிருந்து நாம் கல்காரி, எட்மன்டன் உள்ளடக்கிய அல்பேர்ட்டா காணப் ஆபாகலாம். 1988ல் வின்ரர் ஒலிம்பிக் நடைபெற்ற கல்காரி நகரம் அழகில் மிகப் பிரதானமானது. கனடாவின் றொக்கி மலைத் தொடரையும் Baniff தேசிய பூங்காவையும் உள்ளடக்கியது எட்மண்டன் (Edmonton) அல்பேட்டாவின் தலைநகரமாகும். உலகின் மிகப் பெரிய Shopping centre இங்குதான் காணப்படுகிறது. West Edmonton Mall எனப்படும் இதனுள்ளே ஒரு மிகப் பிரமாண்டமான indoor wonder land காணப்படுகிறது. அங்கு பயணிப் போர்களில் பலர் இங்கேதான் தமது தேவைக்குரிய பொருட்களை மிக மலிவாகப் பெற்றதாக தெரிவித்துள்ளனர். தமிழர்கள் சனத்தொகை இப்போது இங்கே அதிகரித்து வருகிறது. இங்கே Jaspar தேசிய பூங்காவைத் தவறவிடவே கூடாது. இங்கேதான் உங்களது கனடாவின் பிரயாணம் முற்றுப் பெறுகிறது.


எந்தவித களைப்புமின்றி சகல இடங்களையும் கண்குளிரக்கண்டு களித்து, தமது இடத்திற்கு மீண்டும் வந்த இராமநாதன் ஐயா சொன்னதுதான் நினைவுக்கு வருகிறது. “தம்பி, இவ்வளவு காலமும் நாங்கள் ஸ்காபுறோவுக்குள்ளை இருந்து குண்டுச்சட்டிக்குள் குதிரை ஓட்டினதுதான் வேலை. இப்பத்தான் இங்கேயே எவ்வளவு விடயம் பார்க்க இருக்கிறது எண்டு தெரியுது.”

என்ன அருமையான வார்த்தை! கோடை விடுமுறைக்கு எங்கே போவது என்று மண்டையைச் சொறிவதை விட்டு இராமநாதன் ஐயா போன்றவர்களின் வார்த்தையை ஒரு முறை நினைத்துவிட்டு புறப்படத் தயாராகுங்கள்!

நாங்கள் ரெடி. நீங்கள் ரெடியா?

# நிலம்சார் மோசடியும் உங்கள் வீடும்

## Real Estate Fraud & Your Home



T.M. கேசவன்
- Barister & Solicitor -
Legal Practitioner

